

31192

வயலூர் தல வரலாறு

உ

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோவில்

வயலூர் (P·O) திருச்சி வட்டம்.

வயலூர் தல வரலாறு

இயற்றியவர் :

கவிதாமணி, உபயபாஷா ப்ரவீணி

செந்தமிழ்க் கவிதைச் செம்மல்

அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்

திருச்சி.

★

வயலூர் திருக்கோயில் வெளியீடு

விலை : ரூ. 4—00



சக்தி தீர்த்தம்

ஆலய நிர்வாகம்

திரு. M. சுந்தரராஜன், M.A.,
அறங்காவலர் குழுத்தலைவர்.

திரு. M. இராசமாணிக்கம்
திரு. A. கோவிந்தன்
அறங்காவலர்கள்.

★

திரு. K. தியாகராஜன், B.Com.,
நிர்வாக அதிகாரி.
குமார வயலூர் P.O. திருச்சி மாவட்டம்

உ

முருகா

அணிந்துரை

"ஞானமலது கதி கூடுமோ" என்கின்றார் தாயுமானார் ஞானம் ஒன்றுதான் முத்திக்கு ஏதுவாகும். சரியை, கிரியை யோகம் என்பவை ஞானத்தை விளைவிக்கின்றன.

இத்தகைய ஞானம் விளையும் திருத்தலம் வயலூர் என்ற புனித க்ஷேத்திரமாகும். இத்தலம் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே யமைந்துள்ளது. "ஆ" என்ற காமதேனு தவஞ் செய்த ஆதவத்தூர் (அதவத்தூர்) சோமன் வழிபட்ட சோம ரசம்பேட்டை முதலிய தலங்கள் சூழ விளங்குவது வயலூர்.

இங்கு கந்தவேள் வேலினால் ஒரு திருக்குளத்தை யுண்டாக்கி சிவபெருமானை வழிபட்டார். அத்தீர்த்தம் "சக்தி தீர்த்தம்" எனப்படும். அக்கினி தேவனும் வழிபட்டதால் அக்னீஸ்வரர் என்பது சுவாமியின் பேர்.

ஆன்மாக்கள் மூன்று வகைப்படும். ஒரு மலமுடை ஆன்மாக்கள் விஞ்ஞான கலர், இரு மலமுடைய ஆன்மாக்கள்—பிரளயாகலர், மும்மலமுடைய ஆன்மாக்கள்—சகலர்.

விஞ்ஞான கலருக்கு இறைவன் தன்மையாக முன்னின்று அருள்புரிவான்.

பிரளயா கலருக்கு திருமேனி தாங்கி முன்னின்று அருள் புரிவான்.

சகலருக்கு படர்க்கையில் குருவடிவில் கருணை புரிவான்.

தன்னிலை, முன்னிலை, படர்க்கை எனக்கூறுவர். இங்குள்ள தேவி "முன்னிலை நாயகி" யாகும். மிகுந்த கருணை நிறைந்த சக்தி. அருள் செய்வதில் பொய்யாதமூர்த்தி யாதலால், இங்குள்ள விநாயகர் "பொய்யாக்கணபதி" எனப்படுவர். விநாயகர் மிகுந்த வரதர்.

"அருளிற் சீர்பொ யாத கணபதி
திருவக் கீசன் வாழும் வயலியில்
அழகுக் கோயில் மீதில மருவிய பெருமாளே"

இத்தலத்தில் அருணகிரியார்க்கு முருகன் மயில்மிசை காட்சி தந்து திருப்புகழ் பாடும் அதியற்புதமான ஆற்றலை யருள்புரிந்தார்.

" வயலி நகரில் அருள்பெற மயில்மிசை
உதவு பரிமள மதுகர வெகுவித
வனச மலரடி கனவிலு நனவிலு
மறவேனே "

" பாத பங்கயம் உற்றிட உட் கொண
டோது கின்ற திருப்புகழ் நித்தம்
பாடு மன்பது செய்ப்பதியில்தந் தவனீயே "

என்ற அருணகிரிப்பெருமான் திருவாக்குகளால் அறிக.

ஞானவரோதயர் என்ற ஒரு சிறந்த அடியார்க்கு அருள் புரிந்த திருத்தலம் இது. ஞானவரோதயர் கந்தபுராணத்தின் ஏழாவது காண்டமாகிய உபதேச காண்டம் பாடியவர். விராலிமலைத் தலபுராணமும் இவர் பாடியருளியுள்ளார்.

மகா புனிதர் தங்கிய இந்த வயலூரைப்பற்றி யாவரும் அறிந்து உய்வு பெற வேண்டும் என்று திரிசிரபுரம்—அன்பும், பண்பும், சீலமும், ஞானமும் ஒருங்கே படைத்த உயர்திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள், கங்காநதி போண்ட தண்டமிழால் வயலூர் வரலாற்றை எழுதி யுதவினர்.

நமது ரெட்டியார் அவர்கள் சிறந்த உத்தமசீலர். வட மொழியிலும், தென்மொழியிலும் வல்லவர். பல நூல்கள் எழுதி தமிழுலகுக்கு உதவியுள்ளார்.

நம் சமய உலகுக்கு வயிரத்தூணாக இருந்து நலம் புரிகின்ற வலம்புரிச் செல்வர் ரெட்டியார். பூசும் நீறுபோல் மாசிலாத மனம் படைத்தவர்.

இந்த வயலூர் மான்மியத்தை வயலூர் திருக்கோயிலார் வெளியிடுகின்றார்.

இந்த அரிய நூலை எல்லோரும் படித்து வானோரும் போற்றும் ஞானவாழ்வைப் பெறுவார்களாக.

அன்புள்ள
-கிருபானந்தவாரி

முன்னுரை

சின்னஞ்சிறு வயதுமுதல் என்னையாண்டு, என் இதய மூர்த்தமாக விளங்கும் ஸ்ரீ முருகப்பெருமானைப் பற்றி எழுத எனக்குக் கிடைத்த பேறாக இந்நூல் எழுதுவதைக் கருதினேன்.

வயலூர் தலபுராணம் ஞானமணி, வித்துவான், திரு. வை. இரத்தினசபாபதி அவர்கள் இயற்றியுள்ளதை அடிப் படையாக வைத்தும், பலரிடம் செய்திகள் கேட்டும், ஆராய்ந்தும் இந்நூலை உருவாக்கினேன்.

நான் கேட்டபொழுதெல்லாம் புள்ளிவிபரங்கள், செய்திகள் கொடுத்து உதவிய திரு. இரா. சிவதேவு, திரு. அ. சேதுரத்தினம், திரு. லிங்கையன் செட்டியார், திரு. பாலசுப்பிரமணியன், திரு. சொக்கநாதன் ஆகியோருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூலுக்கு அணிந்துரை நல்கி ஆசீர்வதித்த திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் பொன்னார் கமலங்களுக்கு எனதுஅஞ்சலிகள். ஞானமணி, திரு. வை. இரத்தின சபாபதி அவர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றியை உரிமையாக்குகின்றேன்.

"என்னை நன்றாய் இறைவன் படைத்தான், தன்னை நன்றாய் தமிழ்ச் செய்யுமாறு" என்றார் திருமூலர். அதனையே வயலூர்வள்ளல் எனக்கும் வழங்கினான் என்று நம்புகின்றேன்.

"குருமணியே! கண்மணியே முருகா என்றன் கூடு விடுபடும் போதும் உன்னைக் கூறச் செய்வாய்". ஆவியது விடுபடும் போதும் நின்பதங்கள் பற்றி அச்சமற்று நானிருக்க உடனிருப்போன் நீயே! என்று எம்பெருமான் திருவடியில் பிரார்த்திக்கின்றேன்.

இந்நூலைப் படித்துப் பயன் அடைய இருக்கும் தமிழ் உள்ளங்களுக்குத் தெய்வ நலத்தையே சிந்தையில் தேக்கி இன்புறும் எனது வாழ்த்துக்களை காணிக்கையாக்குகின்றேன்.

எழுத்தாளன் அலுவலகம், அ. வெ. ர. கிருஷ்ணசாமி
திருச்சி.

வயலூர் தல வரலாறு

முதற் பதிப்பு : 1976-ம் வருடம் 3000 பிரதிகள்

இரண்டாம் பதிப்பு : 1982-ம் வருடம் 5000 பிரதிகள்

மூன்றும் பதிப்பு : 1989-ம் வருடம் 5000 பிரதிகள்

உபயோகிக்கப்பட்ட காகிதம் : சேஷசாயி வெள்ளைத்தாள் டபுள் கிரவுன், 11-6.

பக்கங்கள் : 104

வெளியிட்டவர்கள் : அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தினர்

தொகுப்பு ஆசிரியர் : கவிதாமணி அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்

அச்சிட்டவர் : கண்ணன் அச்சகம், திருச்சி-2

படங்கள் : வயலூர் விருந்தினர் விடுதி
அருள்மிகு பொய்யாக்கணபதி
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி
அருள்மிகு முத்துக்குமாரசாமி
அருள்மிகு சுந்தரத்தாண்டவ மூர்த்தி முன்புறம்
,, ,, பின்புறம்
திருப்புகழ் அருணகிரிநாதர்
திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமி

விலை : ரூ. 4-00 நான்கு ரூபாய்

உள்ளுரை

1.	வயலூருக்கு வாருங்கள்	1
2.	வயலூர் பதியும் மாமன்னனும்	7
3.	அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்	11
4.	அருணகிரிநாத சுவாமிகள்	14
5.	வயலூர் தலத்தின் மாண்பு	19
6.	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி	25
7.	கல்வெட்டுகள்	35
8.	நெஞ்சம் மறக்காத நினைவு	39
9.	செய்குறுணி பாத்தியம்	45
10.	வாரியார் சுவாமிகள்	49
11.	தினசரி பூசையும் திருவிழாக்களும்	56
12.	வயலூர் திருப்புகழ்	57
13.	வயலூர் பாதை	72
14.	நிர்வாக அமைப்பும் நெறிமுறையும்	75
15.	துதிப்பாடல்கள்	78
16.	செயல் அலுவலர்கள்	83
17.	அறங்காவலர்கள்	84
18.	வயலூர் பதிற்றுப் பத்தந்தாதி	86



குமாரவயலூர் ஆலயத்தின் விருந்தினர் மாளிகை

அருள்மிகு பொய்யாக் கணபதி



வயலூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி

உ

வயலூருக்கு வாருங்கள்

அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்ததாக எல்லாம் அறிந்ததாக எதுவும் வல்லதாக, விளங்கும் பரமகருணையை உள்உணர்வினால் உணர்ந்து, அறிந்து, தெளிந்த மேலோர் அதுவே பரம்பொருள் என்று கண்டார்கள்.

எங்கும் நிறைந்த அந்தக் கருணை, சில இடங்களில் கால் கொண்டு, உயிர் வகைகளுக்கு உதவுவதற்கு எழுந்த இடங்கள் புனிதப் பதிகளாக புண்ணிய ஸ்தலங்களாகவும் போற்றப் படுகின்றன.

அடியார்கள் அந்த இடங்களில் இறைவனுக்கு ஆலயம் எடுத்து, விக்கிரகம் ஸ்தாபித்து, யந்தர, மந்திர, தந்திர முறைகளால் அருளைப்பெற வழிவகை செய்தார்கள்.

இவ்வாறு அருளாளர்களாலும், சித்தர்கள், ஞானிகள் அரசர்களாலும் ஆங்காங்கு அமைக்கப்பெற்ற ஆலயங்களே இன்று நம் கண்முன்னே காட்சி தருகின்றன.

ஆலயங்கள் ஆண்டவனின் அருளை மக்களுக்கு வழங்கும் திவ்விய திருக்கூடங்கள். தொன்றுதொட்டு மக்களைப் புனிதப் படுத்திவரும் புண்ணிய நிலையங்கள். வான் கருணையை மண்ணுக்குத் தேக்கி வழங்கும் கருணை சாகரங்கள் நமது ஆலயங்கள்.

அருள் வழங்கும் ஆலயங்கள் இல்லாத ஊரில் மக்கள் குடியிருத்தல் ஆகாது. ''கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது தமிழ் அவ்வையின் திருவாக்கு.

சின்னஞ்சிறிய ஊர் என்றாலும், பெரிய நகரமே என்றாலும் ஒரு கோயில் இன்றியமையாதது என்பதால்தான், நம் முன்னவர்கள், கோயிலைக் கட்டிய பிறகே, குடியிருக்க வீடுகள் அமைத்தார்கள். கோயிலைச் சார்ந்த குடியிருப்பு எங்கும் அமைந்தன.

ஒரு கிராமம் — நகரம் இவற்றின் சிறப்புக்கு அங்கு அமைந்த ஆலயம்—மூர்த்தி ஸ்தலம், தீர்த்தம், மூன்றும் பிரதானமாகக் கொள்ளப்பட்டன.

வானிலிருந்து மழை பொழிந்தாலும் அது வீழும் இடம் தேங்கும் இடம், மண்ணிலிருந்து அது ஈர்த்து தனதாக்கும் சௌலப்யம் இவற்றால் தண்ணீர் சிறப்பு அடைகிறது. ''நீர் இன்றி அமையாதது உலகு'' என்பதால் ஓர் ஆலயத்தில் அமைந்த நீர், புனிதம் நிறைந்ததாக, பெருநோய்கள் தீர்ப்பதாக, பாபம் போக்குவதாக, பிறவி பிணிக்கு உற்ற மருந்தாகவும் உதவுகின்றது.

ஒவ்வொரு ஸ்தலத்திற்கும், ஸ்தல விருக்ஷம் ஒன்று உண்டு. அந்த விருக்ஷம் ஸ்தலத்தின் சிறப்பைக் காலாகாலத்தில் எடுத்துரைக்கும் சின்னமாகப் போற்றப்படும்.

ஆதியில் ஸ்தல விருக்ஷங்களுக்கடியில் மூர்த்தங்கள் எழுந்தருள்வதுண்டு. மூர்த்தங்களைப்போலவே விருக்ஷங்களும் போற்றப்பட்டுத் துதிக்கப்பட்டு வருபவைகள்.

சுயம்புவாக எழுந்த மூர்த்தங்கள், சித்தர்களால், ஸ்தாபிக்கப்பட்டவை, கனவில் தோன்றி எழுந்தருள் செய்த மூர்த்தங்கள் என மூவகைப்படும். பிற்காலத்தில் மன்னர்களாலும் மக்களாலும் ஆங்காங்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டு மூர்த்தங்கள் தோன்றின.

ஆலயங்கள் முச்சந்தியில் அமைக்கப்பெற்றவையாக இருக்கும். ஆலயம் அமைக்க முன்வருவோர் முதலில் இடத்தைத் தேர்ந்தெடுப்பார்கள். அந்த இடத்தை உழுது பயிர் செய்வார்கள். அந்தப் பயிரை மேய பால் கறக்கும் பசுவையும் கன்றையும் அதில் விடுவார்கள்.

தாய்பசு மேய்ந்து கொண்டிருக்கும் போது கன்று பால் குடித்துக் கொண்டேயிருக்கும். பசு தன்னையறியாது நெகிழ்ந்து பால் சொரியும். கன்றின் கடைவாயில் பால் கசிந்து பூமியைப் புனிதப்படுத்தும். இவ்வாறு கன்றின் வாயில் கசிந்த பாலால் புனிதப்படுத்தப்பட்ட பூமியில்தான் ஆலயம் அமைப்பது முன்னவர்கள் கையாண்ட முறை.

தன்னை மறந்தும் பால் சொரியும் பசு, காட்டிக் கொடுத்த மூர்த்தங்கள் தமிழகத்தில் ஏராளம். பசு காட்டிக் கொடுத்த மூர்த்தங்கள் எவையானாலும் அவை சுயம்பு மூர்த்தங்களாகவே இருக்கும்.

எழுத ஒண்ணாத கருணையை எங்கும் நிறைந்து எல்லா மாகி இருக்கும் பரம்பொருளை அருவமாக இருக்கும் அந்தப் பரம கருணையைத் தம் மனத்திற்குப் புலப்படுத்திய சொருபத் தில் அருளாளர்கள் மூர்த்தங்கள் அமைத்தார்கள்.

மனித மனத்தின் விருப்பத்திற்கிசைத்து மூர்த்தங்களின் வடிவங்கள் எழுந்தன. இளமை, அழகு, வீரம், ஞானம், இகபர சுகம், கல்வி, செல்வம், சக்தி, ஆயுள், புத்திரப் பேறுவாய்க்க, வரும் இடையூறு நீங்க, தம்மை ஆபத் திலிருந்து பாதுகாக்க, ஆரோக்கியம் நல்க இவ்வாறு எத்தனை விருப்பங்கள் மனித குலத்திற்குண்டோ, அத்தனை மூர்த்தங் கள் அமைக்கப்பட்டன.

ஆதி சங்கர பகவத் பாதர் இத்தனையும் ஒன்று திரட்டி ஆறு மதங்களாகப் பிரித்தார். காணபத்தியம் (விநாயகர் வழிபாடு), சைவம், வைணவம், சாக்தம் (சக்தி வழிபாடு), கௌமாரம் (முருகன் வழிபாடு), சௌரம் (சூரிய வழிபாடு) ஆகிய வழிபாடுகள் தோன்றின.

தனித்தனியாகத் தோற்றம் அளித்தாலும் பரம்பொருள் தத்துவம் ஒன்றுதான் என்பதையும் சங்கரர் நிலை நாட்டினர்.

உயர்ந்த மலை, அருகே ஒரு ஆழ்கடல், சாதுவான மான்—அருகே பயங்கரமான புலி. மணம் நிறைந்த மலர்—அருகே ஒரு விஷ மூலிகை. தாவரங்கள், மிருகங்கள், பறவைகள், புழுக்கள், பூச்சிகள் எண்ணிக்கையிலடங்கா வண்ணப் படைப்புக்கள் இருந்தாலும் அத்தனை வடிவங்களிலும் உள்ளிருந்து இயங்குபவன் இறைவன் ஒருவனே என்பதை நம் முன்னர்த் தோன்றும் இயற்கையும், உயிர் வகைகளும் நமக்கு விளக்குகின்றன அல்லவா?

கல்லையும், மண்ணையும், மரத்தையும் நாம் தெய்வங்களாகப் போற்றுவது, இவை அனைத்திலும் இருப்பவன் இறைவன் என்பதினுல்தான் அல்லவா? எல்லா உயிரும் இறைவன் ஆலயம் என்பது இந்துமதக் கொள்கை. அனைத்துயிரிலும் மறைந்திருக்கும் அந்த அருவத் திருமேனிக்கு உருவத் திருமேனி அமைத்தவர்கள் அருள் பழுத்த நெஞ்சத்தினராகிய மெய்ஞ்ஞானிகள் ஆவர்.

நமது புலன் உணர்வுகளுக்குப் புலப்படும்படி அருளாளர்கள் ஆற்றுப்படுத்தியவைகளே நமது ஆலயங்களும் ஆங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்தங்களும் ஆகும்.

ஆலய அமைப்பு, ராஜகோபுரம் கற்பக்கிரகம், மகா மண்டபம், அர்த்த மண்டபம் கொடி மரம் அனைத்தும் வெகு நுட்பமான ரகசியங்கள். ஆலயங்களில் நடைபெறும் கிரியைகள் உற்சவங்கள் நமக்கு மறை விளக்கும் பாடங்கள். கோபுர தெரிசனம் கோடி புண்ணியம் என்பதெல்லாம் அனுபவித்தவர்கள் நம்மை ஆற்றுபடுத்திய வாசகங்கள்.

இளமை, அழகு, வீரம், ஞானம் தரும் தெய்வ நலனே, முருகனாக வடிவெடுத்தது. இளங்குழவிகளும் ஈடுபாடு கொள்ளும், அழகு வடிவம். அனைவரையும் தன்பால் ஈர்க்கும் காந்தம் போன்ற வடிவழகு திருமுருகனது மூர்த்தம்.

யால் மருகனுக. வெற்றிவேல் முருகனுக, தமிழகத்தின் தனிப்பெருந் தெய்வமாக, ஆறுபடை வீடு அமர்ந்த செல்வனுக. ஏழை எளியவர்க்கும் வரம் தரும் வள்ளலாக வற்ருத வான் கருணையாக, விளங்கும் முருகப் பெருமான் செந்நெல் வயல்களுக்கு நடுவில் அமர்ந்து சித்தர்களும் முத்தர்களும் தேடி வந்து சேவிக்கும் சிறப்புடன் வயலூரில் தனித்தன்மையில் கொலுவமர்ந்திருக்கிருன். வந்து தெரிசித்து வாழ்வில் வளம் பெறுவோம் வாருங்கள் வயலூருக்கு.

புலன் உணர்ச்சிகளின் வசப்பட்டுப் பொய்யான வாழ்வை மெய்யென்று நம்பி மோசம் போகிறவர்களைத் தடுத்தாள வென்றே நிறைகனியாகிய மாதுளங்கனியோடு பொய்யாக் கணபதி வயலூரில் வந்தமர்ந்திருக்கிருர். "கற்றிடும் அடியவர் புத்தியிலுறைபவ கற்பகமெனவினைக் கடிதேகும்" என வாக்குக் கொளுவராகிய அருணகிரிநாதர் போற்றும் கணநாதரைக் காண வயலூருக்கு வாருங்கள்.

தன்னை வந்து சரண் அடைந்தவர்களை மறவாமல் காத்து உயர்நிலைக்கு ஏற்றும் மறப்பிலிநாதர் என்னும் சிறப்புடன் விளங்கும் ஆதிநாதர் சன்னிதி வயலூரில் இருக்கிறது. வந்து தெரிசிக்க வாருங்கள் வயலூருக்கு.

அன்னை பராசக்தி, சத்தியவான்களுக்கு வீரவேலும், அறிருர்களுக்கு ஞானவேலும் தந்து அருளாட்சி செய்யும் மகாசக்தி, ஆதிநாயகி என்ற பெயருடன் ஆலயம் கொண்டிருக்கும் திருப்பதி வயலூர்.

ஆறுபடை வீடுகள் அமைத்து அடியவரின் அறியாமையையும் அசுரத் தன்மையையும் நீக்கும் அருள்ஞானச் செல்வன், வயலூரில் வந்து அமர்ந்து அடியவர்களுக்கு ஞான வைராக்கியப் பேறு வழங்குகிருன். முத்திதரும் திருத்தலமாக வயலூரைக் காட்டி அழைக்கிருன். அடியவர்களுக்கு இந்த மகத்தான உண்மை புலப்பட வேண்டும் என்றே "வயலூரையும் வைத்துப்பாடு" என்று அருணகிரிநாதருக்கு முருகன் உத்திரவிட்டதாக அருணகிரிநாதர் யாகான தமிழ்மொழியில் தெளிவாகக் கூறுகிருர்.

வயலூர், பக்தியைத் தரும் வயல், முக்தியைத் தரும் வயல், சித்தியைத் தரும் வயல், சிந்தனையைத் தரும் வயல், செந்தமிழ் தரும் வயல். கலையை வளர்க்கும் வயல், கற்பனையைத் தரும் வயல். ஊக்கத்தை தரும் வயல். உற்சாகத்தை ஊட்டும் வயல். பண்பாட்டைப் பயிரிடும் வயல். ஒழுக்கத்தை ஊட்டு விக்கும் வயல். சித்தர்கள் வதியும் வயல், திருசிரபுரம் மகா வித்வான் மீனாட்சி சுந்தரனார் அவதரித்த அதவத்தூர் வயலூரை அடுத்து இருக்கிறது.

சிந்திப்பவர் சிந்தனையைச் செம்மைப்படுத்தும் குருபீடம் வயலூர் முருகன் தெரிசனம். வந்திருப்பவர் வாதனையைத் தீர்க்கும் அருள் ஒளி வயலூர் முருகன் தெரிசனம்.

வயலூரருகிருக்க அயலூரைத் தேடி அலைவது ஏன்? கவிஞர்களே! வயலூரானைப் பாட வாருங்கள். கலைஞர்களே! உங்களிடம் உள்ள கலை சிறப்புற்று விளங்க வயலூரான் ஒளி பெற வாருங்கள். புலவர்களே! நாபடைத்த பயனைப் பெற வயலூரான் புகழ் பேச வாருங்கள் வயலூருக்கு. செல்வர்களே! நீங்காத செல்வம் நிரந்தரமாய் அமைய வயலூரானை வந்து பணிய வாருங்கள் வயலூருக்கு. சொல்லேர் உழவர்களே! சித்தவயலில் ஒளி கொண்டு உழுது சிவஞானப் பயிர் ஏற்றி, அருள் ஞான விளைவை ஏற்று உலகுக்கெல்லாம் அன்பு உணவு அளிக்க வாருங்கள் வயலூருக்கு உழைப்பாளர்களே உடல் திடம்பட, வறுமை நீங்க, பிணி அகல, துக்கம் தீர, துயரம் போக வயலூர் வள்ளலைப் பணிந்து ஆசிபெற வாருங்கள் வயலூருக்கு.

வயலூர் முருகனை வழிபட்டு, தமிழ்க் கடலாக, அருள் மொழி அரசாக விளங்கும் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், தாம் பெற்ற, பேறு அனைத்தும் வயலூரானை வழிபட்டதால் வந்த சித்தி என்று கூறி வழிகாட்டி நம் எல்லோரையும் அன்புடனும் பணிவுடனும் ஆற்றுப்படுத்து கிறார். வாருங்கள் வயலூருக்கு.

வயலூர் பதியும் மாமன்னனும்

சோழ வளநாடு உறையூரைத் தலைநகராகக் கொண்டு பெரும் புகழ் படைத்திருந்த காலம் வன விலங்குகளால் விவசாயப் பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டது. அந்தக் காலத்தில் மன்னர்கள் வன விலங்குகளை வேட்டையாடிக் குடி மக்களின் துயர் தீர்ப்பது வழக்கம்.

குடிமக்களின் குறை தீர்க்கச் சோழ மன்னன் உறையூருக்கு மேற்கே இப்பொழுது வயலூர் அமைந்திருக்கும் இடத்தில் வேட்டையாடினான். தாகம் எடுத்தது, களைத்துப் போனான். அப்பொழுது காவிரிக்குக் கரை அமைக்கப்படாத காலம். அருகில் தண்ணீர் கிட்டவில்லை.

ஓர் இடத்தில் கரும்பு மூன்று கிளையாக வளர்ந்திருந்ததை அரசன் கண்டான். கரும்பை ஒடித்துத் தின்றால் தாகம் தீருமென நினைத்துக் கரும்பை ஒடித்தான். ஒடித்த கரும்பிலிருந்து உதிரம் கசிந்தது. மன்னன் திடுக்கிட்டான். கரும்பைத் தின்றான் இல்லை. தனது காவலரை அழைத்து கரும்பின் அடியில் சோதித்துப் பார்க்கும்படி கட்டளை இட்டான். ஆங்கு ஒரு சிவலிங்கம் இருப்பதை அரசன் கண்டான்.

எம்மானே இங்கே தாங்கள் எழுந்தருளியிருப்பதைக் காட்டவா கரும்பில் உதிரமாகக் காட்டினீர்கள் என்று போற்றித் தொழுதான் சிறிய கோவில் அமைத்து வழி பட்டான்,

அன்று முதல் சோழ மன்னனுக்குத் தான் கண்ட மூர்த்தத்தின் மீது பக்தியும் பாசமும் எழுந்தன. அடிக்கடி வந்து அனுக்கிரகம் பெற்ருன்.

எம்பெருமானுக்கு அதி அற்புதமான பெரிய கோயில் அமைக்கத் திட்டமிட்டான். அரசனது திட்டம் எம்பெருமானுக்குச் சம்மதமில்லை என்று தெரிகிறது. அரசன் பெரிய ஆலயம் அமைத்தால் தனது அமைதி குறைந்து விடும் என ஆண்டவன் நினைத்தான் போலும்.

அரசனுக்கு முக்திப்பேறு ஈந்து வயலூர்ப் பதியின் வனப்பை ஆதிநாதர் காத்தார். இதுவே வயலூர்ப் பதியின் வரலாற்றுத் தொடக்கம் எனக் கர்ண பரம்பரையாகச் சொல்லப்பட்டு வருகிறது. ஆங்கு எழுந்த சுயம்பு மூர்த்திக்கு விடங்கர் என்ற திருநாமமும் ஏற்பட்டது.

ஆதிநாதர் என்றும், முச்சுடரின் மூலநாயகன் அவனே ஆதலால் அக்னிஸ்வரன் என்றும், தேவர் அனைவரிலும் உயர்ந்த மகாதேவன் என்றும், தன்னை அண்டியவர்களை மறவாமல் காப்பாற்றும் சிறப்புடையவனுயிருத்தலால் மறப்பிலி நாதர் என்றும் அடியார்கள் போற்றினுர்கள்.

இறைவன் திருநாமத்தையொட்டி வயலூரில் எழுந்தருளியிருக்கும் பராசக்திக்கு ஆதிநாயகி என்றும், முன்னிலை நாயகி என்றும் பெயர்கள் அமைந்தன.

வயலூரின் ஸ்தல விருக்ஷம் வன்னி மரம். வன்னி தீர்த்தமும் அமைந்திருந்தது. தாயைப் பூசனை செய்ய வயலூர் முருகன் சக்தி தீர்த்தம் வேலால் அமைத்தார் என்றும் அதுவே கோயிலின் முன்புறம் அமைந்திருக்கும் திருக்குளம் என்றும் சொல்வார்கள்.

ஆதிவயலூர் ஆதிநாதர் அமர்ந்த சிவஸ்தலமாகவே போற்றப்பட்டு வந்திருக்கிறது ஆதியும்—அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியை அக்கினி வடிவாகப் போற்றி ஆலயம் அமைத்து அரசர்களும், மக்களும் வழிபட்டு வந்திருக்கிருர்கள்,



வயலூர் சுந்தரத் தாண்டவ மூர்த்தியின்
முன்புறத் தோற்றம்

சித்தத்தை சிவன் பாலே வைத்த சித்தர்கள், தேடி வந்து கூடிய இடம் வயலூர். திருக்கோயிலைச் சார்ந்த தோப்புக்கு சித்தர்கள் தோப்பு என்று இன்றும் பெயர் வழங்கி வருகின்றது.

அடியார்களை என்று வந்தாய் என்று கேட்டு, மறவாமல் வரம் தரும் மறப்பிலிநாதர் வயலூர் அமர்ந்த சிவபெருமான். நினைப்பது நடக்கும். நெடிய திருமுன்றில் ஆதிநாதர் சந்நிதி. தொன்றுதொட்டு பிரார்த்தனை ஸ்தலமாகவும், அடியார் குறை தீர்க்கும் கோயிலாகவும், வயலூர் விளங்கி வந்திருக்கும் சிறப்பினைக் கல்வெட்டுகள் நமக்கு நினைவுபடுத்துகின்றன.

தென்புரம் பார்க்கும் சந்நிதி ஆதிநாயகி அம்மன் திருமுன்றில், வழிமேல் விழிவைத்து மைந்தர்களின் வரவு எதிர்பார்த்திருக்கும் தாயன்புக்கு ஆதிநாயகி அம்மன் சந்நிதி ஒரு எடுத்துக்காட்டு. அம்மன் சந்நிதி தென்முகம் நோக்கி இருப்பது அபூர்வம். வயலூரில் இயற்கையாகவே அம்மன் சந்நிதி இவ்வாறு அமைந்திருக்கிறது.

கல்லால் அடித்தும், வில்லால் அடித்தும், எச்சிலைத் தந்தும், வில்வதளத்தை பறித்துப் போட்டும், பிள்ளையை கரி சமைத்து விருந்துபோடும், அருள் அடியார் சிவபெருமானுக்கு உண்டு. அடியார்களின் தூய மனத்தையும் தொடர்ந்த பக்தியையும் கண்டே அருள் வழங்கும் அண்ணலாக வயலூர் ஆதிநாதர் விளங்கி வருகின்றார்.

இறைவன் மனிதனைப் படைத்து தனக்குத்தானே இன்பமும் துன்பமும் சிருஷ்டித்துக் கொள்ளும் மனத்தையும் மனிதனுக்கு வழங்கினார். தன்னை அறிந்து, தன்னைத்தான் ஆளும் தன்மையும் அறிந்தவர்கள், மாசற்ற கொள்கையை மனத்தில் அடைக்க, எச்சில் அவர்கள் உடம்பே காட்டுகின்ற அதிசயம் அறிந்து இறைவன் திருவடி அடைகிறார்கள்.

தன்னை அறிய முடியாதவர்கள் இறைவன் வழங்கிய "மனம்" என்னும் பொருளைக் குறிக்கும் மூன்று எழுத்துக்களில் "ம்" என்ற எழுத்தை உள்ளடக்கி எஞ்சிய "மன"

என்ற எழுத்துக்களை திருப்பினுல் "நம" என்று ஆவதை அறிந்து மனதையே இறைவனுக்குப் பலியாக இட்டு, எல்லாம் அவன் செயல் என்று கருதி "நம" என்று ஜபித்தால் இறைவன் பதத்தை அடையலாம் என்பதை வழிகாட்டினுர்கள் அனுபவ ஞானிகள்.

உறையூரை ஆண்ட கேசரி வர்மன், இராஜேந்திர சோழ தேவன், முதலாம் ராஜராஜ சோழன் முதலிய மன்னர்கள், வயலூர் கோயிலுக்கு நிலம், பொன், கொடுத்தும் விளக்கு எரிக்க நெய்க்கு மான்யமும், திருப்பதிகம் பாடுபவர் களுக்கு மான்யமும், நித்திய பூஜை நைமித்தியங்களுக்கு மான்யமும் வழங்கி கல்வெட்டும் அமைத்திருக்கிருர்கள்.

இராஜராஜ சோழன் உள்ளம் பெரிதும் கவர்ந்தவர் வயலூர் திருக்கோயிலில் இருக்கும் சுந்தரத்தாண்டவ மூர்த்தி.

இப்பொழுதுள்ள வயலூர் கோயிலுக்கு மேற்கே "ஐநூற்றுவன்" என்று பெயர் பெறும் ஐநூற்றுக்கால் மண்டபம் ஒன்று கட்டி ஆங்கு சுந்தர தாண்டவ மூர்த்தியை எழுந்தருளச் செய்து பெருவிழாச் செய்திருக்கிருன் இராஜ ராஜ சோழன் என்று கல்வெட்டு நமக்கு அறிவிக்கிறது.

இந்த கல்வெட்டின் மூலம் கி. பி. பத்தாம் நூற்ருண்டி லேயே, வயலூர் ஆதிநாதர்—ஆதிநாயகி, சுந்தரத் தாண்டவ மூர்த்தி பிரசித்தி பெற்ற ஸ்தலமாகவும் மூர்த்தங்களாகவும் விளங்கிய சேதியை அறிகிருேம்.

ஐநூற்றுக்கால் மண்டபம் பிற்காலத்தில் என்னவாயிற்று என்பது தெரியவில்லை

அன்னையும் — தந்தையுமான ஆதிநாதர்—ஆதிநாயகி யையே வழிபட்டு நம்மையும் ஆற்றுப்படுத்துகிருர் வயலூர் முருகப்பெருமான். அதனை சிந்திப்போம் வாசீர்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

சுவாமி மலையில் தந்தைக்கு உபதேசம் செய்த சுவாமி நாதனாக, தகப்பன் சாமியாகக் காட்சி தருகிறான் முருகப் பெருமான்.

திருச்செந்தூரில் தேவசேனாபதியாயும் சிவபெருமானை மலர்கொண்டு தனித்து நின்று பூசனைசெய்யும் சற்புத்திரனாகக் காட்சி தருகிறான் முருகப்பெருமான்.

திருப்பரங்குன்றில் தெய்வ குஞ்சரியை மணந்த திருமணக் கோலத்தோடு காட்சி தருகிறான் முருகப்பெருமான்.

திருவாவினன் குடியில் தண்டாயுதபாணியாக, ஞான பண்டிதனாக, ஞானப் பழமாகக் காட்சி தருகிறான் முருகப் பெருமான்.

திருத்தணிகையில் தெய்வ குஞ்சரி வள்ளியோடு சிறப்பாக வாழும் திருக் குடும்பஸ்தனாகக் காட்சி தருகிறான் முருகப்பெருமான்.

பழமுதிர்சோலையில் குன்றுதோறாடும் குமரனாக, குன்றின் மேல் ஏற்றி வைத்த தீபம் யானே என்று அடியார்களுக்கு அறிவிக்கும் குமரனாகக் காட்சி தருகிறான் முருகப்பெருமான்.

வயலூரில் ஒரு உண்மையை நமக்கு உணர்த்துகின்றார் முருகப்பெருமான். தந்தையையும், தாயையும் முன்னிருத்தி, அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதை நமக்குப் புகட்ட, அன்றூடம் தாய் தந்தையர் கழல் பணிந்து பூசனை புரிந்து அருள்பெற்ற பாலகராகக் காட்சி தருகிறார் வயலூர் முருகப்பெருமான்.

''தாயிற் சிறந்த கோயிலும் இல்லை'' ''தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை''. இந்த இரு வாசகங்களும் மக்கள் மனத்தில் பதியச் செய்ய, தானே இருந்து வழி காட்டுகிறார் வயலூர் முருகன்.

விடங்கர் என்றும், ஆதிநாதர் என்றும், அக்னீஸ்வரன் என்றும், பெரும் பெயர் பெற்ற வயலூர் சிவபெருமான், குமர பூஜிதநாதர், குமர பூஜித நாயகி என்ற பெயரையும் படைத் திருக்கிறார்கள்.

தேவ சக்திகள் வரம் தந்தாலும் மாதா — பிதாக்களாக பிதுர் தேவதைகள் அதனை ஆமோதிக்க வேண்டும். அவ்வாறு ஆமோதிக்கா விட்டால் தெய்வ வரம் கை நழுவிப் போகும் என்பதை ஸ்ரீருத்ரம் சமகத்தில் கடைசி வரி ''பிதர: அனும தந்து'' என்ற வேத வாக்கியம் நினைவுபடுத்துகிறது.

பிதுர் தேவதைகளாக, தாய் தந்தையரை போற்றுதவர்கள் வயலூரான் கழல் பிடிக்க முடியாது. தாய் தந்தையரை முன்னிருத்தி வழிபடுகின்றவர்கள் வயலூர் முருகன் திருவருளுக்குப் பாத்திரமானவர்கள் என்பதை நம் அனைவருக்கும் போதிக்கின்றான் வயலூர் ஞான பண்டிதன்.

தன் வேலால் சக்தி தீர்த்தமமைத்து தாய் தந்தையரை தேவரும் மூவரும் காண ஆத்ம பூஜை செய்து அகில உலகிற் கும் அருள் தந்து காக்கும் கற்பகமாக, காமதேனுவாக வரம் பெறுகிறான் வயலூர் முருகப்பெருமான்.

முருகப்பெருமான் ஏனைய ஸ்தலங்களிலும், தாய் தந்தை யரை பூசனை செய்வதாக வரலாறு உண்டே. வயலூருக்கு

மட்டும், இதில் தனிச்சிறப்பு என்ன என்று வினவலாம் அல்லவா?

மற்ற ஸ்தலங்களில் தனித்து நின்று பூசை செய்யும் முருகப்பெருமான் வயலூரில் தெய்வ குஞ்சரி வள்ளியோடு சேர்ந்து பூசனை செய்கின்ற தனிச்சிறப்பு பெற்றுத் திகழ் கின்றார்.

வேதத்தில் இரு பகுதிகள், "ஸம்ஹிதை, பிராம்மணம்" என்பனவாகும். ஸம்ஹிதை பகுதியில் மந்திரங்கள் இருக்கும். பிராம்மணப் பகுதி இம் மந்திரங்களின் பொருளையும், பயன் படுத்தும் வகையையும் விரித்துரைக்கும்.

வேதகால ரிஷிகள் தூய அக்னியில் மந்திரங்களை ஓதி ஹோமம் செய்வார்கள். அக்னீஸ்வரனை ஸம்ஹிதை, பிராம்மணம் என்னும் தெய்வ குஞ்சரி, வள்ளியோடு சேர்ந்து பூசனை புரிவது வயலூர் திருத்தலத்திலேயாகும். திருமணம் ஆனவர் சக பத்தினியோடுதான் கர்மாக்கள் செய்யவேண்டும் என்ற விதிமுறை தவறாது ஏழாவது படைவீடாக வயலூரை அமைத்து அம்மை—அப்பரை, சக குடும்ப தர்ம பத்தினிகள் சமேதராக, முருகப்பெருமான் பூசை செய்கிறார் என்பதே வயலூர்ப்பதியின் தனிச்சிறப்பாக அமைந்திருப்பதை ஆழ்ந்து சிந்தித்தால், சிந்தையில் தெய்வ மணம் கமழும் அதிசயத்தை உய்த்து உணரலாம்.

வயலூர் ஆலயத்துள் செல்பவர்கள் ஆதிநாதர்—ஆதிநாயகி இவர்களை வழிபட்ட பின்னரே முருகப்பெருமான் சந்நிதிக்குச் செல்லவேண்டும் என்பது சொல்லாமல் சொல்லப்படுகிறது. உணர்வுள்ளோருக்கு இவ்வுண்மை உணர்த்தப்படுகிறது.

வயலூரின் பெரும் புகழுக்குக் காரணம், திருப்புகழ் தந்த திருத்தலம் வயலூர் பதியே என்பதேயாகும். அந்த சிறப்பை யும் நாம் அறிந்து மகிழ்வோம் வாருங்கள்.

அருணகிரிநாத சுவாமிகள்

செந்தமிழ் மொழியில் தெய்வ நலம் கனியுமாறு பாடியவர் திருவருணையில் தோன்றிய அருணகிரிநாத சுவாமிகள்.

அன்று முதல் இன்று வரை வேறு எவரும் கையாளத் துணியாத சந்த வகையில், வீறுநடையில், அருவிகொட்டும் வேகத்தில், அன்னைத் தமிழில், அறுமுகவனைப் பற்றி அமுதத் தமிழ்பாடிய அருளாளர், அருணகிரிநாத சுவாமிகள்.

குன்றுதோறுடும் குமரனை, அறுமுகமாகத் தோன்றும் அண்ணலை, தமிழகத்தின் தனிப்பெரும் தெய்வத்தை, கவிஞர்குல நாயகனை, மால்மருகனை, மன்முடி மைந்தனை, வெற்றிவேல் முருகனை கன்னித் தமிழில் கனிந்துருகிப் பாடியவர் அருணகிரிநாத சுவாமிகள்.

சைவத்திற்கு நால்வர் மங்களாசாசனம் செய்தார்கள். வைணவத்திற்கு பன்னிரு ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்தார்கள். கௌமாரத்திற்கு தான் தனித்து நின்று மங்களாசாசனம் செய்த மாபெரும் அருளாளர் அருணகிரிநாத சுவாமிகள்.

சைவ, வைணவ பேதம் கற்பித்து மக்கள் மனத்தை சமய அறிஞர்கள் குழப்பிய காலத்தே இன்றைக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு, சைவம், வைணவம், சாக்தம்

காணுபத்தியம் ஆகிய நான்கையும் முருகன் புகழ் என்னும் திருப்புகழால் கட்டிக்காத்த பெருமான் அருணகிரிநாத சுவாமிகள்.

அருள் அடியார்களைப் பின்பற்றி தலந்தோறும் சென்று முருகன் புகழ் பாடிய முத்தமிழ் வித்தகர் அருணகிரிநாதர். தமிழ் கற்றவர்கள் கற்கக்கற்க சுவை தரும் சொற்களும் கருத்துக்களும் கொண்ட செந்தமிழ்க் கருவூலம் அருணகிரி சுவாமி தந்த திருப்புகழ்.

தமிழ் கல்லாதவர்களும், மொழி அறியாதவர்களும், அதன் ஓசை நயத்தாலே உள்ளம் கசிந்து உணர்வு பெற்று, சிந்தை குளிர செவி குளிர கேட்டு மகிழும் சிறப்புடையது அருணகிரிநாத சுவாமி தந்த திருப்புகழ்.

இத்தகைய ஒப்புயர்வு அற்ற திருப்புகழ் நிறைவு பெற, இறைவன் அருள்பாலித்த இடம் வயலூர். வாவென்று அழைத்து தேங்கிக் கிடந்த தெய்வ நலத்தை திறந்துவிட்டுப் பாடு என்று அருள் சுரந்த இடம் வயலூர் திருப்பதி.

அருணகிரிநாதர் பலநாட்கள் தங்கி முருகப்பெருமான் சன்னிதியில் நின்று, கனிந்து கனிந்து பாடிப் பரவசம் அடைந்த இடம், வயலூர் திருக்கோயில். அருணகிரிநாத சுவாமி அடிச்சுவடு பதியப்பெற்ற இடம், வயலூர் திருத்தலம்.

திருவருணைக் கோபுரத்திலிருந்து கீழே விழுந்த அருணகிரிநாதரை முருகப்பெருமான் ஓடிவந்து கரம்கொண்டு தாங்கிய பொன்னுடலின் புனித பாதம்பட்ட இடம் வயலூர் திருக்கோயில்.

"சும்மா இரு சொல்லற" என்று முருகன் முன்னின்று மொழிய, தீதுநீங்கிய திருமேனியில் சித்தத்தை சேவற் கொடியோன் திருப்பாத கமலத்தில் பதித்து, தன்னுள்ளே கனன்றெழும் சித்தாக்கினியில் தன்னை வென்று மறந்து நிற்க, சந்திரன் சோதியுடையதும், சத்திய நித்திய வஸ்துவும், மந்திரம்போல் இவ்வுலகெல்லாம் ஆட்டுவிக்கும் மாயக்

களிப்பெருங் கூத்தைக் கண்டு ஆனந்தப் பரவசராக அருண கிரிநாதர் நின்றபோது ''அருணகிரி நாடு அறிய நம் புகழ் நீ பாடு'' என்று முருகன் பணித்தார்.

வேதாகமங்களுக்கும் எட்டாத திருவடியையுடைய எம்மானே தேடு கல்வியில்லாச் சிறியேன் எங்ஙனம் நின்னைப் பாடுவேன் என்று ஏங்கினர் அருணகிரிநாதர்.

கன்றின் பசி கண்டு கனிந்தூட்டும் தாய் பசுவைப்போல முருகப் பெருமான் தமது திருக்கரத்திலிருக்கும் ஞானவேலால் அருணகிரிநாதர் நாவில் பிரணவத்தை எழுதி ''முத்தை என்ற மூன்று எழுத்தை முன்வைத்துப் பாடு என்று பணித்தார்.

அனைத்து ஞானத்திற்கும் ஆசானும், அருங்கலைவாணர் தெய்வமுமான பெருமான் முருகன் ''அருணகிரி நீ பாடுக!'' என்னலும், அறிவு மரிய தத்துவமும், அபரிமித வித்தைகளும் அறியென இமைப்பொழுதில் அருணகிரி சுவாமியை வந்து சேவித்தன

''முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபரன் எனவோதும்''

என்று திருப்புகழ் பாடல் எழுந்தது. சித்தத்துடன் சேர்ந்து சுகம் கண்டு திளைத்த அருணகிரியாரோ அத்துடன் பாடுவதை நிறுத்தி சித்தத்தில் ஒன்றித் திளைத்தார். தியானம் கலைந்ததும் தலைவன் இட்ட கட்டளையை நிறைவேற்றுமல் தன்னிலே திளைத்தோமே என்று வருந்தினர்.

எம்பெருமானிடமிருந்து ''வயலூருக்கு வா'' என்ற கட்டளை பிறந்தது. மேகமது பயிர்க்குதவி செய்ததுபோல வாடி நின்ற அருணகிரி சுவாமிக்கு வள்ளல் கருணை பொழிந்தார்.

திருவருணையிலிருந்து வயலூர்ப்பதி தேடி விரைந்து வந்தார், கட்டப்பட்டிருக்கும் கன்றினை அவிழ்த்து விடப்

திருப்புகழ் அருளிய

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்

பட்டதும் தாய்ப்பசுவை நாடி கன்று ஓடுவது போல விரைந்து ஓடிவந்தார் வயலூருக்கு.

திருச்சிராப்பள்ளியை அடுத்து மேற்கே கோயில் கொண்டிருக்கும் உஜ்ஜீவ நாதர் மலைக்கு அப்பால், நஞ்சை வயல்களுக்கு மத்தியில் சிறப்புற விளங்கும் ஆதிநாயகி சமேத ஆதிநாதர் திருக்கோயில் கொண்டிருக்கும் செந்தமிழ் வயலூர் செய்த தவத்தின் பேறு, பலிதமாகும் காலம் வந்து விட்டது.

தவராஜர், முருகன் அருள்பெற்ற அருளாளர், முத்தியைத் தரும் திருப்புகழ் பாட, அருணகிரி சுவாமிகள் முருகனே முன்னின்று வழிகாட்ட வயலூர் வந்தடைந்தார்.

சர்ப்ப தீர்த்தமும் சக்தி தீர்த்தமும், வன்னி தீர்த்தமும் ஆடினார். கம்பத்தடி விநாயகப் பெருமானைக் கீழே வீழ்ந்து வணங்கினார். ஆதிநாதரையும், ஆதிநாயகி அம்மையையும் துதித்துப் போற்றினார். பொய்யாக் கணபதி சந்நிதி வந்து உளமுருகி நின்றார்.

''கைத் தல நிறை கனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி''

என்று பாடிப் பொய்யாக் கணபதியைப் போற்றினார். முதல் எழுத்தாளன் நீ யல்லவா என்று துதித்தார். என்றன் உயிர்க்கு ஆதரவு அருள்வாயே, அன்பர் தமக்கு ஆனநிலைப் பொருளோனே என்று பாடிப் பரவசம் அடைந்தார். அடுத்து பொய்யாக் கணபதி பெருமான் அருணகிரிநாதருக்கு எப்படிப் பாடுவதென வழிகாட்டி ஆற்றுப்படுத்துகிறார். அதனை அருணகிரி சுவாமிகளே கூறுகிறார்.

''பக்கரை விசித்ர மணி பொற்கலனை யிட்டநடை
பட்சியெனும் முக்ர துரகமு நீபப்
பக்குவ மலர்த் தொடையும் அக்குபடு பட்டொழிய
பட்டுருவ விட் டருள்கை வடிவேலும்

திக்கது மதிக்கவரு குக்குடமும் ரட்சைதரு
சிற்றடியு முற்றிய பன்னிரு தோளும்
செய்ப் பதியும் வைத் துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக் கருள்கை மறவேனே ''

மயில் வாகனம், கடப்ப மலர் மாலை, வடிவேலாயுதம் சேவற்கொடி, ரட்சை தருகின்ற திருவடி, பன்னிரு தோள்கள் இவற்ருேடு வயலூரையும் வைத்துப் பாடு என்று பொய்யாக் கணபதி பெருமான் ஆற்றுப்படுத்த அருணகிரி சுவாமிகள் வயலூர் முருகப் பெருமான் சந்நிதி வந்து வணங்கி துதித்து உள்ளத்திலே தெரிசித்து, கண்ணாடியில் தடம் கண்டு களித்துப் பாடுகிருர்.

என்ருல் பிறக்கவும் என்ரு லிறக்கவும்
என்ருல் துதிக்கவும் — கண்களாலே
என்ரு லழைக்கவும் என்ருல் நடக்கவும்
என்ரு லிருக்கவும் — பெண்டிர் வீடு
என்ருல் சுகிக்கவும் என்ருல் முகிக்கவும்
என்ருல் சலிக்கவும் தொந்த நோயை
என்ரு லெரிக்கவும் என்ருல் நினைக்கவும்
என்ருல் தரிக்கவும் — இங்கு நானுர். என்று

வான் சுரக்கத் தவறினும் தான் சுரக்கத் தவரு வயலூர் வள்ளல் அருள் கிடைத்தது. முத்திக் கொரு வித்துக் குருபரன் வயலூர் வடிவேலன் நெஞ்சம் அமர ஆயிரமாயிர மாக அருணகிரி வாக்கிலிருந்து அற்புதத் திருப்புகழ் பெருக் கெடுத்து விட்டது.

அருணகிரி சுவாமிகள் பாடிய திருப்புகழ் பாடல் எத்தனையோ? வயலூர் பற்றிய திருப்புகழ் பாடல் எத்தனையோ யாம் அறியோம் இன்று கிடைத்திருப்பது 18 பாடல்கள்தாம்.

திருப்புகழ் என்னும் செந்தமிழ் தேவ அமிர்தத்தை உலகிற்குத் தந்தது வயலூர் திருப்பதியேயாகும். திருப்புகழ் உள்ளவரை, அருணகிரிநாதர் புகழும் வயலூர் புகழும் நின்று நிலைக்கும்.

வயலூர் தலத்தின் மாண்பு

அருணகிரிநாதசுவாமி வயலூரைப் பற்றிப் பாடியிருக்கும் திருப்புகழ் பதினெட்டுப் பாடல்கள்.

ஜீவாத்மா — பரமாத்மாவிடம் பரிபூரண சரணாகதி அடையும்போது சித்தியேற்படுகிறது. சரணாகதி அடைபவர், தன்னைப் படைத்துக் காத்து ரட்சித்து வழிநடத்தி, அறிவு, ஆற்றல் தந்து இயக்குபவன் இறைவனே. அவன் இயக்க நாம் இயங்குகின்றோம்; நம்மால் ஆவது யாதொன்றும் இல்லை என்பதைப் பூரணமாக உணர்ந்த பின்னரே பரிபூரண சரணாகதி அடைகின்றார்கள்.

சரணாகதி தத்துவத்தைச் செந்தமிழ் நாவால் செப்புகின்றார் அருணகிரிநாத சுவாமி. எவ்வாறு எனிலோ என்றால் பிறக்கவோ அல்லது இறக்கவோ சுகிக்கவோ, பார்க்கவோ, நடக்கவோ, நினைக்கவோ முடியுமா ?

என்னைப் பிறப்பித்து, அனைத்தும் ஈந்து, தேடு கல்வியில்லாத என்னை, உன்னை நினைந்து, துதிக்க, மனத்தை ஒரு நிலையில் நிறுத்த, வழிகாட்டி, என்னை நடத்துகின்றவன் நீயல்லவா? காண்பானும், காட்சியும், காணப்படுபவனுமாக இருப்பவன் வயலூரில் திருக்கோயில் கொண்டிருக்கும் எம்மிறைவன் முருகப் பெருமானே என்று தன்னையிழந்து

தாம்பெற்ற நலனைத் தனித்தமிழ்த் திருப்புகழாக அருணகிரி நாதரின் அனுபவ முதிர்ச்சியில், வயலூர் திருப்புகழில் அருள் வாக்காக மலர்கின்றது.

உயர்தாழைக் காட்டின் நறுமணம் கமழும் வயலூர் பதியில் ஆலயம் கொண்ட அண்ணல் எனக்கு வாழ்வு தந்தான் என்று இடம்சுட்டிக் கரம்குவித்து இன்புறுகின்றார் அருணகிரி பெருமான்.

தேவேந்திரன் திருமகளார் குஞ்சரி தேவியும், குற மகளார் வள்ளி நாயகியும் இருபுறம் இலங்கத் திருக்கரத்தில் வேலேந்திய வேலாயுதப் பெருமானே! அடியார்களுக்கு அருள் செய்வதிலே வாக்குத் தவறாத வள்ளால், பொய்யாக் கணபதியும், திருவாக்கீசனும் வாழும் வயலூர் திருக்கோயிலில் ஒளியுற விளங்கும் முருகப் பெருமானே! என்று ஆனந்தப் பெருமிதப்பில் அருணகிரியாம் அருட்குயில் கூவுகின்றது வயலூர் திருப்புகழில்.

நிமல, நிட்கள, மாயை, விந்து, நாதம், வரசக்தி இவை களுக்கு மேலான பர வத்துவாக விளங்கும் பரம்பொருளே வயலூரில் தேவசேனாபதியாக, தேவரும், மூவரும், தொழும் தெய்வமாக விளங்குகின்றார் என்று அனுபவத்தின் களிப்பு அருணகிரிநாதர் வாக்கில் வெளிப்பட்டு வருகிறது.

கிருஷ்ணாவதாரத்தில் ஆச்சியர் உரலோடு கட்ட, சாபத் தால் மருதமரமாக இரு கந்தர்வர்கள் நிற்க, அவர்களது சாபம் தீர்க்க இரு மருத மரத்திடை உரலை இழுத்து மரம் நெறநெறன ஒடிபட உரலோடு தவழ்ந்த அரியின் மருகனே!

வாசனை மலரும், சுனையும், புலி தங்கும் குகையும் உடைய விராலிமலை மீது அமர்ந்த அறுமுகனே! குருபரனே! மீனினங்கள் குதித்தாடும் செந்நெல் வயல்களுக்கு மத்தியில் வயலூர் ஆலயத்தில் அதிபனாகக் கொலுவமர்ந்து அருள் தருகின்ற கருணை முகிலே, முருகா! என்று உள்ளம் உருகி உணர்வு பொங்க, அருணகிரிநாதர் வாக்கிலிருந்து வருகின்றது வயலூர் திருப்புகழ்.

அரியபொருள் பலவற்றைத் தன்னிலே ஐக்கியப்படுத்திய விரி காவிரியின் வண்டல் மேவும் வயலூர்ப் பதியின்மேல் அதி மோகமுடைய முருகப் பெருமானே! அமராபதியில் வாழ்கின்ற தேவர்களுக்குத் தேவனாக விளங்கும் திருமுருகா! எம்போன்ற எளியவர்க்காகவல்லவா வயலூர்ப்பதியில் வந்து கொலு அமர்ந்து இருக்கின்றாய் என்று போற்றித் துதிக்கின்றார் அருணகிரிநாதர்.

காவிடாத திருச்சங்கோடு நாடு தனக்கும் காவிசூழ் வயலூருக்கும் பிரியமானவனே! காலன் ஆடல் தவிர்க்கும் பெருமான் நீயேயல்லவா? என்று அருள் கனிந்து வருகிறது அருணகிரிநாதர் வாக்கு.

நின் திருவடி நினைப்பில்லாத எளியேனை, கற்பகத்தரு போன்ற பெருமானே! விராலிமலைக்கு வா என்று அழைத்து ஆசையறுத்து, மனமாசினைத் துடைத்து ஞான அமுதத்தை எனக்கு வழங்கிய நின் கருணையை எப்படி மறப்பேன்? காமனைச் சுட்டெரித்த நெற்றிக்கண் படைத்தவரும், கங்கை நதியைத் தலையில் தரித்தவரும், புற்றிலாடும் அரவங்களை மாலையாகப் பூண்டவருமான சிவபெருமானுக்கு உபதேசம் செய்த குருநாதா! சோமன், அருக்கன் மீனுலவுமிக்க சோலை சூழ்ந்த வயலூரில் வாழ்கின்ற முருகப்பெருமானே என்று ஞானத் திளைப்பில் அருணகிரிநாதர் நாவில் தவழ்ந்து வருகிறது வயலூர் திருப்புகழ்

அனைத்துத் தேவர்களும், பர்வத ராஜகுமாரியாகிய ஆதி நாயகியின் பதியே! நமச்சிவாய! என்று போற்றும் அக்னீஸ்வரன் புதல்வனே! பொய்யாக் கணபதியின் இளை யோனே! ஈரேழு புவனங்களையும் தனது திருவடிகளால் அளக்க வான்வரை திருவடி தூக்கிய மாயவன் மருகனே! மனுநீதி தவழும் சோழ நாட்டின் தலைமையாக விளங்கும் உறையூரைச் சார்ந்த வயலூர்பதியில் திருக்கோயில் கொண்ட தேவநாயகனே! என்று பாரம்பரியப் பெருமையை எடுத்துக் காட்டி ஆற்றுப்படுத்துகிறது வயலூரின் , திருப்புகழில் அருணகிரி சுவாமிகளின் திருவாக்கு.

புத்த சமயத்தலைவர்களும், சமணர்களும் கொண்டிருந்த மதம் கெடவும், தென்பாண்டி நாடாளும் மன்னன் திருநெற்றியில் திருநீறு இலங்கச் செய்யவும் எழுதிய ஏட்டைத் தீயிலிட்டும் எரிக்கப்படாமல் இருக்கக் காட்டியும், ஆற்றின் நீரில் எதிர் நீந்தி செல்லுமாறு விடுத்த பிரமபுரத்திலுதித்த கவுணியர் கோனாகிய திருஞானசம்பந்த பெருமானாக, உமையவள் பால்சுரந்து அளிக்கத் திருமுறை தந்த செல்வனாகவும் அவதரித்தது தாங்களேயல்லவா ?

சண்முகனே ! குகனே ! வெற்பு பிளக்க வேலெறிந்த வேலாயுதனே ! மயில் வாகனனே! சக்தி கணபதி சகோதரனே ! பிரகாசம் பொருந்திய சுதர்சன சக்ரத்தைத் திருக்கரம் கொண்ட திருமாலின் மருகா ! அக்னி வடிவான இறையவன் புதல்வா ! ஈரேழு புவனங்களுக்கும் முதல்வனாக விளங்கும் முருகா ! குளிர்ந்த வயலூரில் உறைகின்ற இறைவா ! என்று உள்ளம் நெகிழ ஊறி வருகிறது 'செந்தமிழ் வயலூர் திருப்புகழ்.

வயலூர் வாழ்கின்ற அற்புதனே ! வினையின் தொடர்பை அறுத்திடும் வேலாயுதனே ! என்று போற்றித் துதிக்கின்றது பொலிவுற்ற அருணகிரியின் செந்தமிழ் வாசகம்.

ஆதிநாயகியாக, தென்புறம் நோக்கி அமர்ந்த திருவாசல் படைத்தவளாக வயலூரில் கொலுவமர்ந்திருக்கும் ஆதி சக்தியே, காளி, திரிபுர சுந்தரி, அந்தரி, நீலி, கௌரி, பயங்கரி, சங்கரி, காருண்யம் மிகுந்த சிவை, குண்டலி சண்டிகை, திரிபுரமெரித்த சிவபெருமானது காதல் மனைவி, பரம்பரை, ஆதிமலைமகள் மங்கலை, பிங்கலை, ஆனந்த நடமாடிய அம்பிகை, திருமகளும், நாமகளும், ரதியும், அருந்ததியும், இந்திராணி முதலியோரும் போற்றி வணங்கும் திரியம்பகி, மேகநிறம் கொண்ட திருமாலின் சகோதரியாகிய ஆதிநாயகி ஈன்ற இளைய குமாரனாகிய முருகப் பெருமானே !

நின் வேலையும்—மயிலையும் நினைத்தவர் துயரம் தீர அருள் சுரக்கும் கந்தா ! நிரந்தரா ! மேலை வயலூரில் ஆனந்த

மாக விளங்கும் முருகப் பெருமானே என்று ஆனந்தப் பெருமிதப்பில் அருணகிரி சுவாமியின் அருள்வாக்கு நமக்கு வயலூர் முருகனை ஆற்றுப்படுத்துகிறது.

தேவர்கள் வாழ்வுற அவுணர்களின் சேனை, அழிந்துபட, ரத, கஜ, துரக, பதாதிகள் உருக்குலைய, மலைகள் தூள்பட நவநதிகள் குழைதர, தேவேந்திரன் மகிழ்வுற திருக்கரத்தில் வேல் தாங்கிய வேலாயுதா! சேவற் கொடியோனே! ஒளி பொருந்திய மயில்மிசை வருகின்ற வயலூர் வள்ளலே, சரவணபவ, குகனே! இயல், இசை, நடனம் வகைவகையாக அகஸ்தியருக்கு உணர்த்திய குருநாதனே என்று வாக்குக்கு எளியவரான அருணகிரிநாதர் வாக்காக வருகிறது வயலூர் திருப்புகழ்.

திருமால் மருகா நமோ! அந்தமில்லாதோனே நமோ, அறுமுக வேளே நமோ, அரிகர சேயே நமோ, இமையவர் வாழ்வே நமோ, அருள் சொரூபா நமோ! உள்ளத்தாசை தீர்ப்பவனே! தெய்வ குஞ்சரி நாதா! மயில்வாகனா! வேலாயுதா! என்று சொல்லத் தெரியாமல் இருந்த ஏழையாகிய எனக்கு, பசு, பதி, பாசம் என்ற உண்மை அறியவேண்டுமென்று என் உள்ளம் இப்பொழுது விரும்புகிறது; உபதேசம் செய்தருள வேண்டும்.

குடதிசையில் சமுத்திரம்போல விளங்கும் அகண்ட காவிரி நதி சூழும் குளிர் வயலூர் மேவிய முருகப் பெருமானே என்று உபதேசம் செய்யக்கேட்டு உருகும் அருணகிரியாரின் ஒளிமிகுந்த அருள் வாக்கு.

வயலிநகர் பயில் குமர! பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்பவனே! விசித்ர, ப்ரசித்தமுறு அரியின் மருகனே! அறுமுகவா! கயிலயங்கிரியில் நடனமாடும் முக்கண் படைத்த நாயகர் தத்துவத்தின் சிகரமே என்று போற்றும்படியாக, அன்னவர்க்கு முக்திநெறி இன்னதென்று தவறுதல் இல்லாதபடி உரைக்க வல்ல குருநாதா என்று அருணகிரி சுவாமியின் அருள்வாக்கு வயலூர் திருப்புகழில் நமக்காக வாதாடி நிற்கிறது.

சிறிது நேரத்தில் அவுணர்முடி சிதற மயிலேறி வேல் விடும் வேலாயுதா! அறிவும், நெறியும், அகத்தில் படிய வைக்கும் அறுமுகவா! இறைவா! திருசிரகிரியின் அருகில் வயலூர் திருப்பதியில், ஆனந்தமாகத் திருக்கொலுவமர்ந்த முருகப் பெருமானே என்று அருணகிரிநாதர் அருள்வாக்கு வயலூர் திருப்புகழில் வந்து நமக்கு வழிகாட்டுகிறது.

சரணுகதியில் தொடங்கி, பரம்பொருளே வயலூரில் முருகனுக வந்து திருக்கொலுவு கொண்டிருக்கிருர் என்பதைக் காட்டி, பஞ்சாட்சர மந்திரமும் — சக்தியின் திருப்பெயர் விளக்கும் மூலசக்தி நாமங்களும், திருமாலின் சௌலப்பியமும் சடாட்சர உட்பொருளும், பசு, பதி, பாசம், விளங்க உப தேசம் செய்விக்க வேண்டுமென்ற பிரார்த்தனையும், தன்னை வாழ்வித்தது போன்று வயலூர் திருப்புகழ் படிப்பவர்களுக்கும் நல்வாழ்வு தரவேண்டுமென்று அருட்பழுத்த நெஞ்சத்தோடு அருணகிரி சுவாமி வயலூர் வடிவேலனை, வேண்டுவதும் வயலூர் திருப்புகழில் இருக்கிறது.

வயலூர் திருப்புகழ் பதினெட்டும் வகையாகப் படித்து பொருள் தெரிந்து அனுபவிப்பவர்கள் இவ்வாழ்வில் இகத்தி லும், பரத்திலும் பேரானந்தப் பெருவாழ்வை அடைவது திண்ணம். அருள்கனிந்த சித்தர், அமுத மொழியரசு, அருணகிரி சுவாமியின் வாக்கு வயலூர்பதியை வையகத்தோர் மனத்தில் என்ஞளும் போற்றும்படி, துதிக்கும்படி செய்து விட்டது. செய்பதியை வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு செப்பினுர். அருணகிரி செந்தமிழ்ச் செல்வர் என்பதை அனுபவிப்பவர்கள் அனைவரும் அறியலாகும்.

———



வயலூர் அருள்மிகு முத்துக்குமாரசாமி

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி

கடந்தநிலை—சிவம், கலந்தநிலை—சக்தி, கவர்ந்தநிலை—முருகன், கடந்தநிலை எல்லாப் படைப்புகளுக்கும் அப்பால் நின்று தான் மேலானவராக விளங்கும் ஆதிநாதர்.

எல்லாப் பொருளிலும் இயைந்து அந்தர்யாமியாக விளங்குவது கலந்தநிலை. இது ஆதிநாயகி அம்மன் கொலு அமர்ந்த நிலை.

தன்னை வழிபடுவோருக்குத் திருவுருவங்களிலே தோன்றி, காட்சி தந்து உள்ளம் கவரும் அழகுடன் விளங்குவது கவர்ந்த நிலை. இதுவே வயலூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி நிலை.

மூலப்பொருள் ஒன்றே எனினும் அடியவர் இதயம் புரிந்துகொள்ளும் பாங்குக்கு ஏற்ப இறைவன் அருள் கனியும் தோற்றமே அச்சாவதாரம்.

ஆதியாகிய அக்கினி எல்லாத் தீமைகளையும் எரித்து, இனி எதனாலும் பாதிக்கப்படாத சொரூபம் தருவதாக ஆதிநாதரும், அனைத்திலும் கலந்து அடியவரை வழிநடத்தும் பரமசக்தியாகிய ஆதிநாயகியின் திருவருளும், வழிகாட்டி வயலூரில் தனித்து விளங்குகின்றது.

பொய்யான வாழ்க்கையைவிட்டு மெய்ஞானத்தை அடையுமாறு அடியார்களுக்கு அருளுபதேசம் கூறும் முன்னவனுக, முத்திநலம் சொன்னவனுக, தூய்மை சுகத்தவனுக, சிற்பரனுக, செஞ்சடையான் சேயனுக திருக்கொலுவமர்ந்திருக்கும் வி–நாயகனுக பொய்யாக் கணபதி அமர்ந்தநிலே, கண் அறியக் காட்டுகிறது. இவர் சுயம்புமூர்த்தி, வலம்புரி விநாயகர்.

சித்த மலமற்று பொன்மயமான குகையில் புகுவோருக்கு திருவடி காட்டி, சித்தம் சாந்தியுற, முத்திப்பேறு அளிக்கும் முதல்வன் முருகனுக விளங்கி அருள்பொழியும் அற்புத ஸ்தலமே வயலூர் ஆலயம்.

குன்றேறி அமர்ந்து சிரகிரியில் ஞானச் சுடராக விளங்குபவன் தானே என்றும், அலேகடல் அருகமர்ந்து பிறவிப் பெருங்கடல் கடக்க மீகாமனுக விளங்குபவன் தானே என்றும் நெஞ்சமெனும் வயலில் திருவடி என்னும் விதையையூன்றி பக்திநீர் பாய்ச்சினுல், ஞானமாகிய பலனேத் தந்து முத்திப் பேறு அளிப்பேன் என்பதை கலியுகத்தில் அடியார்களுக்கு எடுத்துக் காட்டவே வயலூரில் வள்ளல் 'முருகன் திருக்கோயில் கொண்டிருக்கின்ருர்.

மூத்தோரை முன்வைத்து, முன்னவர்களேப் பூசனே புரிந்து, சக்தி தீர்த்தமும், அக்கினி தீர்த்தமும் கண்டு, மாதா பிதாவை அன்ருடம் வழிபடும் வயலூர் முருகன், கருணே சாம்ராஜ்ய கஜானுவின் கர்த்தனுக விளங்குகின்ருன். அடியார் கேட்டதைக் கொடுத்தும், நினேத்ததை நடப்பித்தும், கேளாததையும் நினேத்து வழங்கும் வள்ளலாக விளங்குகின்ருர்.

வயலூர் பிரார்த்தனே ஸ்தலம். சர்ப்ப தீர்த்தம் ஆடி, சக்தி தீர்த்தத்தில் மூழ்கி, கம்பத்தடி விநாயகன் கழல் பணிந்து, சித்த சலனமற்று, திருவடிப் பேற்றை விரும்பி, ஆதிநாதர் சன்னதியில் சன்னலுக்கு அருகே அமர்ந்திருக்கும் போது உடல் பூராவிலும் உள்ளும் – புறத்திலும் கனல்

ஏறுவதைக் கண்டு சுயம்புமூர்த்தமான அக்னீஸ்வரனை அடிபணிய வேண்டும். அனுபவித்துப் பார்க்க வேண்டும்.

வயலூர் ஆதிநாதர் சந்நிதியில் சுந்தரதாண்டவமூர்த்தி விக்கிரகம் இருக்கிறது. அனைவரும் கண்டு ஆனந்திக்க வேண்டிய மூர்த்தம் அது. எம்பெருமான் கல்லால மரத்தின் அடியில் அமர்ந்து, ஞானமுத்திரை காட்டி மோனத்தோடுள்ள கோலமும், ஆனந்தத் திருநடனமாடும் அற்புதக் கோலமும் கண்கொண்ட மட்டும் கண்டு, சிந்தித்து தெளிவு பெற வேண்டிய தோற்றங்களாகும்.

ஆனந்த நடமாடும் ஆண்டவன் அண்டம் இயங்கிட, அடியார் சிந்தை மயங்கிட, கால் தூக்கி ஆனந்த நடனமாடுகின்றார். மோனம் கலைந்திட, ஆனந்த மேலிட, முன்னந்த பாம்பு புலியுமே பார்த்திட, ஆனந்த நடனமாடுகின்றார்.

இனித்த முகத்தினில் எத்தனை புன்னகை. ஈரேழு புவனங்கள் இயங்கிச் சுழன்றிட, மனிதப் பிறவிகள் சித்தம் மகிழ்ந்திட, மாதவத்தோர் உள்ளம் பார்த்துக் களித்திட, ஆனந்த நடனமாடும் அம்பலக் கூத்தனைக் கண்டு ஆனந்திக்காத உள்ளம் இருக்கமுடியாது.

ஆனால் வயலூரில் இருக்கும் சுந்தர தாண்டவமூர்த்தியின் திருவடிவம் கூத்தப் பெருமான் திருவுருவிலிருந்து சற்று மாறுபட்டது. இங்கு ஓங்கும் திருவாசி இல்லை. காலின் கீழ் முயலகன் இல்லை. சடையில் சடாமுடி இல்லை. கிரீடம் இருக்கிறது. கால் தூக்காமல் நடனமாடும் காட்சியைக் காண்கிறோம். இங்கு எம்பெருமான் ஆடும் திருநடனத்திற்கு சுந்தரத்தாண்டவம் என்று பெயர் சொல்லுகிறார்கள்.

கொள்ளிடத்தின் வடக்கரையில் உள்ள திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் திருவாசியில் உள்ள நடராஜர் உருவத்தின் பாதத்தில் முயலகன் இல்லை. சடையில் கிரீடம் இருக்கிறது. பாதத்தின் அடியில் ஒரு பாம்பு இருக்கிறது.

வயலூர் முத்தியைத் தரும் இடமல்லவா? இங்கு முயலகனுக்கு வேலையில்லை. இடத்துக்கு இடம் ஸ்தல சிறப்புக்கு ஏற்ப, அருளாளர்கள் கண்டு அமைத்த வடிவங்கள் மாறுபடலாம்.

முத்தியைப் பெற்ற ஞானிகள் பேரானந்தப் பெருமிதம் அடைவதற்கு ஆடுங் கூத்தே சுந்தரக் கூத்து. வயலூர் பதியில் அருள்பெற்றவர்கள் உள்ளம் மலர எம்பெருமான் ஆடும் சுந்தரத்தாண்டவம் அழகு, அழகுக்கே அழகு செய்வதாக அமைகிறது.

"நந்தியை, எந்தையை, ஞானத் தலைவனை, மந்திர மொன்றுள் மருவி, அது கடந்து அந்தர வானத்தின் அப்புறத் தப்பர, சுந்தரக் கூத்தனை, என் சொல்லுமாறே" என்று சுந்தரக் கூத்தைப் பற்றி திருமூலர் செப்புகின்றார்.

சுந்தரத்தாண்டவ மூர்த்தியின் முன் அழகும், பின் அழகும் அனுபவித்துக் காணவேண்டியதாக இருக்கிறது. "புரிந்தவன் ஆடிற் புவனங்கள் ஆடும். தெரிந்தவன் ஆடும் அளவு எங்கள் சிந்தை. புரிந்தவன் ஆடிற், பல பூதங்கள் ஆடும். எரிந்தவன் ஆடல் கண்டு இன்புற்றவாறே" யென திருமூலர் இன்புறுகின்றார். முயன்று நாமும் கண்டு இன்புறுவோம்.

அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியாகிய அன்னை ஆதிநாயகி சந்நிதியில் நின்று திருவடி தெரிசனம் செய்யும் போது நாடி நரம்புகள் எல்லாம் இனம் புரியாத சுகம் அடைவது போல ஒரு நெகிழ்வு ஏற்படும். தென்முகம் நோக்கிய அன்னையின் சந்நிதி, தேடிக் கிடைக்காத திரவிய மாகும்.

ஆதிநாதரையும் - ஆதிநாயகி அம்மையையும் தெரிசனம் செய்து திருவடி வணங்கி தெற்குப் பிரகாரத்தின் வழியாக பொன்மயமாக விளங்கும் பொய்யாக் கணபதியின் சந்நிதி சென்று அடிபரவி தொழவேண்டும்.

அருணகிரி சுவாமிக்கு அருள் தந்து திருப்புகழ் பாடும் திறம் தந்தவர் பொய்யாக் கணபதி. பொய்யான வாழ்வை நம்பி, பூமியில் திரிபவர்களை மெய்ஞான பாதைக்குத் திருப்பி அனுக்கிரகம் செய்பவர் பொய்யாக் கணபதி.

திருப்புகழ் பாடல் ஒவ்வொன்றிலும் பொய்யான வாழ்வு முதற்பகுதியும், மெய்ஞான வாழ்வு பிற்பகுதியுமாக அருணகிரிநாதர் அமைத்துப் பாடியது பொய்யாக் கணபதிக்கு தான் காட்டிய நன்றி கலந்த அஞ்சலி என்றே கொள்ள வேண்டும்.

பொய்யாக் கணபதி கையில் வைத்திருப்பது மாங்கனி என்பாரும், மாதுளங்கனி என்பாரும் உண்டு. ஸ்தூலம், சூட்சுமம் ஆகிய தேகம் நாம் படைத்திருக்கிறோம். பொய்யான ஸ்தூலம் உண்மை உணரும் போது விடுபட்டு ஓடு மாதிரி ஆகிவிடுகிறது. என்றும் அழியாத சூட்சும உடல் பொய் யான காயத்தைவிட்டு ரசம் நிறைந்ததாக அமைகிற தத்து வத்தை விளக்க, விளாங்கனியையே கையில் நிறைகனியாக (யானைக்குப் பிரியமான கனியாக) கையில் வைத்திருக்கிறார். விளாங்கனியே நிறைகனி.

பொய்யாக் கணபதியின் பொன்னடியைப் போற்றி தலையில் குட்டிக்கொண்டு, தோப்புக்கரணங்கள் போட்டு, சுழிமுனை வீற்றிருக்கும் துய்யனை, துப்பார் திருமேனி தும்பிக்கை உடையானை, தப்பாமல் சார்ந்து தொழவேண்டும்.

பொய்யாக் கணபதி சந்நிதிக்கு அருகே அருணகிரி சுவாமிகளுக்கு வயலூரில் பீடம் அமைத்திருக்கிறார்கள். திருப் புகழ் படிப்பவர்கள் சிந்தை வலு அடைவார்கள். திருவடிபதம் அடைவார்கள். செந்தமிழ் சுவை அறிவார்கள். வயலூர் முருகப் பெருமானை நமக்கு ஆற்றுப்படுத்தும் அருளாளர் அருணகிரிநாதர் பொன்னடி போற்றித் துதிப்போம்.

அருணகிரிநாதர் சந்நிதியில் நின்று நோக்கும்போது இடதுபுறம் பொய்யாக் கணபதியின் சந்நிதியும் எதிர்ப் பக்கத் தில் கல்லால மரத்தடியில் நால்வருக்குச் சொல்லாமல்

சொல்லும் தட்சிணாமூர்த்தம் கொலுவமர்ந்த காட்சி கிட்டும். உலகுக்கெல்லாம் ஞானக் குருபரனாக விளங்கும் தக்ஷிணா மூர்த்தம். எதிரே அருள்பெற்று அழகு தமிழில் அற்புத திருப்புகழ் பாடும் அருணகிரிநாதர். அடுத்திருப்பதோ பொய்யாக் கணபதி பெம்மான் திருவாயில். இந்தத் திருக்காட்சி வயலூர் ஆலயத்தில் மட்டுமே கிட்டும்.

பொய்யாக் கணபதி சந்நிதிக்கு அடுத்து வயலூர் முத்துக்குமாரசுவாமி சந்நிதி அமைந்திருக்கிறது. மயில்மேல் அமர்ந்த தோற்றத்தோடு வடிவழகு ஆனந்த சொரூபராகக் காட்சி தருகிறார்.

அம்மன் சந்நிதிக்கு அருகில் தூணில் முத்துக்குமார சுவாமி உருவம் இருக்கிறது. இதற்கு தினசரி பூசை நடை பெறுகிறது. அதவத்தூருக்கும் சோமரசம்பேட்டைக்கும் எழுந்தருள்வது முத்துக்குமாரசாமியின் மூர்த்தமேதான். ராஜகம்பீர நாடாளும் நாயகனாக வயலூரில் விளங்குபவர் இந்த முத்துக்குமார சுவாமியே தான். ராஜகம்பீரமும் அழகும், இந்த மூர்த்தத்தில் கண்டு களிக்கலாம். மயில்மீது அமர்ந்திருக்கும் தோற்றம். இவரை படி இறக்குவது நல்ல நாள் பார்த்துத்தான் கர்ப்பகிரகத்திலிருந்து இறக்குவார்கள். வயலூரில் சிறப்பான மூர்த்தமாக விளங்குகின்றவர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி மூர்த்தமாகும்.

அடுத்திருப்பது வயலூர் முருகப் பெருமான் ஸ்ரீ சுப்பிர மணிய சுவாமியின் திருமூன்றில். பால்வடியும் முகம், பக்தர் களை தன்பால் ஈர்க்கும் தோற்றம். வரம் தர துடிக்கும் அதரம். சுடர்வேல் தாங்கிய கரம். தெய்வகுஞ்சரி, வள்ளியோடு திருக்கொலுவமர்ந்த திருவடிவம். எங்கும், எதனிலும் எக்காலத்தும் நிறைந்து விளங்கும் பரம்பொருள் இந்த கர்ப்பகிரகத்தினுள் இயைந்து நிற்கும் காட்சி மனதைவிட்டு அகலாது.

சித்தர்கள் தேடிவந்து முக்தியைப் பெறவிழையும் திருக் கோயில் வயலூர் முருகன் சந்நிதி. முச்சுடராகி, மூலமாம்

சோதியாகி, அற்புதம் அருளும் அண்ணல், அழகே வடிவான அர்ச்சாவதாரம் ஆங்கு கண்டு, மனமாகிய வண்டை அய்யன் திருவடித் தாமரையில் சேர்த்துக் களிக்கலாம்.

சந்நிதியில் நின்று கண்கொண்ட மட்டும் காணலாம். அய்யன் திருவடிவை ஆழ்ந்து அனுபவிக்கலாம். தன் அடியார்கள் அனைவரும் தன்னை நெருங்கி வந்து தரிசிக்கவும், தன் அடியார்களை நெருக்கத்தில் வைத்து அருள் வழங்கவும் தான் தந்தையின் பின்னால் நெருக்கமான இடத்தில் வயலூர் முருகன் வேண்டுமென்றே அமர்ந்தாரோ என்று கருத இடமேற்படுகிறது.

பரம்பொருள் முருகன் அர்ச்சாவதாரமாக வயலூரில் வந்தமர்ந்து அருட்செங்கோல் ஓச்சும் பேரானந்தக் காட்சியை, கண்விழித்துக் கண்டு, மனத்தில் இறுத்தி இன்புறலாம். நெஞ்சத்தை நிவேதனம் செய்து அஞ்சலிப்போம்.

அமைதியும், சாந்தமும் பொங்க வணங்குவோம். ஆரவாரம் இல்லாமல் போற்றுவோம். ஆறெழுத்தை ஓரெழுத்தில் ஆழ்ந்து தரிசிப்போம். அவனது கருணை ரசத்தைப் பருகுவோம். திருவடிவை கருத்தில் தேக்குவோம். ஞானபண்டிதன் வயலூர் வந்தமர்ந்த கோலத்தை சிந்திப்போம்.

முருகப் பெருமான் பாலசுப்பிரமணியமாகவும், தண்டாயுதபாணியாகவும், அறுமுக தோற்றத்தோடும், வேலாயுதம் தாங்கும் வேலனாகவும், விற் கைக்கொண்ட வேந்தனாகவும், தெய்வ குஞ்சரி வள்ளியம்மையோடும் திகழும் வடிவம் பற்பல. ஒன்றை அறிய உரிய பொருள் ஒன்றைத் தேர்ந்து அதனைக் கொண்டு மூலத்தை அறிதல் வழக்கமாகும். அறிவை, அறிவால் அறியும், அறிவே அறிவாகும்.

முருகப் பெருமானை இனம்காண நமக்கு ஆதரவாய் இருப்பது ஊர்தியாகிய மயில், பாலசுப்பிரமணியத்தின்

மயில் தோகை விரித்து ஆடும். தேவிமார்கள் இரார். கொஞ்சும் குழந்தையாக, குமரக் கடவுள் விளங்குவார். முருகன் மட்டும் மயில்மீது அமர்ந்திருக்க, அம்மயிலானது எதிர்வரும் பக்தர்களை பார்த்து நிற்கும். இது தேவேந்திர மயில். சூரசம்ஹாரத்திற்கு முன்பு தேவேந்திரனே மயிலாகி எம்பெருமானை சுமந்து நிற்கின்ற கோலம் இது.

சித்தம் உறுதிபெற, செய்கின்ற சேவை நிறைவுபெற, விரும்பும் அடியார்கள் தேவேந்திர மயில்மீது வீற்றிருக்கும் முருகப் பெருமானை வணங்கி வரம் பெறுவர்.

முருகப் பெருமானுக்கு இடதுபுறம் இருப்பவர் தெய்வ குஞ்சரி. வலதுபுறம் இருப்பவர் வள்ளிநாயகி. முருகனின் அருளாக விளங்குபவர் வள்ளிநாயகி. ஆண்மையாக விளங்குபவர் தெய்வகுஞ்சரி.

முருகப் பெரும்ான் தோற்றத்தில் வலதுபுறம் வள்ளி நாயகி இருக்கும் பக்கம் மயில் முகத்தை வைத்துக் கொண்டிருக்கும் கோலத்தை உடைய அம்சத்தை இகத்தில் சௌபாக்கியம் சௌலப்யம் பெற விரும்பும் பக்தர்கள் வழிபட்டு பேறு அடையவேண்டும்.

வலதுபுறம் இருக்கும் தேவ குஞ்சரி பக்கம் மயில் முகத்தை வைத்துக் கொண்டிருக்கும் ஸ்தலங்கள் சொற்பமே. வயலூர்பதியில் தெய்வகுஞ்சரி பக்கம் மயில் முகம் வைத்திருக்கிறது. முத்திப்பேறு விரும்பும் அடியார் போற்றி வணங்க வேண்டிய மூர்த்தம் வயலூர் வடிவேலன் திருவடிவமாகும்.

வயலூர் முருகனை வழிபட்டு இறவாப் பெரு நிலையை அருணகிரி சுவாமி அடைந்தார். பிறவி துயரம் தீர்ந்து பேரின்பப்பேறு அடைய வயலூர் வள்ளல் சந்நிதிக்கு வாருங்கள். தெரிந்தோ தெரியாமலோதேடிய பாபம் சுட்டெரிக்கப் பட்டு தூய சீவன் திருவடிப் பேற்றை அடைய வயலூர் சொர்க்கத்தின் வாயிலாக அமைந்திருக்கிறது.

வயலூர் முருகன் தமிழ்ப் பாவலர்களுக்கு இன்னருள் செய்குவான்-இந்தப் பாரில் அறமழை பெய்குவான். நெஞ்சின் ஆவல் அறிந்து அருளூட்டுவான். நித்தம் ஆண்மையும் வீரமும் ஊட்டுவான்.

பழனிக்கோ, திருச்செந்தூருக்கோ பிரார்த்தனை செய்து கொண்டவர்கள் அந்தப் பிரார்த்தனையை வயலூரில் செலுத்த லாம். வயலூர் முருகனுக்கு வேண்டிக்கொண்டு வேறு ஸ்தலத்தில் பிரார்த்தனை செலுத்தினால் வயலூர் முருகன் தன் அடியார்களை வம்புக்கிழுத்து தன் பிரார்த்தனைப் பொருளை வாங்கி விடுவான் என்ற நம்பிக்கை இந்தப் பக்கத்து கிராம மக்களுக்கு இருக்கிறது.

வயலூர் அருகிருக்க அயலூர் தேடி அலைவதேன்? என்ற எச்சரிக்கையோடு மக்கள் பேசும் சம்பவங்கள் எத்தனை எத்தனையோ உண்டு.

வயலூர் ஆலயத்திற்குள் சேவிக்க வருபவர்கள் சத்தம் போடாமல் கூடவருபவர்களை சத்தம் போட்டு பேசாமல் இருக்கும்படி எச்சரித்து வந்து சேவிக்க வேண்டும்.

திருமணம் ஆகாதவர்கள் வயலூர் முருகன் சந்நிதியில் நின்று முருகா உனக்குத் திருமணம் நடத்தி வைக்கிறேன் என்று பிரார்த்தித்துக் கொண்டால் விரைவில் பிரார்த்தித்த வருக்குத் திருமணம் நடைபெறுகிறது என்று பலர் சொல்லு கிறார்கள்.

வயலூர் வள்ளலை அடிவணங்கியதும் மறக்காமல் வடபுற மூலையில் அமர்ந்திருக்கும் மகாலட்சுமியை வணங்கி கடைக் கண்பார்வை பெற வேண்டும். மருகனை வணங்கி வருகின்ற வர்களுக்கு மகராசி லட்சுமி வாரி வழங்குகின்றாள். திருமகள் திருவருள் பெற்று சண்டிகேசரை வணங்கி நிர்மாலியம் வீட்டுக்கு எடுத்துவர அவரது அனுமதி பெறுவது முறை யாகும்.

முருகப் பெருமானை வழிபட வேல் ஒன்றே போதும் வேலை வணங்கினால் முருகப் பெருமானையே வணங்கியதாக பொருள். "தோகைமேல் உலவும் கந்தன், சுடர் கரத்திருக்கும், வெற்றிவாகையே சுமக்கும் வேலை, வணங்குவ தெனக்கு வேலை" என்றார் மகாகவி பாரதி.

"வேலும்-மயிலும் நினைத்தவர் தம் துயர் தீர, வருள்தரு, கந்த, நிரந்தர, மேலை வயலை யுகந்துள நின்றருள் பெருமாளே" என்று வயலூர் திருப்புகழ் கூறும்.

வயலூர் திருக்கோயிலின் கிழக்குப் பக்கத்தில் சக்தி தீர்த்தகரையில் கல்லால மரத்தடியில் வேல் வடிவான தோற்றத்தை இடும்பன் கோயில் என்றும், கிராம தேவதை கோயில் என்றும் சொல்லுவார்கள்.

கல்லால மரத்தடியில் ஞான சொரூபராக வீற்றிருக்கும் தென்முகக் கடவுளும், கல்லால மரத்தடியில் ஞானவேல் வடிவமாகத் திகழும் தேரடியான் கோவிலும் சிந்திப்பவர் சிந்தனைக்கு விருந்தாக அமையும். வயலூர் மண்ணில் விஷ ஜந்துக்கள் வருவதில்லை, வாழ்வதில்லை என்றும் கேள்விப் படுகின்றோம்.

தீராதவினை தீருமிடம் வயலூர். தீவினைகள் நாடாமல் தடுக்க உதவும் இடம் வயலூர். அறியாமல் செய்த பாபம் அகற்றுமிடம் வயலூர். அன்னை தந்தையரை வழிபட்டு அமர வாழ்வு பெறலாம் என்று அறிவுறுத்தும் ஸ்தலம் வயலூர். வாரியார் சுவாமியின் மனம் நிறைவுற்ற இடம் வயலூர். சூரியன் தன் மனைவி சாயாதேவியோடு நவக்கிரக மண்டலத்தில் அமர்ந்திருக்குமிடம் வயலூர். சக்தி மிகுந்த தேரடியான் சந்நிதி அமைந்த இடம் வயலூர்பதி.

திருப்புகழ் தந்த இடம் வயலூர். முத்தியை நல்கும் சக்தி மிகுந்த ஸ்தலம் வயலூர். மங்காத புகழ் மணக்கும் தங்கத் திருப்பதி வயலூர்பதி என்பது அனுபவிப்பவர்கட்கே விளங்கும்.

கல்வெட்டுக்கள்

அக்னீஸ்வரம் என்ற பெயர் கொண்ட இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் அரசாங்கத்தாரால் நகல் எடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகள் 1936-ம் ஆண்டில் 138 எண் முதல் 157 வரை பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. சில முடிவு பெறுமல் உள்ளன. சோழ அரசர்கள் காலத்தில் இவ்வூர் கேளராந்தக வளநாட்டில் உறையூர்க் கூற்றத்து வயலூர் என்றும், தென்கரை பிரமதேயம் நந்திவர்ம மங்கலம் என்றும் வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. சுவாமிக்கு விடங்கப் பெரு மான், மகாதேவன், திருக்கற்றளிப் பெருமான் அடிகள், மறப்பிலி முதலிய பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. இராஜ கேசரிவர்மன், குலோத்துங்க சோழதேவன், மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரிவர்மன் இராஜேந்திரசோழ தேவன், முதலாம் ராஜராஜசோழன் முதலிய அரசர்கள் காலங்களில் நிலம், பொன், நெய் முதலியன கொடுக்கப் பட்டன. கோயில் பூஜைக்காகவும், நந்தா விளக்கெரிக்கவும், நந்தவனந் திருத்தவும், பள்ளித் தாமம் தொடுக்கவும், திருப்பதிகம் பாடவும், திருவமுது, நெய்யமுது, கறியமுது, தயிரமுது, அடைக்காயமுது, தேன், பால், சர்க்கரை, பழம் முதலியன நைவேத்தியம் செய்யவும் ஆகிய தொண்டுகளுக் காக நிலம் முதலியன அளிக்கப்பட்டனவாகத் தெரிகிறது. அவைகளில் கண்ட முக்கிய விவரங்கள் பின்வருமாறு :-

1. கோவிராஜராஜ கேசரிவர்மனுடைய 3–வது ஆண்டில் உறையூர்க் கூற்றத்து வயலூரின் ஊரார், பெருமான் – விடங்கனுக்கு நிலம் விற்றுக் கொடுத்தனர். அவனால் கட்டப்பட்ட 'ஐநூற்றுவன்' என்னும் மண்டபத்தி லுள்ள விளக்குக்காக நிலம் விற்றுக் கொடுக்கப்பட்டது.

2. கோவிராஜ கேசரிவர்மனுடைய (முதலாம் ராஜராஜ சோழன்) 13–வது ஆண்டில் ஊரார், திருவெள்ளறை மாயிலாட்டி எனப்பெறும் மேற்கண்ட பெருமான் விடங்க னுக்கு, மண்டபத்தை நடத்துவதற்காக நிலம் விற்றுக் கொடுத்தனர்.

3. நெய் விளக்கெரிக்க ஊராரிடம் நிலம் விடப்பட்டது. "இவ் விளக்கு ரக்ஷித்தார் பாததுளி என் தலை மேலன."

4. கோவிராஜ கேசரிவர்மனுடைய 31–வது ஆண்டில் உறையூர்க் கோட்டத்து வயலூர் மகாதேவர்க்கு ஓர் நந்தா விளக்கெரிக்க, வல்லபி நாட்டைச் சேர்ந்த ஒருவரால் 30 கழஞ்சு பொன் அளிக்கப்பட்டது. அதனைக் கொண்டு ஊரார் இரண்டு செய் நிலம் வாங்கிக்கொண்டனர்.

5. குலோத்துங்க சோழதேவன் காலத்தில் வயலூரில் உள்ள அக்னீசுவரமுடைய மகாதேவர் கோயிலில் இருக்கும் ஓர் விளக்கெரிக்கத் தேவதானமாக நிலம் கொடுக்கப்பட்டது.

6. குலோத்துங்க சோழதேவனது 7–வது ஆண்டில் வயலூர் திருக்கற்றளிப் பெருமான் கோயிலில், மூன்றுகாலப் பூசையின் போது இரண்டு சங்குகள் ஒலிப்பதற்காக 10 கழஞ்சு பொன் தேவதானமாக வழங்கப்பட்டது. இத்தொகை நிலமாக மாற்றி வைத்துக் கொள்ளப்பட்டது.

7. கோவிராஜ கேசரிவர்மனின் 7–வது ஆண்டில் கோவிலின் இரு நந்தவனங்களையும் காத்து வந்தோருக்காக ஊரார் இறைநீக்கித் தேவதானமாக நிலம் நிவந்தம் செய்து கொடுத்தனர்.

8. காந்தளூர்ச் சாலையில் கலம் அழித்த கோவிராஜராஜ கேசரிவர்மனுடைய 11–வது ஆண்டில் கோவில் வேலை யாட்கள் இருவர், ஒரு பெண்மணியிடமிருந்து பெற்றுக் கொண்ட பணத்திற்காக இறைவனுக்கு நிசதம் நெல் செலுத்த ஒப்புக் கொண்டமை.

9. இராஜராஜ சோழனுடைய 24–வது ஆண்டில் ஊரார், தினையன் ஊரானுக்கு வயலூர்த் திருப்பதியம் பாடுவதற்காக வேண்டிய நிலம் பெற்றுக் கொடுத்தமை.

10. கோவிராஜ கேசரிவர்மனுடைய 7-வது ஆண்டில் ஊரார், கோயில் விளக்கெரிப்பதற்காக அழிஞ்சில் கந்தன் என்பவனின் மகள் கந்தன் சாத்திக்கு இறை நீக்கி நிலம் நிவந்தம் செய்து கொடுத்தமை.

11. கோவிராஜ கேசரிவர்மனுடைய 7-வது ஆண்டில் ஒரு நந்தா விளக்கெரிக்க, ஊரார் வயலூர் எட்டி, வேட்டான் சேந்தன் என்பவன் மகளாகிய சேந்தன் காரியிடம் பெற்ற பணத்திற்கு இறைநீக்கித் தேவதானமாக நிலம் கொடுத்தமை.

12. மதுரையும் ஈழமும் வென்ற கோப்பர கேசரிவர்ம னுடைய 41-வது ஆண்டில், திருப்பதியம் பாடுவதற்காகவும், தென்கரைப் பிரமதேயம நந்திவர்ம மங்கலத்தைச் சேர்ந்த, சந்திரசேகரன் அரமையிந்தன் என்பவன் 3 பெண்களை அளித்தமை.

13. கோப்பர கேசரிவர்ம ராஜேந்திர சோழதேவன் தனது 4-வது ஆண்டில் திருக்கற்றளிப் பெருமானுக்குப் பொற் பூவளித்தது. மாறன் நக்கன் எனப்படும் செப்பியன் உறையூர் நாடுகிழவன், கோயிலுக்கு நிலம் அளித்தமையை மற்றோர் கல்வெட்டு தெரிவிக்கினறது.

14. கோப்பர கேசரி வர்மனது 15-வது ஆண்டில் இறைவி உமா பட்டரக்கியை, சேந்தன்காரி தம் மகளாகக்

கொண்டு, இறைவனுக்குத் திருமணம் செய்வித்து சீதனமாகக் கொடுத்த பொருளைக் கொண்டு நிலம் வாங்கி அளித்தமை.

15. கோப்பர கேசரிவர்மன் காலத்தில் விஷு சங்கராந்தி யின் போதும் (தமிழ் வருடப் பிறப்பு), வைகாசி மாதத் திருவிழாவின் போதும் விளக்கெரிக்கவும், வழிபாட்டுக்காக வும், பயன்படுத்துவதற்காக நிலம் அளித்தமை. இக் கல்வெட்டு, ஊரின் மேற்கே அமைந்துள்ள அம்பலத்தைப் புதுப்பிப்பதற்காக நிலம் அளித்தமையையும் குறிக்கின்றது.

16. பரகேசரி வர்மனது 7-வது ஆண்டில் வயலூர்ப் பெருமான் கோயிலுக்கு நந்தா விளக்கெரிக்க ஊரார் 7 கழஞ்சரைப் பொன்கொண்டு நிலம் தேவதானமாகக் கொடுத்தமை.

17. கோப்பர கேசரிவர்மனின் 7-வது ஆண்டில் திருக்கற்றளிப் பெருமானுக்கு, தோடப்பெராள் என்பாள் அளித்த பணத்திற்கு ஊரார் நிலம் தேவதானம் செய்து கொடுத்தமை.

18. திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்கசோழ தேவனின் 2-வது ஆண்டில் விளக்கெரிப்பதற்காக நிலம் அளித்தமை.

19. கோவிராஜ கேசரி வர்மன் 6-வது ஆண்டில் ஊரார் கோயிலுக்கு நிலம் விற்றுக் கொடுத்தமை.

20. மதுரைகொண்ட கோப்பர கேசரிவர்மனின் 7-வது ஆண்டில் வயலூர் உடையார் மறப்பிலிக்கு ஊரார் நிலம் விற்றுக் கொடுத்தது.

நெஞ்சம் மறக்காத நினைவு

வயலூர் வள்ளல் அருளியலில் களித்த அருணகிரிநாத சுவாமி ஸ்தலம் தோறும் சுற்றி பெம்மான் முருகனைப் புகழ்ந்து போற்றி திருப்புகழ் பாடுகின்றார்.

வாவென அழைத்து அருள்தந்து, உலகம் உள்ளவரை, தமிழ் அறிந்த உள்ளங்கள் பாடிப்பாடி பரவசம் அடைந்து பரமன் அடிசேர, பக்தியும், திருவடிப் பேற்றையடைய யுக்தியும், தரும் திருப்புகழைப் பாடும் திறம் தந்த வயலூர் இறைவனை நினைக்கின்றார் அருணகிரிநாத சுவாமிகள்.

நெஞ்சம் மறக்காத நினைவு, தஞ்சம் அடைந்தவனை தனக்கு உகந்தவனுக்கிய கருணையை நினைத்து, வயலூரா, வயலூரா என்று முத்துப் பதித்தது போல வாயார கவியாரத்தில் பதித்துப் பாடுகின்றார் அருணகிரிநாத சுவாமிகள்.

பற்பல ஸ்தலங்களில் பாடல்களின் இடையில் வயலூர் முருகனை வைத்து வழிபட்ட அருணகிரி சுவாமிகளின் நன்றிப் பெருக்கை நினைக்கும்போது உள்ளம் களியுவகை கொள்ளுகிறது.

துள்ளிவரும், செந்தமிழில் வயலூர் வள்ளல் திருப்புகழ் வரும் இடங்களைத் தொகுத்துப் பார்ப்பது நமக்கு லாபம் தானே ? தொகுத்ததை சுவைத்துப் பார்ப்போம்.

சிராப்பள்ளி

எங்குமாய் குறைவற்றுச் சேதன அங்கமாய்ப்
பரிசுத்தத் தோர் பெறும், இன்பமாய்ப் புகழ்
முப்பத்தாறின் முடிவேருய்
இந்திரகோட்டி மயக்கத் தான்மிக மந்த்ர
மூர்த்த மெடுத்துத் தாமதமின்றி
வாழ்த்திய சொர்க்கக் காவல வயலூரா !

அமரர் முதலன்பர் முனிவர்கள் வணங்கி
அடிதொழ விளங்கும் வயலூரா !

விராலிமலே

வந்த தானவர் சேனே கெடிபுக
இந்திர லோகம் விபூதர் குடிபுக
மண்டுபூத பிசாசு பசிகெட
மயிடாரிவன் கண் வீரி பிடாரி
ஹரஹர சங்கராவென மேருகிரி
தலேமண்டு தூளெபு வேலே உருவிய வயலூரா !

வேயால் அநேக விதப்ப சுத்திரள்
சாயாமல் மீள அழைக்கும் அச்சுதன்
வீருன மாமன் என படைத்தருள் வயலூரா !

பாலா காலார ஆமோத லேப பாடீரவாக
அணிமீது பாதாள பூமி யாதார
மீனபாணீய மேலே வயலூரா !

திருவானேக்கா

சுவர்க்க லோக மீகாம சமஸ்தலோக பூபால
தொடுத்த நீப வேல்வீர வயலூரா !
வாச களப வாதுங்க மங்கல
வீர கடக புயமந்த்ர தந்திர
வாகை பெருகு புயதுங்க புங்கவ வயலூரா !

பழநி

பதித்த மரகதத்தினுடன் இரத்னமணி நிரைத்தபல
பணிப் பனிரு புயக் கயில
பரக்கவே இயல்தெரி வயலூரா!

பருத்த தோகையில்வரு முருகேசனே
பரக்கவே யியல்தெரி வயலூரா!

ஏழ்தலம் புகழ் காவேரியால் விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பீர நாடாளு நாயக வயலூரா!

விஜயமங்கலம்

உணர் சிறந்த சக்ராதார நாரணன் மருக
மந்திரக் கா பாலியாகிய
உரக கங்கணப் பூதேசர் பாலக வயலூரா!

திருப்பாண்டிக் கொடுமுடி

மாந்தர்க்கு அமரர்கள் வேந்தற் கவரவர்
வாஞ்சைப் படியருள் வயலூரா!

திருப்போரூர்

கோழி சிலம்ப நலம் பயின்ற
கலாபம் நடஞ்செய மஞ்சு 'தங்கிய
கோபுரமெங்கும் விளங்கும் வயலூரா!

திருச்செந்தூர்

குறவர் தங்கள் பிரானே மாமரம்
நெறு நெறென் றடிவேரோடே நிலை
குலைய வென்றிகொள் வேலே ஏவிய வயலூரா!

திருப்பரங்குன்று

பஞ்சரங் கொஞ்சுகிளி வந்துவந்து ஐந்துகர
பண்டிதன் தம்பியெனும் வயலூரா !

தென்சேரிகிரி

வண்டாடத் தென்றல் தடமிசை
தண்டாதப் புண்ட ரிகமலர்
மங்காமற் சென்று மதுவை செய் வயலூரா !

திருநாகேச்சரம்

வேரோடு வீழத் தறித் தடுக்கிய
போராடு சாமர்த்தியத் திருக்கையில்
வேலாயுதா மெய்த் திருப்புகழ்ப் பெறு வயலூரா !

பொது

குருந்தி லேறுங் கொண்டலின் மருகபொன் வயலூரா
குரங் குலாவுங் குன்றுறை குறமகள் மணவாளா !

களிமயில் தனில்புக் கேறு தாட்டிக
அழகிய கனகத் தாம மார்த் தொளிர்
கனகிரி புயமுத் தார மேற்றருள் வயலூரா !

மூஅ கானகத்துமீது வாழ்முத்த மூரல்
வேடிச் சிதனபாரம் மூழ்கும் நீப
ப்ரதாப மார்புற்ற மூலனே வெற்றி வயலூரா !

பாலம் பால்மண நாறுகா லங்கே யிறிலாத
மாதம் பாதரு சேய வயலூரா !

வெண்பட்டுப் பூணல் வரணகமு
தெண்பட்டுப் பாளை விரிபொழில்
விஞ்சிட்டுச் சூழ வெயில் மறை வயலூரா !

மானுற திறத்தைக் காட்டி
வேடுவர் புனத்திற் காட்டில்
வாலிபம் விளைத்துக் காட்டும் வயலூரா!

நிணத்திற் றுளைந்த வடிவேலா
நிலத்திற் பொலிந்த வயலூரா!

பாலா கலார ஆமோத லேப
பாடீர வாக அணிமீதே
பாதாள பூமி ஆதார மீன
பானீய மேலே வயலூரா!

பெருங்குடி

பெலங்கொடு விலங்கலு, நலங்க வயில்
கொண்டெறி ப்ரசண்ட கரதண்டமிழ் வயலூரா!

திருப்புக்கொளியூர்

உக்கிர வீராறு மெய்ப்புயனே நீல
உற்பல வீராசி மணநாற
ஒத்த நிலா வீசு நிற்றில நீராவி
உற்பல நீர் வாவி வயலூரா!

திருச்செங்கோடு

பைம் பொற் பதக்கம் பூட்டிய
அன்பற் கெதிர்க்குங் கூட்டலர்
பங்கப்படச் சென்றோட்டிய வயலூரா!

அழைத்து உன் சீர்கழற் செந்தாமரை
அடுக்கும் போத முடையோராம் சிலர்க்கு
அன்றே கதி. பலிக்கும் தேசிக
திருச்செங்கோபுர வயலூரா!

எட்டிக்குடி

முத்தமிழ் வித்வ விநோதா கீதா
மற்றவ ரொப்பில ரூபா தீபா
முத்திக் கொடுத்தடியார் மேல்
மாமல் உறு வோனே
இக்கு நிரைத்த விராலூர் சேலூர்
செய்ப் பழநிப்பதி யூரா வாரூர்
மிக்க விடைகழி வேடூர் தாரூர் வயலூரா!

பேரூர்

மிச்சரோருக வச்ர பானியன்
வேதா, வாழ்வே நாதா கீதா வயலூரா!

கரூர்

அகிலாகம வித்தகனே துகலிற்றவர்
வாழ் வயலித் திருநாடா.



செங்குறுணி பாத்தியம்

வயலூர் திருக்கோயிலுக்கு மன்னர்களாலும், மற்றவர் களாலும், மான்யமாக வழங்கப்பட்டிருந்தது நிலம்.

சுப்பிரமணிய சுவாமி பேரில் இருந்த நிலத்தை ஒரு சுப்பிரமணிய முதலியார் என்பவர் தன் பெயருக்கு பட்டா மாற்றி கிரையம் செய்து விட்டார்.

இந்த அடாத செய்கையைத் தடுத்து நிறுத்த எவரும் முன்வரவில்லை. அப்பொழுது வயலூர் கோயிலில் அத்யயன பட்டராக இருந்த நரசிம்ம அய்யர் என்பவரும், கோயிலில் நாதசுரம் வாசித்து வந்த இசை வேளாள பக்தர் ஒருவரும் சேர்ந்து, சுப்பிரமணிய முதலியார் செய்கையை எதிர்த்து கும்பகோணம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள்.

வழக்குத் தொடர்ந்தும் என்ன ? வருடங்கள் பல ஆயின. விசாரணைக்கு வரவில்லை. போக்குவரத்து வசதியில்லாத காலம். கால்நடையாக கும்பகோணம் கோர்ட்டுக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள். வழக்குத் தொடுத்தவர்கள், அவர்களுக்கோ தளர்ந்த வயது. பிரயாணம் செய்வது கடினமாக இருந்தது.

வழக்கம்போல் விசாரணைக்கு வருமாறு உத்தரவு வந்தது. கோர்ட்டுக்குப் புறப்படுமுன் சுவாமி சந்நிதியில் நின்று பிரார்த்தனை புரிந்தார்கள்.

எம்பெருமானே, எங்களுக்காக இந்த வழக்கை நாங்கள் தொடுக்கவில்லை. நித்தியபடி பூசனை தவருமல் நடக்க வேண்டுமே என்ற கவலையால் வழக்கைத் தொடுத்தோம். வயது முதிர்ந்த காலத்தில் கோர்ட்டுக்கு நடக்க எங்கள் உடலில் வலுவில்லை. தாங்களே நீதிபதியிடம் தெரிவிதது வழக்கை இந்தத் தடவை விசாரித்து நீதிவழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டு கும்பகோணத திற்குப் புறப்பட்டுப் போனுர்கள்.

காலை பத்துமணிக்கு கோர்ட்டுக்கு வரும் நீதிபதி எட்டு மணிக்கே கோர்ட்டுக்கு வந்து விட்டார். சிப்பந்திகள் எல்லாம் திகைத்தார்கள். நீதிபதி குமாஸ்தாவை அழைத்து வயலூர் கோயில் வழக்கு சம்பந்தமான கட்டுகளைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டார்.

வழக்கு விவரம் முழுவதும் படித்து அறிந்தார். பராதீனம் செய்யப்பட்டிருந்த அவலத்தைக் கண்டறிந்தார். நிலத்தை மீட்பதென்றால் வாங்கிய ஒவ்வொருவர் மீதும் தனி வழக்குப் போட வேண்டியிருக்குமே என்று கவலைப்பட்டார். காரணம் என்ன தெரியுமா ?

முதல்நாள் இரவு வயலூர் முருகன் நீதிபதியின் கனவில் தோன்றி வழக்கு விபரத்தைக் கூறி அடியார் இருவர் சொல்லு கின்றபடி தீர்ப்பு நாளையே வழங்குமாறு தெரிவித்தாராம்.

அடியார் இருவரை அழைத்து நீதிபதி தான் கனவு கண்டதைக் கூறி இருக்கின்ற சிக்கலைத் தெரிவித்து எப்படி தீர்ப்புக் கூறுவது என்று கேட்க, வயலூர் கிராமத்தைப் பொறுத்தமட்டில் செய்க்கு குறுணி நெல் ஒவ்வொரு நில்வுடமைக்காரரும் கோயிலுக்கு வழங்க வேண்டும்.

அதாவது செய் ஒன்றுக்கு ஒருபோக நன்செய்க்கு 36 படி கொண்ட கலம் ஒன்றும், 10 மரக்கால் நெல்லும் இருபோக நன்செய்க்கு இரண்டு கலம் பத்து மரக்கால் நெல அளக்க தீர்ப்பு செய்யுமாறு வேண்டினார்கள்.

நீதிபதி அவ்வாறே தீர்ப்பு அளித்து கிராம மக்களுக்கும் நிலவுடமை பெற்றிருந்தவர்களுக்கும் இந்த தீர்ப்பின் விபரத்தை அறிவிக்குமாறு ஆணையிட்டார்.

நிலவுடமைபடைத்திருந்தவர்கள் தீர்ப்பு செயிக்கு குறுணி என்று இருப்பதால் செய் ஒன்றுக்கு குறுணி நெலதான் கொடுப்போம் என்று வாதிட்டார்கள்.

அந்த சமயம் குளித்தலையில் கோர்ட் ஆரம்பிககப்பட்டு வழக்குகள் குளித்தலையிலேயே விசாரணை செய்யப்பட்டு வந்தது. வழக்குத் தொடுத்த இருவரும் மீண்டும் கும்பகோணம் கோர்ட் தீர்ப்பை அமுல் செய்யுமாறு குளித்தலை கோர்ட்டில் வழக்குத் தொடுததார்கள்.

குளித்தலை கோர்ட்டில் 1864-ஆம் ஆண்டு, குமார வயலூர் கிராமத்தில் உள்ள நிலங்களில் ஒருபோக நன்செய் செய் ஒன்றுக்கு 36 படி கொண்ட ஒருகலம் பத்து மரக்கால் நெல்லும், இருபோக நன்செய்க்கு செய் ஒன்றுக்கு இரண்டு கலம் பத்து மரக்கால் நெல்லும் கணடிப்பாக கோயிலுக்கு அளக்கவேண்டும். நிலத்தை வாங்குபவரும் விற்பவரும இந்த ஏற்பாட்டின்படியே தான் நிலததை கிரயம் செய்வதோ வாங்குவதோ செய்ய வேண்டுமென உத்தரவு கோர்ட் வழங்கியது.

தீர்ப்பு கிடைத்த பிறகு, இந்த தீர்ப்பின் அடிப்படையில் வருடா வருடம் நெல் அளப்பதற்குப் பதிலாக கோயிலுக்கு சர்வ மான்யமாக நிலத்தை சிலர் எழுதி வைத்தார்கள். இந்த வகையில் இன்று கோயிலுக்கு சர்வ மான்யமாக 23 ஏக்கர் நிலம் இருந்து வருகிறது.

செய் குறுணி திட்டத்தின்படி குமாரவயலூர் கிராமத்தில் 192 ஏக்கர் நிலத்திலிருந்து செய் குறுணி என்ற நியதியில் தீர்ப்பின்படி வருவாய் கிடைத்து வருகிறது.

இந்த ஆச்சரியமான தீர்ப்பும், வழக்கமும் குமாரவயலூர் கிராமத்தில் இன்றும் அமுலில் இருந்து வருகிறது. வேறு எங்கும், எவ்விடத்தும் இந்த வழக்கம் இருப்பதாகத் தெரிய வில்லை. இறைவன் ஆலயத்துக்காக வயது தளர்ந்த காலத்தும் வாதாடி வழக்காடிய அந்த இரு பெருமக்கள் செய்த திருத்தொண்டு நெஞ்சம்விட்டு நீங்காத நினைவாக என்றும் நிலைத்து நிற்கிறது.

உண்மை உழைப்புக்கு வயலூர் வடிவேலன் தூது சென்று நீதியைக் காத்து நிலமீட்டிய வரலாறு சிந்திப்பவர் சிந்தனையில் என்றும் நிலைத்து நிலைபெறும். அந்த அருள் அடியார் இருவர் ஆவியும் ஆண்டவன் திருவடி கமலத்தில் நின்று என்றும் ஒளியுடன் பிரகாசித்து விளங்குகின்றது. நாமும் அவர்கள் இருவரையும் வாழ்த்தி வணங்குவோம்.



வயலூர் ஆலயத்தின் தோற்றம்

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

வாரியார் சுவாமிகள்

அருள்மொழியரசு, சரஸ்வதி கடாக்ஷாம்ருத ஷட்பதானந்தா, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் வாழும் காலத்தில் நாமும் வாழ்ந்து வருகிறோம் என்பது நமது பிறவிக்குக் கிடைத்த பெரும் பேறு.

எங்கும் நிறைந்த முருகப்பெருமான் வயலூர் ஸ்தலத்தில் தமக்கு அருள்புரிந்தான் என்று தமிழ் கூறும் நல்லுலகு பூராவிலும் சென்ற நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக முழக்கி வருகின்ற அருளாளர் வாரியார் சுவாமிகள்.

வயலூரைப் பற்றி தமிழ் மக்கள் அறியும்படி செய்தவர் வாரியார். வயலூரை நினைக்கும்படி செய்தவர் வாரியார். நான் அன்றுடம் வழிபட்டு வரும் வயலூர் முருகப் பெருமான் திருவடிகளை வணங்கி சொற்பொழிவைத் தொடங்குகிறேன் என்று முன்னுரை மொழிந்தே வாரியார் சுவாமிகள் சொற்பொழிவைத் தொடங்குவார்கள்.

அருணகிரிநாத சுவாமி என்று வாயார வாரியார் சுவாமி, திருப்புகழ் தந்த செல்வரைப் போற்றுவார். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பாடல்களை ஒன்று திரட்ட வாரியார் சுவாமி எடுத்துக்கொண்ட முயற்சிகள் பற்பல. அருணகிரி யாரின் அமுத தமிழுக்கு, பதவுரை, தெளிவுரை, கருத்துரை

காண திருப்புகழ் அமிர்தம் என்னும் பத்திரிகையை வாரியார் சுவாமிகள் வெளியிட்டு வருகிறார்கள். அருணகிரி சுவாமியையும் வயலூர்முருகனையும் நமக்கெல்லாம் ஆற்றுப்படுத்தியவர் வாரியார் சுவாமிகள்தான்.

வாரியார் சுவாமிகள் நடமாடும் பல்கலைக் கழகம், தமிழ்க் கடல். லட்சோப லட்சம் மககள் அவரது கம்பீரமான குரலுக்கும் அதிலிருந்து அருவி வேகத்தில் துள்ளிவரும் செந்தமிழ்ச் சொற்களுக்கும் அடிமையானார்கள். திருப்புகழ் பாடி செந்தமிழர் சிந்தையெல்லாம் வலுவடைய வேண்டு மென்பது வாரியார் சுவாமிகள் விருப்பம்.

தெய்வநெறி காட்டி, செந்தமிழ் மக்களை ஊக்கி, வயலூர் வள்ளலை ஆற்றுப்படுத்தி அருணகிரி பெருமானின் அமுதத் தமிழை ஊட்டி, அறுமுகவன் திருவடிகளை அடைவிக்க தமிழகத்திற்கு ஒரு தெய்வத் திருமகனை ஈன்றளித்த பெருமை வாரியார் சுவாமிகளின் தாய்-தந்தையருக்கு உரியது.

வாரியாருக்கு பெயர் சூட்டி மகிழ்ந்தார்களே அந்த சிறப்பை எண்ணி பூரிக்காத தமிழ் உள்ளம் இன்று உண்டா? கிருபானந்த வாரியார் என்ற பெயரை பெற்றோர் சூட்டினார் கள். "திருமுருக" என்ற சிறப்பை அனுபவித்த உள்ளம் சேர்த்து வழங்கியது.

திருமுருகன் கிருபையை தமிழ் மக்களுக்கு ஆனந்தமாக வாரி வழங்கும் வள்ளல் வாரியார் சுவாமிகள் என்று அவரது பெயரே, செயலை எடுத்துக் காட்டுவதாக அமைந்து விட்டது.

ஆறுக மட்டும் இருந்தால் நதியின் கரை மருங்கில் இருக்கும் இடஙகளுக்கு மட்டும் நீர் பாய்ச்சி செழுமையை நல்கும். இது ஆனந்தவாரி, காடுமேடெல்லாம் கருணை வெள்ளம் பாய்ச்சி புன்செய்யெல்லாம் நன்செய் வயலாக்கி பக்திப்பயிர் வளர்த்து அருள்ஞானம் விளைவிக்கும் அவதார புருஷராக வாரியார் சுவாமி விளங்கி வருகின்றார்கள்.

வாரியார் சுவாமிகளின் குடும்பத்தார் 1933-ஆம் ஆண்டு கதிர்காம யாத்திரை சென்று வந்தார்கள். 1934-ல் திருச்செந்தூரிலிருந்து முருகன் வதியும் திருத்தலங்கள் தோறும் சென்று திருப்புகழ்பாடி வழிபாடு நடத்தி வருவதென்ற நோக்கத்தோடு ஸ்தலயாத்திரை மேற்கொண்டபோது வயலூர் ஸ்தலத்திற்கு வந்து முருகப் பெருமானை வழிபட்டார்கள்.

அன்றைய கோவில் நிர்வாகிகள் பார்வையாளர் புத்தகம் கொண்டுவந்து கொடுத்தார்கள். கோயிலைப்பற்றி அபிப்பிராயம் எழுதி தமது சென்னை முகவரியையும் வாரியார் குறித்திருக்கிறார்.

வயலூர் கோயிலின் அன்றைய அர்ச்சகர் இப்பொழுது உள்ள ஜம்புநாத சிவாச்சாரியார்தான். அர்ச்சனை செய்வதை அற்புதமான ராகத்தோடு கேட்பவர் உள்ளம் இறைவன் திருவடியில் ஒன்றும்படி செய்யவல்ல இசையோடு அர்ச்சனை செய்திருக்கிறார். அதனைக் கேட்டு மகிழ்ந்த வாரியார் சுவாமி அர்ச்சகர் தட்டில் எட்டணா தொகை காணிக்கையாகப் போட்டிருக்கிறார்.

அன்று இரவு தர்மகர்த்தா தோட்டா ராதாகிருஷ்ண செட்டியார் கனவில் ஒரு சந்நியாசி வேடத்தில் ஒருவர் வந்து எட்டணா வாங்கி விட்டாயே ராஜகோபுரம் கட்டமுடியுமா? என்று கேட்டாராம்.

கனவில் வந்தவர் வயலூர் முருகன்தான் என்பது செட்டியார் எண்ணம். எட்டணா எவரிடம் பெற்றோம் என்பது தெரியாமல் தர்மகர்த்தா செட்டியார் திகைத்தார். மறுநாள் வயலூர் கோயிலுக்கு வந்தார். எட்டணா உண்டியலிலோ, வேறு காணிக்கையாகவோ யாராவது கொடுத்தார்களா என்று விசாரித்தார்.

சிறுவராக இருந்தாலும் ஜம்புநாத சிவாச்சாரியார், தன்னிடம் எட்டணா தட்டில் போட்டவரைப் பற்றிய விபரத்தை தர்மகர்த்தா தோட்டா, ராதாகிருஷ்ண செட்டியாரிடம்

தெரிவித்தார். ஐம்புநாத சிவாச்சாரியாரிடமிருந்து எட்டணை திருப்பிப் பெறப்பட்டது.

சமயத்துறையில் இதுவரை எவரும் கேட்டிராத செய்தி, பக்தர் ஒருவர், கோயிலுக்குக் கொடுத்த தொகை, ஏற்றுக் கொள்ள இறைவன் இசையவில்லை என்று மணியார்டர் மூலம் திருப்பி அனுப்பப்பட்ட வரலாறு வாரியார் வரலாற்றில் திருப்பு முனையாக அமைகிறது.

வயலூர் கோயிலிலிருந்து மணியார்டர் வந்தது. வாரியார் திகைத்தார். என்ன சோதனை என்று ஏங்கினார். மாமன்னன் திருப்பணியை ஏற்க மறுத்த வயலூர் வள்ளல் வாரியார் திருப்பணியை ஏற்க இசைந்த திருவுளத்தை எவர் அறிவார்?

திருச்சிராப்பள்ளியில் முனிசிபல் ஆபீஸ் மேனேஜராக இருந்த லோகநாத பிள்ளையவர்கள் வாரியாரின் நண்பர். அவரது வீட்டிற்கு வாரியார் வந்து சேர்ந்தார். வாரியார் வந்த சேதி கேட்டு வயலூர் கோயில் தர்மகர்த்தா தோட்டா. ராதாகிருஷ்ண செட்டியார் வந்து தாம் கனவில் கண்ட நிகழ்ச்சியைத் தெரிவித்தார்.

சென்னை நகரில் உபன்யாசங்களும் பஜனையும் வாரியார் சுவாமி தந்தையாருடன் செய்து கொண்டிருந்த காலம். திருச்சிராப்பள்ளிக்கு வந்து வயலூர் ராஜகோபுரம் கட்ட நிதி திரட்ட முடியுமா என்று வாரியார் சுவாமி திகைத்த சமயம், உறையூர் பிரபல ஜவுளி வியாபாரி திருவாளர் முனிசாமி செட்டியார் அவர்கள் வாரியார் சுவாமிக்கு தாம் உறுதுணையாக இருப்பதாகத் தெரிவித்ததும், வயலூர் ராஜகோபுரம் திருப்பணியைத் தொடங்க வாரியார் சுவாமி முன்வந்தார்.

எகிரி மங்கலம் சாந்தப் பிள்ளை போன்ற பக்தர்களின் உதவி கிடைத்தது. ராஜகோபுரத் திருப்பணி தொடங்கப் பட்டது. திருப்பணிக்காக ஒவ்வொரு அமாவாசை தோறும் திருச்சி மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் வாரியார்

சொற்பொழிவு நடத்துவதென்று முடிவு செய்து திருப்புகழ் தத்துவார்த்த பிரசங்க சபையும் ஆரம்பிக்கப் பெற்றது.

வயலூர் திருப்பணிக்காக வாரியார் வந்து சொற்பொழிவு நடத்தி வசூலாகும் தொகை திருப்பணிக்கு உதவும் காலையில தான் திருவாளர்கள். ஆ. ஆ. பொன்னுசாமி பிள்ளை, சாமிகண்ணு பிள்ளை, சோமு பிள்ளை, வேலு பிள்ளை, நாச்சிக் குறிச்சி துரைசாமி நாடார், போன்ற மெய்யன்பர்கள் வாரியாரின் நண்பர்கள் ஆனார்கள.

உறையூர் பிரமுகர் முனிசாமி செட்டியாரின் மேற்பார்வை யில் துறையூர் கலைஞர் சௌந்தரபாண்டிய சிவனார் வயலூர் ராஜகோபுரத்தை அற்புதமாக சிருஷ்டி செய்தார். இந்த ராஜகோபுரத் தோற்றம்தான் இநத நூலின் அட்டைப் படமாக வெளியிடப்பட்டிருக்கிறது.

வயலூர் திருப்பணி வாரியார் தொடங்கியதும் அடிக்கடி திருச்சிராப்பள்ளிக்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. உறையூர் வாரியாரின் கோட்டை ஆகியது. வயலூர் திருப்பணிக்கு வாரியாருடன் ஒன்றுபட்ட அன்பர்கள் அனைவரும் இன்றளவும் வாரியாருடன் பக்தியுடனும் பாசத் தோடும் இருந்து வருகிறார்கள் என்று சொல்லவும் வேண்டுமா ?

வயலூர் முருகன் அருள்பெற்ற வாரியார் தன் முயற்சி ஒன்றையே மூலதனமாக வைத்துத் தொடங்கிய ராஜகோபுரத் திருப்பணி 1937-ல் நிறைவு பெற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அன்றுமுதல் வயலூர் திருக்கோயில் திருப்பணிக்கு வாரியார் சுவாமி நிரந்தர தலைவர் என்பது பிரசித்தமாகி விட்டது.

வயலூர் கோயிலை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கருதி திருப்பணிக்குழு மீண்டும் அமைத்து வேலையைத தொடங்கினார்கள்.

முதல் திருப்பணிக்கு வாரியார் சுவாமிகளுடன் இருந்து செயல்பட்ட திரு. முனுசாமி செட்டியார் அவர்களின் திருமகனுர் திரு. ஜெ. மு. பாலசுப்பிரமணியா அவர்களைச் செயலாளராகக் கொண்டு திருப்பணிக்குழு அமைந்தது.

வயலூர் கோயிலில் ராஜகோபுரத்திற்கு முன்பக்கம், அற்புதமான மண்டபம் அமைக்கப்பெற்று முதல் கோபுரம் ஒன்றும் அமைக்கப்பெற்றது. அலுவலகம் அமைக்கப் பெற்றது.

தெற்கு உட்பிரகாரத்தில், மண்டபங்கள் உயரத் தூக்கி ஒட்டப்பட்டது. வடக்குப் பிரகாரத்தில் தியான மண்டபம் அமைக்கப்பெற்றது. மராமத்தும், கோபுரங்கள் அனைத்தும் புதுமை செய்யப் பெற்றது. சுமார் நான்கு லட்ச ரூபாய் செலவில் திருப்பணி வாரியார் சுவாமி தலைமையில் நிறைவு செய்யப்பெற்றது.

பக்தர்கள் வந்தால் தங்கியிருந்து வழிபட விருந்தினர் விடுதிகளும் திருப்பணியில் கட்டி முடிக்கப்பெற்றது.

1969-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19-ஆம் தேதி வியாழக்கிழமை ஸ்ரீ வள்ளிநாயகி தேவகுஞ்சரி சமேத அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிக்கும், ஆதிநாயகி சமேத ஆதிநாதர், பொய்யாக் கணபதி ஆலய அஷ்டபந்தன கும்பாபிஷேகம் சிறப்புடன் வாரியார் சுவாமி முன்னின்று நடத்தி வைத்தார்கள்.

வாரியார் சுவாமிகளின் தமையனுர் ஸ்ரீ மறைஞான சிவம் சுவாமிகள் வயலூரில் தங்கியிருந்து திருப்பணி வேலைகளை ஊக்கி மேற்பார்வையிட்டு செம்மையாக செய்து முடித்தார்கள்.

வாரியார் சுவாமி எங்கு சென்றுலும் மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு வணங்கி திருநீறு பெறுவது வழக்கமாகி விட்டது.

வாரியார் சுவாமிகளை ஒருமுறை வணங்குகின்றவர்கள் வயலூர் முருகனையும், அருணகிரிநாத சுவாமிகளையும், அத்துடன் வாரியார் சுவாமிகளையும் சேர்த்து வணங்கிய பலன் பெறுகிறார்கள். வாரியார் நெஞ்சில் வயலூர் முருகனும், வாக்கில் அருணகிரிநாதரும்தானே என்றும் நிலவுகின்றார்கள்.

வாரியார்சுவாமிகள் ஆஸ்திக மக்களின் தானைத்தலைவர். அவர் இட்ட கட்டளையை ஏற்று நடத்த லட்சோப லட்சம் மக்கள் தமிழகத்தில் இருக்கிறார்கள். வாரியார் சுவாமி புலவர்கள் போற்றும் பெரும் புலவர். அருளாளர்கள் போற்றும் அருளாளர். வள்ளல்கள் கண்டு மயங்கும் வள்ளல்.

அவர் கல்விக்கடல். எளியோரிடத்தும், கல்லாதவர்கள் இடத்துங்கூட வேறுபாடோ, மாறுபாடோ இன்றிப் பழகும் வாரியார் சுவாமிகளின் அருள் பழுத்த நெஞ்சம்.

வயலூரும்—வாரியார் சுவாமிகளும் பிரிக்க முடியாத பிணைப்பு. வாரியாரும் தமிழ் மக்கள் நெஞ்சமும் ஒன்று கலந்த இணைப்பு.

கிருபானந்த வாரியார் சுவாமிகள்

தினசரி பூசையும் திருவிழாக்களும்

வயலூர் கோயிலில், காலைசந்தி, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களிலும் அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெறுகின்றன.

வயலூரில் கார்த்திகை, சஷ்டி ஆகிய நாட்களில் விசேஷ, அபிஷேக, அலங்கார ஆராதனைகளுடன் சுவாமி திருவீதி உலாக் காட்சிகளும் நடைபெறுகின்றன.

வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் பாற்குட அபிஷேகம் பிரசித்தமானது. தமிழ்ப் புத்தாண்டு தினத்திலும், தை அமாவாசை, மாசிக் கார்த்திகை, பங்குனி உத்திரம் ஆகிய தினங்களில் மஹாபிஷேகம் நடைபெறுகிறது.

வயலூர் முத்துக்குமாரசாமி தைப்பூசத்தன்று சோமரசம் பேட்டைக்கு எழுந்தருள் செய்கிறார்.

ஆடி அமாவாசை, தைப்பூசம், பங்குனி உத்திரம் ஆகிய நாட்களில் முருகப் பெருமான் சர்ப்ப நதிக்கு எழுந்தருள் செய்து தீர்த்தப் பிரசாதம் வழங்குகின்றார்.

வைகாசி மாதம் பிர்ம்மோத்சவம் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது.

ஆனி மாதம் மூல நட்சத்திரத்தில் திருப்புகழ் தந்த அருணகிரிநாத சுவாமிக்கு சிறப்பாக உற்சவம் நடத்தப் பெறுகிறது.

ஆவணி மாதத்தில் விநாயக சதுர்த்தி உற்சவமும், புரட்டாசி மாதம் நவராத்திரி உற்சவமும், சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஐப்பசி மாதம் கந்தசஷ்டி உற்சவம் சமீப ஆண்டுகளில் மிகமிக சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த உற்சவத்திற்காகவே, குமாரவயலூர் கந்தசஷ்டி விழாக் கழகம் என்ற கழகம் அமைக்கப்பெற்று இன்னிசைக்கலைஞர்களும், அறிஞர் பெருமக்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் பெருவிழாவாக இவ்விழா அமைகிறது. கழகத்தின் உறுப்பினராக 111 ரூபாய் கொடுத்து அங்கத்தினர்கள் சேர்ந்து வருகிறார்கள்.

கார்த்திகை மாதம் தீபஉற்சவம் மிக சிறப்பான முறையில் நடைபெறுகிறது. மார்கழி மாதம் திருவாதிரை உற்சவமும், மாசிமக உற்சவமும் சிறப்பாக வயலூரில் நடைபெற்று வருகிறது.

வயலூர் சுந்தரத் தாண்டவ மூர்த்தியின்
பின்புறத் தோற்றம்

உ

ஓம் முருகா!

வயலூர் திருப்புகழ்

1

என்னால் பிறக்கவும் என்னா லிறக்கவும்
என்னால் துதிக்கவும் கண்களாலே
என்னா லழைக்கவும் என்னால் நடக்கவும்
என்னா லிருக்கவும் பெண்டிர்வீடு

என்னால் சுகிக்கவும் என்னால் முசிக்கவும்
என்னால் சலிக்கவும் தொந்தநோயை
என்னா லெரிக்கவும் என்னால் நினைக்கவும்
என்னால் தரிக்கவும் இங்குநானார்

கன்னா ருரித்தஎன் மன்னா எனக்குநல்
கர்ணா மிர்தப்பதம் தந்தகோவே
கல்லார் மனத்துட னில்லா மனத்தவ
கண்ணா டியிற்றடம் கண்டவேலா

மன்னான தக்கனை முன்னாள்மு டித்தலை
வன்வாளி யிற்கொளும் தங்கருபன்
மன்னா குறத்தியின் மன்னா வயற்பதி
மன்னா மூவர்க்கொரு தம்பிரானே

2

கடல்போற் கணைவிழி சிலைபோற் பிறைநுதல்
கணிபோற் றுகிரிதழ் எழிலாகும்
கரிபோற் கிரிமுலை கொடி போற் றுடியிடை
கடிபோற் பணியரை யெனவாகும்

உடல்காட் டினிமையி லெழில்பாத் திரமிவ
ளுடையாற் கெறுவித நடையாலும்
ஒருநாட் பிரிவது மரிதாய்ச் சுழல்படும்
ஒழியாத் துயரது தவிரேனோ

குடலீர்த் தசுரர்க ளுடல்காக் கைகள்நரி
கொளிவாய்ப் பலஅல கைகள் பேய்கள்
கொலைபோர்க் களமிசை தினமேற் றமரர்கள்
குடியேற் றியகுக வுயர்தாழை

மடல்கீற் றினிலெழு விரைபூப் பொழில்செறி
வயலூர்ப் பதிதனி லுறைவோனே
மலைமேற் குடியுறை கொடுவேட் டுவருடை
மகள்மேற் ப்ரியமுள பெருமாளே.

3

கமலத் தேகு லாவு மரிவைநய
நிகர்பொற் கோல மாதர் மருள்தரு
கலகக் காம நூலை முழுதுண ரிளைஞோர்கள்
கலவிக் காசைகூர வளர்பரி
மளகற் பூர தூம கனதன
கலைத் தாலும் வானி னசையுமி னிடையாலும்

விமலச் சோதிரூப இமகர
வதனத் தாலு நாத முதலிய
விரவுற் ருறு கால்கள் சுழலிருள் குழலாலும்
வெயிலெப் போதும் வீசு மணிவளை
அணிபொற் றேள்க ளாலும் வடுவகிர்
விழியிற் பார்வை யாலு மினியிடர் படுவேனோ

சமரிற் பூதம் யாளி பரிபிணி
கனகத் தேர்கள் யானை யவுணர்கள்
தகரக் கூர்கொள் வேலை விடுதிற லுருவோனே
சமுகப் பேய்கள் வாழி யென எதிர்
புகழக் கானி லாடு பரிபுர
சரணத் தேக வீர அமைமன மகிழ்வீரா

அமரர்க் கீச ஞன சசிபதி
மகள் மெய்த் தோயு நாத குறமக
ளணையச் சூழ நீத கரமிசை யுறுவேலா
அருளிற் சீர்பொ யாத கணபதி
திருவருக் கீசன் வாழும் வயலியி
னழகுக் கோயில் மீதில் மருவிய பெருமாளே.

4

கமையற்ற சீர்கேடர் வெகுதர்க்க கோலாலர்
கலையுற்று மாயாது மந்த்ரவாதக்
கடைகெட்ட ஆபாத முறுசித்ர கோமாளர்
கருமத்தின் மாயாது கொண்டுபூணுஞ்

சமயத்த ராசார நியமத்தின் மாயாது
சகளத்து ளேநாளு நண்புளோர்செய்
சரியைக்ரி யாயோக நியமத்தின் மாயாது
சலனப்ப டாஞானம் வந்துதாராய்

அமரிற்சு ராபான திதிபுத்ர ராலோக
மதுதுக்க மேயாக மிஞ்சிடாமல்
அடமிட்ட வேல்வீர திருவொற்றி யூர்நாதர்
அருணச்சி காநீல கண்டபார

மமபட்ச மாதேவ ரருமைச்சு வாமீநி
மலநிட்க ளாமாயை விந்துநாதம்
வரசத்தி மேலான பரவத்து வேமேலை
வயலிக்குள் வாழ்தேவர் தம்பிரானே.

5

குருதி கிருமிகள் சலமல மயிர்தசை
மருவு முருவமு மலமல மழுகொடு
குலவு பலபணி பரிமள மறுசுவை மடைபாயல்
குளிரி லறையக மிவைகளு மலமல
மனைவி மகவனை யநுசர்கள் முறைமுறை
குனகு கிளைஞர்க ளிவர்களு மலமல மொருநாலு

சுருதி வழிமொழி சிவகலை யலதினி
யுலக கலைகளு மலமல மிலகிய
தொலைவி லுனைநினை பவருற வலதினி யயலார்பால்
சுழல்வ தினிதென வசமுடன் வழிபடு
முறவு மலமல மருளலை கடல்வழி
துறைசெ லறிவிலை யெனதுள மகிழ்வுற அருள்வாயே

விருது முரசுகள் மொகுமொகு மொகுவென
முகுற ககபதி முகில்திகிழ் முகடதில்
விகட இறகுகள் பறையிட அலகைகள் நடமாட
விபுத ரரகர சிவசிவ சரணென
விரவு கதிர்முதி ரிமகரன் வலம்வர
வினைகொள் நிசிசரர் பொடிபட அடல்செயும் வடிவேலா

மருது நெறுநெறு நெறுவென முறிபட
வுருளு முரலொடு தவழரி மருகசெ
வனச மலர்சுனை புலிநுழை முழையுடை யவிராலி
மலையி லுறைகிற அறுமுக குருபர
கயலு மயிலையு மகரமு முகள்செநெல்
வயலி நகரியி லிறையவ அருள்தரு பெருமானே.

6

குயிலோமொழி அயிலோவிழி கொடியோஇடை பிடியோநடை
குறியீர்தனி செறியீரினி யென்றுபாடிக்
குனகாவடி பிடியாவிதழ் கடியாநகம் வகிராவுடை
குலையாவல்கு லளையாவிரு கொங்கைமீதிற்

பயிலாமன மகிழ்மோகித சுகசாகர மடமாதர்கள்
பகையேயென நினையாதுற நண்புகூரும்
பசுபாசமு மகிலாதிக பரிபூரண புரணாகர
பதிநேருகி னருளால்மெயு ணர்ந்திடேனோ

வெயில்வீசிய கதிராயிர வருணோதய விருணாசன
விசையேழ்பரி ரவிசேயெனு மங்கராசன்
விசிகாகவ மயில்பேடிகை படுபோது சன்னிதியானவன்
விதிதேடிய திருவாளிய ரன்குமாரா

அயலூருறை மயிலாபல கலைமானுழை புலிதோல்கலை
யகிலாரம தெறிகாவிரி வண்டல்மேவும்
அதிமோகர வயலூர்மிசை திரிசேவக முருகேசுர
அமராபதி யதில்வாழ்பவர் தம்பிரானே.

7

கோவை வாயி தழுக்குந் தாக போக மளிக்குங்
கோதை மாதர் முலைக்குங் குறியாலுங்
கோல மாலை வளைக்குந் தோளி னாலு மணத்தங்
கோதி வாரி முடிக்குங் குழலாலும்

ஆவி கோடி யவிக்குஞ் சேலி னாலு மயக்குண்
டாசை யாயினு நித்தந் தளராதே
ஆசி லாத மறைக்குந் தேடொ ணாதொரு வர்க்கொன்
ருடல் தாள்க ளெனக்கின் றருள்வாயே

சேவி லேறு நிருத்தன் தோகை பாக னளிக்கும்
த்யாக சீல குணத்தன்
தேடொ ணாத பதத்தின் தீதி லாத மனத்தன்
தேயு வான நிறத்தன் புதல்வோனே

காவி டாத திருச்செங் கோடு நாடு தனக்குங்
காவி சூழ் வயலிக்கும் ப்ரியமானாய்
காதி மோதி யெதிர்க்குஞ் சூரர் தீரர் ப்ரமிக்குங்
கால னூடல் தவிர்க்கும் பெருமாளே.

8

தாமரையின் மட்டு வாசமல ரொத்த
தாளிணைநி னைப்பி லடியேனைத்
தாதவிழ்க டுக்கை நாகமகிழ் கற்ப
தாருவென மெத்தி யவிராலி

மாமலையி னிற்ப நீகருதி யுற்று
வாவெனஅ ழைத்தேன் மனதாசை
மாசினைய றுத்து ஞானமுத ளித்த
வாரமினி நித்த மறவேனே

காமனையெ ரித்த தீநயன நெற்றி
காதியசு வர்க்க நதிவேணி
கானிலுறை புற்றி லாடுபணி யிட்ட
காதுடைய அப்பர் குருநாதா

சோமனொ டருக்கன் மீனுலவு மிக்க
சோலைபுடை சுற்று வயலூரா
சூடிய தடக்கை வேல்கொடு விடுத்து
சூர்தலை துணித்த பெருமாளே.

9

திருவு ருப நேராக ழுக லக தான மாமாய
திமிர மோக மாமனுர்கள் கலைமுடுஞ்
சிகிரி யூடு தேமாலை யடவி யூடு போயாவி
செருகு மால ஞசார வினையேனைக்

கருவி ழாது சீரோதி யடிமை பூண லாமாறு
கனவி லாள்சு வாமிநின் மயில்வாழ்வுங்
கருணை வாரி கூரேக முகமும் வீர மாருத
கழலு நீப வேல்வாகு மறவேனே

சருவ தேவ தேவாதி நமசி வாய நாமாதி
சயில நாரி பாகாதி புதல்வோனே
சதம கீவல் போர்மேவு குலிச பாணி மால்யானை
சகச மான சாரீசெ யினையோனே

மருவு லோக மீரேழு மளவி டாவொ ணுவான
வரையில் வீசு தாள்மாயன் மருகோனே
மநு நியாய சோணாடு தலைமை யாக வேமேலை
வயலி மீது வாழ்தேவர் பெருமாளே.

10

நெய்த்த சுரிகுழ லறலோ முகிலோ
பதம நறுநுதல் சிலையோ பிறையோ
நெட்டை யிணைவிழி கணையோ பிணையோ இனிதூறும்
நெக்க அமுதிதழ் கனியோ துவரோ
சுத்த மிடறது வளையோ கமுகோ
நிற்கு மிளமுலை குடமோ மலையோ அறவேதேய்ந்

தெய்த்த இடையது கொடியோ துடியோ
மிக்க திருவரை அரவோ ரதமோ
இப்பொ னடியிணை மலரோ தளிரோ எனமாலாய்
இச்சை விரகுடன் மடவா ருடனே
செப்ப மருளுட னவமே திரிவேன்
ரத்ன பரிபுர இருகா லொருகால் மறவேனோ

புத்த ரமணர்கள் மிகவே கெடவே
தெற்கு நரபதி திருநீ றிடவே
புக்க அனல்வய மிகஏ டுயவே உமையாள்தன்
புத்ர னெனஇசை பகர்நூல் மறைநூல்
கற்ற தவமுனி பிரமா புரம்வாழ்
பொற்பகவுணியர் பெருமா னுருவாய் வருவோனே

சத்த முடையஷண் முகனே குகனே
வெற்பி லெறிசுட ரயிலா மயிலா
சத்தி கணபதி யிளையா யுளையா யொளிகூறுஞ்
சக்ர தர அரி மருகா முருகா
உக்ர இறையவர் புதல்வா முதல்வா
தட்ப முளதட வயலூ ரியலூர் பெருமாளே.

11

முலைம றைக்கவும் வாசலி லேதலை
மறைய நிற்கவும் ஆசையு ளோரென
முகிழ்ந கைச்சிறு தூதினை யேவவு முகமோடே
முகம முத்தவும் ஆசைகள் கூறவு
நகம முத்தவும் லீலையி லேயுற
முறைம சக்கவும் வாசமு லாமல ரணைமீதே

கலைநெ கிழ்க்கவும் வாலிப ரானவர்
உடல்ச ளப்பட நாள்வழி நாள்வழி
கறைய ழிக்கவு நானென வேயணி விலையீதே
கடிய சத்திய மாமென வேசொலி
யவர்க்கொ டப்பண மாறிட வீறுடு
கடுக டுத்திடு வாரொடு கூடிய தமையாதோ

மலையை மத்தென வாசுகி யேகடை
கயிறெ னத்திரு மாலொரு பாதியு
மருவு மற்றது வாலியு மேலிட அலையாழி
வலய முட்டவொ ரோசைய தாயொலி
திமிதி மித்திமெ ஞவெழ வேயலை
மறுகி டக்கடை யாவெழ மேலெழு மமுதோடே

துலைவ ருத்திரு மாமயில் வாழ்வுள
வயலை யற்புத னேவினை யானவை
தொடர றுத்திடு மாரிய கேவலி மணவாளா
துவள்க டிச்சிலை வேள்பகை வாதிரு
மறுவொ ரெட்டுட னுயிர மேலொரு
துகள றுத்தணி யாரழ காசுரர் பெருமாளே.

12

மேகலை நெகிழ்த்துக் காட்டி வார்குழல் விரித்துக் காட்டி
வேல்விழி புரட்டிக் காட்டி யழகாக
மேனியை மினுக்கிக் காட்டி நாடக நடித்துக் காட்டி
வீடுக ளழைத்துக் காட்டி மதராசன்

ஆகம முரைத்துக் காட்டி வாரணி தனத்தைக் காட்டி
யாரொடு நகைத்துக் காட்டி விரகாலே
ஆதர மனத்தைக் காட்டி வேசைகள் மயக்கைக் காட்ட
ஆசையை யவர்க்குக் காட்டி, யழிவேனோ

மோகன விருப்பைக் காட்டி ஞானமு மெடுத்துக் காட்டி
மூதமிழ் முனிக்குக் கூட்டு குருநாதா
மூவுல களித்துக் காட்டி சேவலை யுயர்த்திக் காட்டு
மூரிவில் மதற்குக் காட்டு வயலூரா

வாகையை முடித்துக் காட்டி கானவர் சமர்த்தைக் காட்டி
வாழ்மயில் நடத்திக் காட்டு மிளையோனே
மாமலை வெதுப்பிக் காட்டி தானவர் திறத்தைக் காட்டி
வானவர் சிரத்தைக் காத்த பெருமாளே.

13

வாளின் முனையினு நஞ்சினும் வெஞ்சம
ராஜ நடையினு மம்பதி னும்பெரு
வாதை வகைசெய்க ருங்கணு மெங்கணு மரிதான
வாரி யமுதுபொ சிந்துக சிந்தசெ
வாயு நகைமுக வெண்பலு நண்புடன்
வாரு மிருமெனு மின்சொலு மிஞ்சிய பனிநீருந்

தூளி படுநவ குங்கும முங்குளி
ரார மகில்புழு கும்புனை சம்ப்ரம
சோதி வளர்வன கொங்கையு மங்கையு மெவரேனுந்
தோயு மளறெனி தம்பமு முந்தியு
மாயை குடிகொள்கு டம்பையுள் மன்பயில்
சூலையரையெதிர் கண்டும ருண்டிட லொழிவேனோ

காளி திரிபுரை யந்தரி சுந்தரி
நீலி கவுரிப யங்கரி சங்கரி
காரு ணியசிவை குண்டலி சண்டிகை த்ரிபுராரி
காதல் மனைவிப ரம்பரை யம்பிகை
ஆதி மலைமகள் மங்கலை பிங்கலை
கான நடனமு கந்தவள் செந்திரு அயன்மாது

வேளி னிரதிய ருந்ததி யிந்திர
தேவி முதல்வர்வ ணங்குத்ரி யம்பகி
மேக வடிவர்பின் வந்தவள் தந்தரு ளிளையோனே
வேலு மயிலுநி னைந்தவர் தந்துயர்
தீர வருள்தரு கந்தநி ரந்தர
மேலை வயலையு கந்துள நின்றருள் பெருமாளே.

14

விகட பரிமள ம்ருகமத இமசல
வகிர படிரமு மளவிய களபமு
மட்டித்தி தழ்த்தொடைமு டித்துத்தெ ருத்தலையில்
உலவி யிளைஞர்கள் பொருளுட னுயிர்கவர்
கலவி விதவிய னரிவையர் மருள்வலை
யிட்டுத்து வக்கியிடர் பட்டுத் தியக்கியவர்
விரவு நவமணி முகபட எதிர்பொரு
புரண புளகித இளமுலை யுரமிசை
தைக்கக் கழுத்தொடுகை யொக்கப்பி ணித்திறுகி யன்புகூர

விபுத ரமுதென மதுவென அறுசுவை
அபரி மிதமென இலவிதழ் முறைமுறை
துய்த்துக்க ளித்துநகம் வைத்துப்ப லிற்குறியின்
வரையு முறைசெய்து முனிவரு மனவலி
கரையு மரிசன பரிசன ப்ரியவுடை
தொட்டுக்கு லைத்துநுதல் பொட்டுப்ப டுத்திமதர்
விழிகள் குழைபொர மதிமுகம் வெயர்வெழ
மொழிகள் பதறிட ரதிபதி கலைவழி
கற்றிட்ட புட்குரல்மி டற்றிற்பயிற்றிமடு வுந்திமூழ்கிப்

புகடு வெகுவித கரணமு மருவிய
வகையின் முகிலென இருளென வனமென
ஒப்பித்த நெய்த்தபல புட்பக்கு ழற்சரிய
அமுத நிலைமல ரடிமுதல் முடிகடை
குமுத பதிகலை குறைகலை நிறைகலை

சித்தத்த முத்தியது வர்க்கத்து ருக்கியொரு
பொழுதும் விடலரி தெனுமநு பவமவை
முழுது மொழிவற மருவிய கலவியி
தத்துப்ரி யப்படாந டித்துத் துவட்சியினில் நைந்துசோரப்

புணரு மிதுசிறு சுகமென இகபரம்
உணரு மறிவிலி ப்ரமைதரு திரிமலம்
அற்றுக்க ருத்தொருமை யுற்றுப்பு லத்தலையில்
மறுகு பொறிக்ழல் நிறுவியெ சிறிதுமெய்
உணர்வு முணர்வுற வழுவற வொருஜக
வித்தைக்கு ணத்ரயமும் நிர்த்தத்து வைத்துமறை
புகலு மநுபவ வடிவினை யளவறு
அகில வெளியையு மொழியையு மறிசிவ
தத்வப்ர சித்திதனை முத்திச் சிவக்கடலை யென்று சேர்வேன்

திகுட திகுகுட திகுகுட திகுகுட
தகுட தகுகுட தகுகுட தகுகுட
திக்குத்தி குத்திகுட தக்குத்த குத்ததட
டுமிட டுமிமிட டுமிமிட டுமிமிட
டமட டமமட டமமட டமமட
டுட்டுட்டு டுட்டுமிட டட்டட்ட டட்டமட
திகுர்தி திகுதிகு திகுகுர்தி திகுகுர்தி
தகுர்தி தகுதகு தகுகுர்தி தகுகுர்தி
திக்குத்தி குத்திகுர்தி தக்குத்த குத்தகுர்தி என்றுபேரி

திமிலை கரடிகை பதலைச லரிதவில்
தமர முரசுகள் குடமுழ வொடுதுடி
சத்தக்க ணப்பறைகள் மெத்தத்தொ னித்ததிர
அசுரர் குலஅரி அமரர்கள் ஜயபதி
குசல பசுபதி குருவென விருதுகள்
ஒத்தத்தி ரட்பலவு முற்றிக்க லிக்களழு
சிகர கொடுமுடி கிடுகிடு கிடுவென
மகர சலநிதி மொகுமொகு மொகுவென
எட்டுத்தி சைக்களிறு மட்டற்ற றப்பிளிற நின்றசேடன்

மகுட சிரதலம் நெறுநெறு நெறுவென
அகில புவனமும் ஹரஹர ஹரவென
நக்ஷத்ர முக்கிவிழ வக்கிட்ட துட்டகுண
நிருதர் தலையற வடிவெனு மலைசொரி
குருதி யருவியின் முழுகிய கழுகுகள்
பக்கப்ப முத்தவுடல் செக்கச்சி வத்துவிட
வயிறு சரிகுடல் நரிதின நிணமவை
எயிறு அலகைகள் நெடுகிய குறளிகள்
பக்ஷித்து நிர்த்தமிட ரக்ஷித்த லைப்பரவி யும்பர்வாழ

மடிய அவுணர்கள் குரகத கஜரத
கடக முடைபட வெடிபர எழுகிரி
அற்றுப்ப றக்கவெகு திக்குப்ப டித்துநவ
நதிகள் குழைதர இபபதி மகிழ்வுற
அமர்செய் தயில்கையில் வெயிலெழ மயில்மிசை
அக்குக்கு டக்கொடிசெ ருக்கப்பெ ருக்கமுடன்
வயலி நகருறை சரவண பவகுக
இயலு மிசைகளு நடனமும் வகைவகை
சத்யப்ப டிக்கினித கஸ்த்யர்க்கு ணர்த்தியருள் தம்பிரானே.

15

அரிமரு கோனே நமோவென் றறுதுதியிலானே நமோவென்
றறுமுக வேளே நமோவென் றுனபாதம்
அரகர சேயே நமோவென் றிமையவர் வாழ்வே நமோவென்
றருண சொரூபா நமோவென் றுனதானை

பரிபுர பாதா சுரேசன் றருமக ணுதா வராவின்
பகைமயில் வேலா யுதாடம் பராநாளும்
பகர்தலி லாதானை யேதுஞ் சிலதறி யாவேழை நானுன்
பதிபசு பாசோப தேசம் பெறவேணும்

கரதல சூலாயு தர்முன் சலபதி போலார வாரங்
கடினசு ராபான சாமுண் டியுமாடக்
கரிபரி மேலேறு வானுஞ் செயசெய சேனு பதீயென்
களமிசை தானேறி யேயஞ் சியசூரன்

குரல்விட நாய்பேய்கள் பூதங் கழுக்கள் கோமாயு காகங்
குடல்கொள வேபூச லாடும் பலதோளா
குடதிசை வாராழி போலும் படர்ந்தி காவேரி சூழுங்
குளிர்வய லூரரச மேவும் பெருமாளே.

16

ஆரமுலை காட்டி மாரகலை காட்டி
யாடையணி காட்டி அநுராக
ஆலவிழி காட்டி ஓசைமொழி காட்டி
ஆதரவு காட்டி எவரோடும்

ஈரநகை காட்டி நேரமிகை காட்டி
யேவினைகள் காட்டி யுறவாடி
ஏதமயல் காட்டு மாதர்வலை காட்டி
யீடழிதல் காட்ட லமையாதோ

வீரவப ராட்டு சூரர்படை காட்டில்
வீழனலை யூட்டி மயிலூர்தி
வேலையுறை நீட்டி வேலைதனி லோட்டு
வேலவிளை யாட்டு வயலூரா

சேரமலை நாட்டில் வாரமுடன் வேட்ட
சீலிகுற வாட்டி மணவாளா
தேசுபுகழ் தீட்டி யாசைவரு கோட்டி
தேவர்சிறை மீட்ட பெருமாளே.

17

இகல்கடின முகபடவி சித்ரத்து திக்கைமத
மத்தக்க ளிற்றையெதிர்
புளகதன மிளகஇனி தெட்டிக்க முத்தொடுகை
கட்டிப்பி ணித்திறுகி
யிதழ்பொதியி னமுதுமுறை மெத்தப்பு சித்துருகி
முத்தத்தை யிட்டுநக தந்தமரன

இடுகுறியும் வரையையுற நெற்றித்த லத்திடையி
லெற்றிக்க லக்கமுற
இடைத்துவள வுடைகழல இட்டத்த ரைப்பையது

தொட்டுத்தி ரித்துமிக
இரணமிடு முரணர்விழி யெரக்கக்க றுத்தவிழி
செக்கச்சி வக்கவளே செங்கைசோர
அகருவிடு ம்ருகமதம ணத்துக்க னத்தபல
கொத்துக்கு ழற்குலைய
மயில்புறவு குயில்ஞிமிறு குக்கிற்கு ரற்பகர
நெக்குக்க ருத்தழிய
அமளிபெரி தமளிபட வக்கிட்டு மெய்க்கரண
வர்க்கத்தி னிற்புணரு மின்பவேலை
அலையின்விழி மணியின்வலை யிட்டுப்பொ ருட்கவர
கட்டுப்பொ றிச்சியர்கள்
மதனகலை விதனமறு வித்துத்தி ருப்புகழை
யுற்றுத்து திக்கும்வகை
அபரிமித சிவஅறிவு சிக்குற்று ணர்ச்சியினில்
ரக்ஷித்த ளித்தருள்வ தெந்தநாளோ
திகுடதிகு தகுடதகு திக்குத்தி குத்திகுட
தத்தித்த ரித்தகுட
செகணசெக சகணசக செக்கச்செ கச்செகண
சத்தச்ச கச்சகண
திகுதிகுர்தி தகுதகுர்த திக்குத்தி குத்திகுர்தி
தக்குத்த குத்தகுர்த திங்குதீதோ
திரிரிதிரி தரிரிதரி தித்தித்தி ரித்திரிரி
தத்தித்த ரித்தரிரி
டிகுடடகு டகுடடிகு டிட்டிட்டி குட்டிகுடி
டட்டட்ட குட்டகுட
தெனதிமிர்த தவில்மிருக டக்கைத்தி ரட்சலிகை
பக்கக்க ணப்பறைத வண்டைபேரி
வகைவகையின் மிகவதிர வுக்ரத்த ரக்கர்படை
பக்கத்தி னிற்சரிய
எழுதுதுகில் முழுதுலவி பட்டப்ப கற்பருதி
விட்டத்த மித்ததென
வருகுறளி பெருகுகுரு திக்குட்கு ளித்தழுது
தொக்குக்கு னிப்புவிட வென்றவேலா

வயலிநகர் பயில்குமர பத்தர்க்க நுக்ரகவி
சித்ரப்ர சித்தமுறு
அரிமருக அறுமுகவ முக்கட்க ணத்தர்துதி
தத்வத்தி றச்சிகர
வடகுவடில் நடனமிடு மப்பர்க்கு முத்திநெறி
தப்பற்று ரைக்கவல தம்பிரானே.

18

இலகு முலைவிலை யசடிகள் கசடிகள்
கலைகள் பலவறி தெருளிகள் மருளிக
ளெயிறு கடிபடு முதடிகள் பதடிகள் எவரோடும்
இனிய நயமொழி பழகிக ளழகிகள்
மடையர் பொருள்பெற மருவிகள் கருவிகள்
யமனு மிகையெனவழி தருமுழிதரும் விழிவாளால்

உலக மிடர்செயு நடலிகள் மடலிகள்
சிலுகு சிலரொடு புகலிக ளிகலிக
ளுறவு சொலவல துரகிகள் விரகிகள் பிறைபோல
உகிர்கை குறியிடு கமுகிகள் சமுகிகள்
பகடி யிடவல கபடிகள் முகடிகள்
உணர்வுகெடும் வகைபருவி களுருவிக ளுறவாமோ

அலகை புடைபட வருவன பொருவன
கலக கணநிரை நகுவன தகுவன
அசுரர் தசைவழி நிமிர்வன திமிர்வன பொடியாடி
அலரி குடதிசை யடைவன குடைவன
தரும வநிதையு மகிழ்வன புகழ்வன
அகில புவனமு மரகர கரவென அமர்வேள்வி

திலத நுதலுமை பணிவரு செயமகள்
கலையி னடமிட வெரிவிரி முடியினர்
திரள்ப லுயிருடல் குவடுக ளெனநட மயிலேறிச்
சிறிது பொழுதினி லயில்விடு குருபர
அறிவு நெறியுள அறுமுக இறையவ
த்ரிசிர கிரியயல் வயலியி லினிதுறை பெருமாளே.

வயலூர் பாதை

திருச்சிராப்பள்ளி மெயின்காட்கேட்டிலிருந்து சுமார் ஐந்து மைல் தூரத்தில் வயலூர் கோயில் அமைந்திருக்கிறது.

சோமரசம்பேட்டை, வயலூர், முள்ளிக்கரும்பூர் ஆகிய இடங்களுக்குச் செல்லும் நகரப் பேருந்துகளில் வயலூர் ஆலயத்திற்குச் செல்லலாம்.

திருச்சி புத்தூர் வண்டி நிலையத்திலிருந்து மேற்கே வயலூரை நோக்கி சாலை செல்லுகிறது. செந்நெல் வயல் களுக்கு மத்தியில் வயலூருக்குச் சாலை அமைந்திருக்கிறது.

வழியில் பிரசித்தி பெற்ற உய்யக்கொண்டான் உஜ்ஜீவ நாதர் ஆலயம் இருக்கிறது. சிறிய மலைமீது சிறப்பாக அமைந்த சிவன் கோயில் இது. திருக்கோயிலின் தென்புற மதில்சுவற்றை யொட்டியே வயலூர் சாலை செல்லுகிறது.

சோமரசம்பேட்டை என்னும் பெரிய கிராமம் இங்கு அமைந்திருக்கிறது. சிறப்பான, வளமான கிராமம் இது.

வழியில் சாலைக்கு அருகே வளைந்து வளைந்து வரும் வாய்க்காலுக்கு உய்யக்கொண்டான் வாய்க்கால் என்றுபெயர். சர்ப்பம் போல வளைந்து வளைந்து செல்லுவதால் சர்ப்பநதி என்றும் மக்கள் இதனைச் சொல்லுகிறார்கள்.

குமாரவயலூருக்கு அதவத்தூர் சாலையிலிருந்து வடக்குப் பக்கம் பாதை பிரிகிறது. இவ்விடத்தில் கன்னிமார் கோயில் பதிவு அமைந்திருக்கிறது.

வயலூர் ஒரு அழகிய கிராமம். ஊராட்சி மன்றம், அஞ்சல் நிலையம் ஆகியவை அமைந்திருக்கின்றன. ஆலயத்துக்கு வருவோர் தங்கியிருக்க விடுதிகள் இருக்கின்றன. ஆலயத்தினரின் மேற்பார்வையில் விடுதிகள் குறைந்த வாடகைக்கு விடப்படுகின்றன.

திருக்கோயில் வழிபாட்டுக்கு வருவோர்க்கு வேண்டிய சாமான்கள் விற்பனை செய்யும் கடைகளும் இங்கு இருக்கின்றன. இராமலிங்க சுவாமியின் பெயரால் நடைபெற்று வரும் அநாதை வித்யாலயம் ஒன்றும் இங்கு சிறப்புடன் நடத்தப்பட்டு வருகிறது.

சேந்தன்காரி என்பவன் இங்கு இறைவியையே தன் மகளாக நினைத்து இவ்வூர் இறைவனுக்குத் திருமணம் செய்வித்தான் என்று கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

நல்ல புத்திர சந்தானம் பிறக்கவேண்டும் என்று விரும்பும் பக்தர்கள் இங்கு தம்மக்களுக்கு திருமணம் செய்விக்கிறார்கள்.

கோயிலுக்கு எதிர்புறம் இருப்பது சக்தி தீர்த்தம். வயலூர் முருகன் தன் வேல்கொண்டு திருக்குளம் அமைத்து தாய் தந்தையரை வழிபட்டதால், இத்தீர்த்தம் புனிதம் நிறைந்ததாகப் போற்றப்படுகிறது.

வன்னி தீர்த்தம் மண்டபத்துள்ள ஒரு கிணற்றின் தீர்த்தம். அது இப்பொழுது மூடப்பட்டு விட்டது.

வயலூரின் ஸ்தலவிருக்ஷம் வன்னிமரம். தேரடியான் கோயில் தெப்பக்குளத்தின் கரையில் இருப்பது கிராம தேவதை கோயிலாகவும், சித்தர்கள் தங்கி சித்தி பெற்ற சத்தான நிலமாகவும் விளங்குகின்றது.

கந்தர் சஷ்டி விரதம் இருப்பவர்கள் விரத காலத்தில் வயலூரில் தங்கியிருந்து விரதத்தை முடிப்பது உத்தமமான செயலாக மதிக்கிறார்கள்.

அக்கினிப் பிழம்பாக வயலூர் அக்கினீஸ்வரர் விளங்குவதால் பிரதோஷ காலங்களில் வயலூர் கோயில் தரிசனம் பவித்திரமானது.

முத்திப்பேற்றை விரும்பும் பக்தர்களுக்கு வயலூர் க்ஷேத்திரம் சொர்க்கத்தின் வாயிலாக அமைந்திருக்கிறது.

வயலூர் நடராஜர் சுந்தரதாண்டவமூர்த்தி தரிசனம் சித்தத்திற்கு உறுதியை தரும் சத்ய சொரூபமாகும்.

வயலூர் பொய்யாக் கணபதி, தகுதி அறிந்து தக்கது தந்து அருளும் தயாபர மூர்த்தமாகும்.

வாக்குக்கொருவராயும் வளர் தமிழ்மொழிக்கு ஒரு கிளியாகவும் நின்று விளங்கும் அருணகிரி சுவாமிக்கு இங்கு சந்நிதி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

முத்துக்குமாரசாமியின் சந்நிதியும், முருகப்பெருமான் சந்நிதியும் அன்பர்கள் குறைதீர்க்க, அருள் வழங்க கலியுகத்திலும்கூட, கண்கண்ட தெய்வமாக அற்புதங்கள் புரிந்தும், அதிசயங்கள் நிகழ்த்தியும், அடியார்கள்பால் கருணைபாலிக்கும் திருக்கோயில் வயலூர் திருக்கோயில் என்பதை நெஞ்சத்தில் நிறுத்த வேண்டுவோம்.



நிர்வாக அமைப்பும்-நெறிமுறையும்

வயலூர் திருக்கோயில் தமிழக ஹிந்து அறநிலைய ஆட்சித் துறையின் நேர் நிர்வாகத்திற்கு 1939-ஆம் ஆண்டு வந்தது. அறங்காவலர்களும், நிர்வாக அதிகாரியும் ஆலய நிர்வாகத்தை சிறப்புடன் நடத்தி வருகின்றார்கள்.

தற்பொழுது அறங்காவலர்கள் ஐவர். அதில் ஒருவர் அறங்காவலர் குழுவின் தலைவர். நிர்வாக அதிகாரி (முதல் நிலை), கண்காணிப்பாளர், குமாஸ்தா, பேஷ்கார், தட்டெழுத்தர், சேவகர்கள் ஆகியோர் ஆலயத்தில் சேவை செய்து செய்து வருகின்றார்கள்.

திருக்கோயில் நிர்வாகத்தில் அன்பு இல்லம் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் சுமார் 50 பெண் குழந்தைகள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு உணவு, உடை, கல்வி, இருக்க இடம் இவைகள் வழங்கப்பட்டுள்ளன.

சித்த வைத்திய சாலையும் இங்கு ஆலயத்தின் மேற்பார்வையில் நடைபெறுகிறது. வருடத்திற்கு சுமார் 10 ஆயிரம் ரூபாய் செலவில் மருந்து வழங்கப்பட்டு வருகின்றது. தினசரி மக்கள் வந்து மருத்துவ உதவி பெற்றுச் செல்கின்றார்கள்.

ஆலய ஊழியர்கள் குடியிருக்க குடியிருப்பு வசதி செய்ய ஒரு லட்சத்து தொன்னூறு ஆயிரம் ரூபாய் செலவில் மனைகள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. சுமார் 5 லட்சம் ரூபாய் செலவில் திருமண மண்டபம் ஒன்று புதிதாகக் கட்டவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

கும்பாபிஷேகத்திற்குப் பிறகு, பொய்யாக் கணபதி சன்னதிக்கும், முருகப்பெருமான் சன்னதிக்கும் பித்தளை தகடு போர்த்தப்பட்டிருக்கிறது.

ஆலயத்தில் வடக்குப் புறத்தில் புதிதாக வாயில் திறக்கப் பட்டிருக்கிறது. விருந்தினர் தங்கும் விடுதியின் மாடியில், விசாலமான அறை உருவாக்கப்பட்டிருக்கிறது.

வருடந்தோறும் கந்தர் சஷ்டி விழா மிக மிக சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

அறங்காவலர் குழுவில் உள்ளவர்கள் துடிப்பும், பக்தியும் உடையவர்கள். உற்சாகத்துடன் சேவை செய்து வருகின்றார் கள். இவர்களது சேவையால் பல அபிவிருத்திகள் ஏற்பட்டி ருக்கின்றன. வயலூர் ஒரு பிரார்த்தனை ஸ்தலம். நினைப்பது நடக்கும், கேட்டது கிடைக்கும் என்ற சேதி கேட்டு பலர் வந்து அருள் பெற்று பயன் அடைகிறார்கள்.

ஊமை வாய் திறந்து பேசிய வரலாறும், பெருநோய் தீர்ந்த வரலாறும் வயலூருக்கு அண்மையில் கிடைத்திருக் கின்றன.

ஒரு உதாரணம். கந்தர் சஷ்டி கழகத்திற்கு உறுப்பினர் கள் சேர்க்க ஈரோடு சுவாமியோடு அறங்காவலர் இருவர் மிக உற்சாகமாக ஈடுபட்டார்கள். அறங்காவலர் குழுவின் அப்போதைய தலைவர் அதவத்தூர் தருமலிங்கம் அவர்களின் உரமூட்டைகள் சுமந்த வண்டியும் மாடும் ஆற்றில் தவறி பெரு நஷ்டமடைந்தார். எனினும் முருகன் காரியத்தில் முன்வைத்த காலை பின்வைக்கமாட்டேன் என்று உற்சாகம் குறையாமல் வசூல் வேலையில் முனைந்தார்.

எந்த வயலுக்கு உரமிட திட்டமிட்டாரோ, அந்த வயல் உரமிடப்படாமலே நல்ல பலன் தந்து நஷ்டம் போன இடம் தெரியாமல் செய்தது. இது வயலூர் முருகன் கருணை என்பதை திட்டமாக நம்பலாம் அல்லவா?

இறைவன் பணியில் அப்பழுக்கு இல்லாமல் ஈடுபடும் போது ஏற்படுகின்ற சோதனையில் திடமாக இருப்பவர் களுக்கு சிறிதும் நஷ்டமில்லை என்பதை இந்த வரலாறு மெய்ப்பிக்கின்றது.

வயலூர் திருக்கோயிலில் நடைபெறும் அர்ச்சனை நெஞ்சம் உருக்குவதாக அமைந்திருக்கும். திரு. ஜம்புநாத சிவாச்சாரியார் அர்ச்சனையின் நாதம், தட்டுத் தடுமாறும் உள்ளங்களை இறைவன் சன்னதியில் ஒருமுகமாக்கும் ஆற்றல் படைத்தது என்பதை அனுபவித்தவர்கள் அறிவார்கள்.

சண்முக அர்ச்சனை செய்ய வயலூர் சிறந்த ஸ்தலம். பக்தி சிரத்தையோடு சன்னதியில் இருப்பவர்கள் அத்தனை பேருடைய உள்ளத்தையும் இறைவன் திருவடிக் கமலத்தில் இணைப்பது போல அறுவர் சுற்றி நின்று அர்ச்சிப்பது கண்கொள்ளாக் காட்சியாக அமையும்.

வாழ்வில் ஒரு தரமாவது வயலூரானை வந்து தரிசித்து இகத்தில் பரத்தைப் பெற்று இன்புற வாருங்கள்.

வயலூர் வள்ளல் வந்து கேட்பவர்களுக்கு இல்லையென்று சொல்லாது வழங்கும் வள்ளல். வயலூர் வள்ளல் அருகிருக்க அயலூரைத் தேடி அலைய வேண்டாம். வாருங்கள் வயலூருக்கு வற்றாது வழங்கும் வள்ளல் குமரப்பெருமான் குடி கொண்டிருக்கும் புனித ஆலயத்திற்கு என்று அன்புடன் வாரியார் சுவாமி அழைக்கும் அழைப்பு எத்தனை பொருள் பொதிந்தது என்பதை அனுபவித்துப் பாருங்கள்.

ஓம்

துதிப்பாடல்கள்

எண்ணு முகம் ஆறுடையாய் இன்கரமுந நாலுடையாய்
நண்ணு வயலூர் முருகா நாயடியேன்— மண்ணுலகில்
வாழ்வு மதியும் வளமும் வாய்க்கப் பெற்றெத்தகைய
தாழ்வு முளு தோங்க வருள் தா.

பண்கனிந்த நக்கீரர் பாட்டேற்ற நின் செவிகள்
என்கனிந்த என் புன் சொல் ஏற்றிடுமோ—விண்கனிந்து
பாடு புகழ்ப்பண் வயலூர்ப் பண்டிதனே வேல் முருகா
தேடு மெனக் கீவாய் திரு. —அமிர்தம் சுந்தரம் பிள்ளை

தென்னைப் பொழிலுங் கழனியுஞ்
சூழ்ந்த திருவயலூர்
மன்னைப் பரமனை மாணிக்க
வேலனை மங்கை வள்ளி
தன்னைக் கலந்த குமரனைக்
கண் டெண் தளையறுந் தேன்
என்னைக் கெடுக்கும் இடர்களெல்
லாம் சென்றிரிந் தனவே.

பாலும் பழமும் பருகிப்—
பருகிப் பருத்து நிற்கும்
தோலும் சதையுஞ் சதமென்
றிருந்தேன் துணை வியரும்
வேலும் மயிலும் விளங்கிட
வந்து வினை யறுத்தான்
மாலும் அயனுமாய் மன்னும்
குகனென் மனத் தகத்தே.

வயலூரா என்றே வழங்கிடுமின் காவல்
அயலேதும் இல்லை யறிவீர்!—புயலோடும்
குன்றம் பிளந்தெறிந்த கொற்றவேல் மாதுயராம்
குன்றம் பிளக்கும் குடைந்து. —கவிஞர் V. துரைசாமி, M.A.,

பொய்யாக்கணபதி

ஸஹானு ராகம். ஆதிதாளம்.

எள்ளாப் புகழ்பாடி எவ்வூர்ப்பதி நாடி
உள்ளாக் கடையேனை உய்யாற்றுதவாயோ
தெள்ளாச் செயல் தேர்வார் செய்யூர்க் கணநாதா
பொள்ளாத் திருமேனிப் பொய்யாப் பெருமானே.

(செய்யூர்—வயலூர்)

முருகப்பெருமான்

நாத விந்து கலாதி—என்ற மெட்டு. ஆதிதாளம்.

மழமா களிறே மடையேனும்
வள பாடு செயா துழலாமல்
குழனு விசையால் இசை யோதக்
குருவாய் வருவாய் அருள் வாயே.
கிழவோன் எனவே மலையேறிக்
கிறியால் விளையாடினை யோனே.
பழனு புரிவாழ் பழம் நீயே
+பழனு புரிவாழ் பெருமானே.

பழனுபுரி-பழனி. +பழனுபுரி-வயலூர். பழனம்-வயல். புரி-ஊர்.

அக்கினீஸ்வரர்

தோடி ராகம். ஆதிதாளம்.

கணி யெனத் தொடங்கியே
காழியூரர் சொல் காதலாய்ப்
பணியெனப் புனைந்த வா
பாதி மாதுறு பாகனே
திணி பொழிற் திருச்சிராப்
பள்ளி மேவிய தேவனே
அணி வயற் பதிக்குள்ளே
ஆதி அக்கினி ஈசனே.

—சென்னை சேதுராமன்

வயலூரைப் பார்

எடுப்பு

வயலூரைப் பார்த்தால் போதும் — நம்
வாழ்வினில் பகையோடும் நலஞ்சூழும் நாளும் (வயலூரை)

தொடுப்பு

மயிலாடி நெருங்கும் மோதும் — அதில்
மயங்கிடா பேருள்ளம் ஏதிங்கு கூறும் (வயலூரை)

முடிப்பு

தவிக்கின்ற ஊமைபலர் பேச — அந்தத்
தங்கவேல் முருகன்புரி விந்தையெதைச் சொல்ல ?
புவிக்குள்ளே அழகுதெய்வம் காண்பாய் — நெஞ்சில்
புலர்வோர்க்குள் நடமாடி மகிழ்வோனைச் சேர்வாய்
(வயலூரை)

வல்லமை பெருகுது

எடுப்பு

வயலூர் முருகன் அழகினி லேபுது
வல்லமை பெருகுதடா—நம்
வாழ்வியல் மலருதடா (வயலூர்)

தொடுப்பு

கயல்விழி மங்கையர் துணையினி லே அவன்
காதலும் தெரியுதடா—பக்திச்
சாதனை புரியுதடா (வயலூர்)

முடிப்பு

சூரனை வென்றதால் தெய்வா னைக்கவன்
சுகந்தரும் துணையானான்—வயலின்
ஆலோலம் பாடி அழைத்த குறத்தியின்
அன்பிலே இணையானான் !
வீரனும் அவனே; காவலன் அவனே
விரும்பும் ஆசானும் அவனே—தனி
ஆர்வமாய்த் துதித்தால் அணைத்திடும் தாயாய்
அமையும் தூயனும் அவனே (வயலூர்)

—திருச்சி பாரதன்

பொய்யாக் கணபதி

வையத்தார் தொழுதேத்தும் வயலூரெம் பதியதனில்
அய்யா என அடைந்த அருணகிரிக் கருள்தந்து
கொய்மா மலர்தூவிக் கும்பிடுவார் குறைதீர்க்கும்
பொய்யாக் கணபதியைப் புலனொன்றிச் சிந்திப்போம்.

ஆதிநாதர்

வித்தின்றி விளைவிக்கும் விழுப்பொருளாம் வயலூர்வாழ்
வித்தகனை ஆதியனை விரும்பி அன்பாய்ச்
சித்தரெலாம் பணிந்தேத்தும் செஞ்சுடர்நற் சடையானைச்
சித்தமது தானொன்றித் தேவர் போற்ற
பத்தரெலாம் ஞானதீர்த்தப் புனலாடிப் பண்ணூளும்
புலனொன்றித் தொழுதிடவே புகுந்த பேருய்
அத்தனென வீற்றிருக்கும் ஆதிநாதர் அருளோடும்
அரும்பொருளும் தாம்வழங்கப் பெறுவார் தாமே.

ஆதிநாயகி

நீரோங்கும் வயலூரில் நிலமோங்கும்
நெடுந்தென்னை நிறைந்த செந்நெல்
தாரோங்கும் படர்கதலி பண்ணோங்குந்
திசையெல்லாம் பரவி நின்று
பாரோங்கப் பலமுனிவர் பன்னாளும்
தவமியற்றும் பதியின் மிக்க
ஆரோங்கும் சடையான்தன் மகிழ்ஆதி
நாயகியே அருள்செய் யாயோ.

முருகன் துதி

வருந்தியுனை மிகத்தொழுத அருணகிரிக் கேவாழ்வு
அளித்திட்ட வயலூரா!
மருந்தெனவே யுனைநினைந்து பரிந்தார்க்கே யருள்சுரக்கும்
பன்னிருகைப் பெருமானே!
திருந்தியநான் மறையவர்கள் தினம்போற்றுந் திருக்குமரா!
தனிவாழ்வே! எளியவனேன்
அருந்துயர்க்கே யொருமருந்தாய் என்றுந்தான் ஆதரிப்ப
துன்கடனே அழகுவேலா.

—மு. ஆ. அருணசல முதலியார்

வயலூர் வள்ளல்

செந்தமிழ் கேட்டு இன்புறு புரவலன்
திருவயலூர் கொலு வமர்ந்து
மந்திரச் சொற்கள் பாவலர்க் கருளி
வாசகம் தன்னில் வந் தமர்வான்
தந்தையும் தாயர் தமக்கனு தினமும்
தவறிடா பூசனை புரிவோன்
சுந்தர வயலூர் செந்தமிழ் முருகன்
திருவடி சரண் புகுந்தோமே.

தெய்வகுஞ்சரி பாங்கில் மயிலும் தோன்றும்
திருமுகமே நம்பாலே உவந்து நோக்கும்
உய்வுதரும் திருவடியைக் கண்கள் நோக்கும்
உளம்விம்மி இருகரங்கள் இணைந்து கூப்பும்
மெய்யெல்லாம் விதிர்விதிர்க்கக் கண்கள் நீரை
மேனியெல்லாம் நனைந்தோட விட்டுஉவக்கும்
அய்யநின் சந்நிதியில் நிற்கும் போது
அடியவரின் உடலெல்லாம் கனலே ஏறும்.

நெஞ்சமெனும் நிலமதனை நஞ்சையாக்கி
நின்கருணை ரசமதனை நீராய்ப் பாய்ச்சி
அஞ்சலெனும் நின்பார்வை பயிரால் ஏற்றி
அங்கமெலாம் கனிந்துருக களையை நீக்கி
செஞ்சொல்லால் உரமேற்றி தீரா வேட்கை
திருவடியைச் சாருதற்கே ஞானமூட்டி
பஞ்சையென உலவுமிந்த அடியேன் தன்னை
பயனையடையச் செய்திட்டாய் வயலூர் வள்ளால்

—கவிதாமணி

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

குமாரவயலூர் : : திருச்சி வட்டம்.

முன்னாள் பணியாற்றிய செயல் அலுவலர்கள்

—0—

திருவாளர்கள் :—

1.	N. மருதமுத்து பிள்ளை	1945 to 1946
2.	T. N. ராஜகோபாலன்	8-9-47
3.	K. மாணிக்கம்	9-9-47 to 21-1-49
4.	சந்திரசேகரன்	23-1-49 to 3-2-49
5.	அய்யனாரப்பன்	3-2-49 to 19-12-50
6.	விஜயராகவன்	19-12-50 to 9-9-51
7.	கனகராஜன்	10-9-51 to 28-6-52
8.	சீனிவாசன்	21-11-52 to 25-11-54
9.	V. T. A. சேவுக பாண்டியன்	26-11-54 to 25-1-55
10.	முருகானந்தம்	26-1-55 to 12-10-55
11.	V. T. A. சேவுக பாண்டியன்	4-12-55 to 18-3-59
12.	M. C. பிள்ளை (சிதம்பரம் பிள்ளை) R.C. 1396/59. D. 3. 26-3-59.	19-3-59 to 17-11-59
13.	T. M. பெரியசாமி பிள்ளை	15-12-59 to 4-12-67
14.	A. சேதுரெத்தினம், B.A., R.c. 16443/67 A.3. 20-11-67.	4-12-67 to 11-8-71
15.	M. ராமசாமி	11-8-71 to 3-6-72
16.	வாசீகப்பெருமாள்	3-6-72 to 3-8-72 (கூடுதல் பொறுப்பு)

(அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில் மலைக்கோட்டை)

17. S. அரங்கசாமி 4–8–72 to 9–6–73

18. A. A. வெங்கடாசலம், B.A., 9–6–73 to 28–2–74

19. D. புருஷோத்தம ரெட்டியார் 28–2–74 to 23–3–74 (கூடுதல் பொறுப்பு)

(அருள்மிகு மத்யார்ஜுனேஸ்வரர் ஆலயம் பேட்டவாய்த்தலை)

20. இரா. சிவதேவு 23–3–74 to 5–5–76

21. ஜி. சோமசுந்தரம், B.Sc., 6–5–76 to 31–3–79

22. எம் செல்லச்சாமி, B.A., 1–4–79 to 5–2–82

23. கா. ஏகாம்பரநாதன், பி.ஏ., 6–2–82 to 5–10–83

24. N. தியாகராஜன், B.Com., 6–10–83 to 26–3–88

25. K. தியாகராஜன், B.Com., 26-3-88 முதல்

முன்னாள் பணியாற்றிய அறங்காவலர் குழுத்தலைவர்கள்

திருவாளர்கள் :-

1. A. வேதமூர்த்தி முதலியார், சோமரசம்பேட்டை 20 ஸ்ரீ
2. பரிமணம் நாடாவார், மேலவயலூர் 4 ஸ்ரீ
3. ராஜகோபால் அய்யர், திருச்சி 1913 to 1915
4. ரெத்தினசாமி தேவர், உறையூர் 1928 to 1930

5. முத்துக்கருப்ப நாடாவார், கீழவயலூர் 1931
6. சௌக்கார் தோட்டா ராதாகிருஷ்ணன், திருச்சி
1914 to 1938
7. க. அண்ணாமலை முத்திரியர், திருச்சி
1-12-1938 to 1945
8. T. நடராஜ பிள்ளை, திருச்சி
B.O. 419/27-12-45. 1-7-45. 1945 to 1948
9. M. பூர்ணத்தேவர், உறையூர்
1-7-1948 D. Dis 10115/53. 10-3-1954
10. S. மாணிக்கம் பிள்ளை 1-7-1948
11. S. M. தில்லைநாயகம் பிள்ளை 30-6-1953
12. ராஜரெத்தினம் பிள்ளை, திருச்சி 30-6-1957
13. A. S. லிங்கையன் செட்டியார், உறையூர் 7-7-1959
14. T. P. பாலசுப்பிரமணியம் பிள்ளை, திருச்சி 11-9-1960
15. ராஜரெத்தினம் பிள்ளை, திருச்சி 30-6-1957
16. A. S. லிங்கையன் செட்டியார், உறையூர்
13-8-64 to 6-5-72
17. அ. தருமலிங்கம் (அதவத்தூர்)
24-8-73 முதல் மே 76 வரை
18. எம். சுந்தரராஜன், எம்.ஏ., 11-3-81 to 5-2-84
19. எம். சுந்தரராஜன், எம்.ஏ., தக்கார் 6-2-84 to 15-12-87
20. எம். சுந்தரராஜன், எம்.ஏ.,
(தற்போதைய அறங்காவலர் குழுத்தலைவர்)
16-12-87 முதல்

தற்போதைய அறங்காவலர்கள்

1. M. ராசமாணிக்கம் 16-12-87 முதல்
2. A. கோவிந்தன் ,,

வயலூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி

திரிசிரபுரம் மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் இளமைக்கால மாணாக்கர் வயலூர் உபாத்தியாயர் சுந்தரம் பிள்ளை.

சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றியது வயலூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி. பத்துப் பாடற்கு ஒரு சந்தம் ஆகப் பத்து சந்தங்களைக் கொண்டது பதிற்றுப் பத்தந்தாதி.

சென்னை திருவான்மியூர் மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சா. நூல் நிலையத்தில் சுவடியாக இந்த பதிற்றுப் பத்தந்தாதி இருந்தது. தமிழக அறநிலையத்துறை வெளியிடும் திருக்கோயில் இதழ்களில் இந்நூல் வெளியிடப்பட்டது.

வயலூர் வரலாற்றில் இந்த அந்தாதியை சேர்த்து வெளியிட வேண்டுமென விருப்பம் எழுந்தது. பக்கக் கட்டுப்பாட்டின் காரணமாக நூல் முழுவதையும் வெளியிட இயலவில்லை.

இதனை உபகரித்த டாக்டர். உ.வே.சா. அவர்களின் பேரர் திரு. க. சுப்பிரமணிய அய்யர் அவர்களுக்கும் பிரதியெடுத்துதவிய பேரறிஞர். திரு. மு. கோ. இராமன் அவர்களுக்கும் அறநிலைய ஆணையர் அவர்களுக்கும், திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேல் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நூல் முழுவதும் வெளியிட இறைவன் திருவருள் உதவுமென நம்புகிறோம்.

வயலூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி

(காப்பு)

விநாயகர் துதி

மணியார் வனசத் திழிதேறல்
மடைவாய்ப் பெருகி யூற்றெடுக்கும்
அணியார் வயலூர்ப் பதிற்றுப்பத்
தந்தா தித்தார் அரும்புனத்துக்
கணியா கியமுத் துக்குமரக்
கடவுட் சரண மிசைசூட்டத்
திணியார் ஒருகோட் டைங்கரத்துத்
தேவ னடியைப் பணிவாமால்.

கருப்பண்ணசாமி துதி

மணிவளர்பாற் கடனிகராம் பெருஞ்செல்வக்
குடிமல்கு வயலூர் வேளைக்
கணிவளர்குன் றகவாணர் பூங்கொடிசேர்
கற்பகத்தைக் கருமஞ் சேபோற்
பணிவளர்வோன் மருகோனைத் துதிசெய்ய
இடையூறு படரா வண்ணம்
அணிவளர்தே ரடிவளரும் கருப்பண்ண
சுவாமிமலர் அடிகள் போற்றி.

அருணகிரி துதி

பொருணை யாமண் மடவார்பால்
பொருந்தி யழியு மென்போல்வார்
மருணை யாவின் கதியடையும்
வண்ணம் கடல்சூழ் வையகத்திற்
கருணை வடிவாய்த் திருப்புகழைக்
கார்த்தி கேயர்க் கினிதுரைத்த
அருண கிரியா ரிணையடிப்போ
தகத்தும் சிரத்தும் அமைத்திடுவாம்.

நூல்

பூவார் மறையோன் புனற்றுயில்வோன்
போற்று நுதற்கண் ணவற்கருள்செய்
தேவா வென்ன அஞ்சலிக்குந்
திறங்கொண் டறியா நாயேற்குக்
காவார் வயலூர்க் கரசேபூங்
கடப்பந் தொடையை யணிந்தவனே
தூவார் அயிலா நினைப்போற்றுந்
தொழிலின் றருள்வ துன்செயலே.

செயலொன் றறியா தரிவையர்கள்
சீவார் கழலை விரும்பியவர்
மயலிற் படிந்து தினந்தோறும்
வருந்தி யுழலும் மடநெஞ்சே
வயலூர் அமர்சண் முகவனிரு
மலர்த்தா ளுறநீ விரும்புவையேல்
புயலூர் தியன்முற் றேவரெலாம்
புகழுங் கதியீ குவன்மெய்யே.

மெய்யைச் சுமந்து பலகாலும்
வேலை யதனை ஐம்பொறிக்குச்
செய்யத் துணிந்த மானிடர்காள்
திரும்பிப் பிறவா தானந்தத்(து)
உய்யும் படிக்கு மருந்தொன்றுண்(டு)
உரைப்பேன் வயலூர் தனிலமர்ந்த
வையுண் கறைதங் கிடுவேலோன்
மலர்த்தா ளிதுநிச் சயமாமே.

ஆமாலையில் ஓட்டிய மாற்கன்று
ஆழி கொடுந்த தேவன்றுதற்
கோமாண் புடன்வக் தெனையாளும்
கோவே சுரும்பர் குழாமுளரித்

தேமாங் துழலும் வயலூர்வாழ்
தேவ தேவே யரிவையர்கண்
பூமா லையைக்கண் டஞ்சாமற்
புரிந்தே யருள்நின் பொன்னடியே.

(வேறு)

கண்ணுன்மணி பெய்யுங்கழை புடைசூழ்வயலூர்வாழ்
அண்ணுமறைப் பொருளேபரம் ஆனுய்என வுளத்தில்
எண்ணுதெழு பிறவிக்கிட ளுகித்துயர் ஏற்றிப்
புண்ணுக்கையைச் சுமந்தேற்குன தருளெங்ஙனம் புகலே

தலமோநெடுஞ் சலமோஅழல் தானேவளி யோசஞ்
சலமோவிய வெளியோமலர் அயன்சாற்றுறு மறையின்,
குலமோஇரு கதிரோஇவற் றெதுவென்றுனைக் குறிப்பேன்
நலமோங்கிய வயலூர்வளர் நம்பாஅருள் புரியே

(வேறு)

நாத னேயடிய வர்கட்க லற்புணரி
நீந்த நற்புணையெ னத்தரும்.
பாத னேவய னகர்க்குள்வாழ் குமர
பரம னேமறைகள் துதிசெயும்
நீத னேமகவ னைப்புரந்தருளு நிமல
னேகலச முனியை யாள்
வேத னேயடிய னுக்கு னைப்பணியும்
வேலை தந்தருள வேணுமே.

தவறி றந்திட மருந்து வாமதி
தருக்கண் மொய்த்த பொழிலிற்புகக
குவடு ரிஞ்சிடவு டற் குறைந் தெழில்
குலைந்து நெற்றிவிழி யண்ணல்பாற்
றவமிப் யற்றியுருப் பெற்றிடச் செய்வய
லூரமர்ந் திலகு சாமியே
பவமறுப் பனுல கத்தரேபிற கடவுளைப்பணிதல்
வெகு பரவமே.

(வேறு)

தலனெலாம் புகழ்வயலூர் தனையனுகி யந்தரத் தோர்
குலனெலாம் பணிவள்ளி நாயகனைக் கொண்டாடில்
பலனெலாம் அளிப்பன்விடும் பால்விக்குங் கடைநாளில்
நலனெலாம் வினவிவரும் நமன்பணிவன் பிணநெஞ்சே.

நெஞ்சத்து ளறிவாகி நிறைவானை நிறையெழில்சேர்
குஞ்சரி மணவாள னாகிவரு கோமானை
அஞ்சல்தவிர்த் தாட்கொண்ட அண்ணலைப்
பொன் ஆலயமாங்
கஞ்சமலர் சூழ்வயலூ ராலயத்திற் கண்டேனே.

(வேறு)

பரிகளி றிரத மொடுபதா தியையும்
படைத்தலை மணிகளை யெரியும்
திரிசல மரையிற் கலையென வுடுக்கும்
திண்ணிய வுலகினைப் புரக்கும்
அரசவாழ் வதனை விரும்பியைம் புலனை
அவித்திடாப் பணிசெயு நெஞ்சே
புரிசைசூழ் வயலூ ராற்கொரு கடிகை
யாயினும் பணிபுரிந் துய்யே.

பணிமதி யறுகும் புனையரன் வாம
பாகமா யிமயமங் கையரை
அணியுரச் சேர்த்த நுதற்கணா ருள்செய்
அப்பனே ஒப்பிலா மணியே
கனியினை துருவா யரும்புனத் திருந்த
கடவுளே பிறப்பெனுங் கொடிய
பிணியினுற் றளர்ந்தேற் கருள்செய் நல்
வயலூர் மேவிய பிரணவப் பொருளே.

கடல்பல அங்கை தனிலெடுத் தருந்துங்
கலசமா முனிக்குயர் ஞானந்
திடமுற வளித்த மௌனதே சிகனே !
தீதிலா மணிவிளக் கொளியே
தடநிறை வயலூர்த் தலைவனே கொடிய
தருவரைத் துணித்தவா அனையார்
குடநிகர் தனத்தை யருந்திடா தெற்குக்
கொடுத்தருள் பண்ணவர் கோவே.

அகத்தருஞ் சமய மென்னவும் தீமை
அடர்புறச் சமயமென் னவுமிச்
சகத்தவ ருரைக்கு மிருதிறப் பாலுட்
சைவமாச் சமயமுற் றம்போ
ருகத்தவன் கொளுமங் களிப்பில னன்றேற்
குறுவதி லோர்சிரந் தடிந்த
நகத்தவன் புதல்வ வயற்பதி யாநின்
நல்லடி காணப்பெற் றேனே.

(வேறு)

பெறுவார் நல்லோ ரில்லார்
பொல்லார் பிணநெஞ்சே
கறுவார் சூர்கொன் றும்பரைக்
காத்த கதிர்வேலான்
நறவார் நீபத் தாரணி
யண்ணல் நளினத்தாள்
உறுவார் மோக்கம் வயலூர்
மேவி உணர்வாயே.

வாயா லேத்திச் சென்னி
வணங்கி மலர்ப்பூமேல்
தோயாப் பாதத் தர்ச்சித்
துருகத் துணிவாயேல்

காயா வண்ணன் பணிவய
 லூர்கட வுட்பாற்போ
மாயா தோற்றம் அறுப்பன்
 இதுண்மை மடநெஞ்சே.

தகையா ரடியார்க் கருள்செய்
 பவஅந் தரளங்கொள்
நகையார் மயலிற் படுமெற்
 கருள்செய் நளினத்தோன்
சிகையார் முடியிற் கரமே,
 பொருதுந் திணியாதென்
குகையில் முனிவர்க் கரசே
 வயலூர்க் குணக்குன்றே.

குன்றேய் முலைவள் ளியர்வேட்
 கையினுற் கைகூப்பிச்
சென்றே நற்புன முற்றவ
 னப்பருள் சேயேசூர்
கொன்றே மத்துல கர்க்கருள்
 செய்தவ கோதுற்றே
பொன்றே னுக்கருள் வயலூர்
 மேவிய புகழோனே.

(வேறு)

புகழை வேண்டிப் பொறிவேட்கை யால்மனே
நிகளத் துற்ற வெனக்கு நிறஞ்செறி
யுகள பாத முதவு வயற்பதித்
துகளி லாமணி யேபரஞ் சோதியே.

சோதி யேநற் றுருவா மணியெனும்
ஆதி யேவய லூர அருந்தவர்
நீதி யேநற நீபத் தொடையநின்
பூதி யேதுமி லேற்கருள் பூணவே.

பராப ரச்சுட ராய்ப்படி மீதினிற்
சராச ரப்பொரு ளாகிய சண்முக
பராக மார்வய லூர்ப்படி யுற்றசீர்
வராகன் மாமரு கக்கழல் மன்னனே.

நித்தி லத்தைநி றைக்கும் நற்பது
மத்தின் கூட்டம் மலிவய லூரமுன்
அத்தி யேமுண் டவர்க்கருள் அப்பமான்
புத்தி ரித்தலை வாவெற் புரப்பையே.

இன்ப மாஎண்ணி ஏந்திழை யார்மயல்
துன்ப வாரியிற் றூங்கு மெனக்கருள்
மின்ப ராக மிலைந்த முளரியார்
பொன்ப ராவும் வயலூர்ப் புதியனே.

(வேறு)

செய்த தாமரை மலர டித்துணை
தெருளி றந்துபுன் முறுவல்முத்தெனத்
தைய லார்மயற் கடலி லேவிழுந்
தறுக ணற்கருள் புரிய யிற்படைக்
கைய-னேவா தாவிவில் வலனுயிர்
கழிய ஓதிய முனியை ஆண்டவா
வைய கம்பணிந் துருகு மாவயற்
பதியிற் மன்னவ வள்ளி கேள்வனே.

போதன் நாரணன் உருவ மாறிவிண்
போந்து மண்பிளந் தொப்பிலா மலர்ப்
பாத நாரமார் முடியுங் காணுைப்
பரம புத்திர பதும வாசமென்
காத நாற்றிசை பொலிவ யற்பதிக்
கந்த அந்தரர்க் கினிதளித்துறு
நீத நானெனு மம்மை யாளெனை
நிந்தி யர்தெரு ளெந்தை யண்ணலே.

(வேறு)

முருகவிழ் குறிஞ்சியிடை முந்துகனி யாகிக்
குருவள ரெழிற்குறமி னைப்புணருவு கோவே
தருவய னெருங்குபொழில் சாரும்வய லூரா
இருவரறி யான்மகவெ னக்கருள்செய் இன்றே.

இன்னல்தரு மேழ்பிறவி யெய்துழல்வை யென்றெற்
கன்னமிவர் நான்முகன னிக்கினு மலைக்கும்
நன்னயமில் சூர்க்கும்வலி நண்ணியதி தாமோ.
சொன்னவய லூரிலகு சூரர்குலம் வென்றோய்.

குலமலை நெருங்குயர் குறிஞ்சியர்கள் மின்பால்
நலமொழி மொழிந்தவ்விடம் நண்ணியவென் நாதா
கலபமயி லாவடிய னைக்கருணை வைத்தாள்
உலகமினி தேத்துவய லூர்மணிவி ளக்கே.

மணிகொள்முலை மங்கையர் வலைக்கணொரு தேரை
பணிவயி னடங்குபரி சாயுழல வந்தோ
பிணிமுக னிழைத்தது பிறங்குவய லூரா
அணியயில்கொ டென்றுய ரகற்றியரு ளாயே.

(வேறு)

கள்ளிழி கடம்பா போற்றி
கங்கையின் மைந்தா போற்றி
யெள்ளிடா தென்னை யாள்வாய்
இறைவனே போற்றி அன்போ
டுள்ளுவார்க் கின்ப நல்கும்
ஒருவனே வயலூர் வாழும்
வள்ளலே போற்றி போற்றி
மணிவிளக் கொளியே போற்றி.

ஒளியயிற் படையாய் போற்றி
　　உமையவள் தனயா போற்றி
அளியின முளரி யார்க்கும்
　　அரும்வயற் பதியா போற்றி
கிளிமொழி வள்ளி யாள்தன்
　　கேள்வனே போற்றி சற்றுந்
தெளிவிலா வென்னை யாள்வாய்
　　சேவகா போற்றி போற்றி.

கார்தவழ் கிரியும் வேரைக்
　　கம்மென நின்றமாவும்
சூர்முத லினிய அன்பர்
　　தோற்றமும் துணித்து வந்த
கூர்பெறு வேலா போற்றி
　　கொடியனை ஆள்உம் பர்க்குச்
சீர்தரு வயலூர் வாழும்
　　செந்துகிர் வண்ணு போற்றி.

செந்தில்வாழ் முருகா போற்றி
　　சிராமலைக் கந்தா போற்றி
பந்தம்விட் டென்னை யாள்வாய்
　　பழனியிற் குறவா பொன்னும்
மந்தரற் கருளும் சாமி
　　மலையிற்சண் முகனே போற்றி
கொந்தலர் வயலூர் முத்துக்
　　குமாரனே போற்றி.

போற்றியந் தரத்தோர் ஏத்தப்
　　புணரியை யருந்தி மைபோற்
தோற்றிய வரக்கர் தம்மைத்
　　துணித்தவன் றன்னை ஆண்டாய்
நாற்றிசை வணங்கும் வள்ளி
　　நாயகா போற்றி துன்பம்
மாற்றியெற் கருள்செய் தாள்வாய்
　　வயனகர் வடிவே போற்றி.

வடிவமர் கோர்ந்த மாதர்
மயலிற்பட் டுழலுந் தீய
கொடியனை ஆள்வாய் சந்தங்
குளிர்வயற் பதியா போற்றி
துடியிடை வாங்க வீங்கும்
துணைமுலைக் குறமின் பாற்போய்
முடிவனைத் திரந்த எங்கள்
முருகனே போற்றி போற்றி.

கன்மனத் துனது பாதக்
கஞ்சமென் றலரச் செய்வாய்
வின்மரு வியகல் வேணி
விமலன்றன் புத்திரா பாகார்
சொன்மலி குஞ்சரிக்கோர்
துணைவனே போற்றி போற்றி
தன்மமார் வயலூர் வாழுஞ்
சண்முகா போற்றி போற்றி.

படைவிழி இமைய மாதைப்
பங்கினி லிருத்தியை மாலி
விடையவர்க் கருளும் ஞான
வித்தகா போற்றி போற்றி
மடைவழி குமுதத் தேறல்
வயனகர்க் கரசே போற்றி
கடையனேன் றன்னை யாள்வாய்
கங்கைமூ வாளுய் போற்றி.

கங்கையின் மைந்தா வேதக்
கமலன்றன் சிரசிற் குட்டும்
அங்கையா பொதிகை வேந்தற்(கு)
அடிகளா வந்தாய் வீங்கும்
கொங்கைய ரிருவர்க் கின்பக்
கொழுநனே என்னை யாள்வாய்
பொங்கர்சூழ் வயலூ ரானே
போற்றிபூ வார் கழற்கே.

ஆதிவயலூர் ஆலயத்தின் ஆசாரவாசல்